REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
2023 ஒக்டோபர் 12 வியாழக்கிழமை

வரு. 91 இல. 242 | Thursday 12, October, 2023 | 20 பக்கங்கள் | 50/-




## சரவணராஜாவுக்கு எந்த உயிர் அச்சுறுத்தலும் இருக்கவில்லை

# திட்டம் தீட்டி வெளிநாடு சென்றுள்ள நீதிபதி



### மனைவி உட்பட 12 பேரிடம் வாக்குமூலம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

முல்லைத்தீவு முன்னாள் நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு எந்தவித உயிர் அச்சுறுத்தலோ அல்லது வேறு அச்சுறுத்தல்களோ கிடையாதென்றும் அவர் முன்னேற்பாடான திட்டத்துக்கமையவே வெளிநாடு சென்றுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் டிஜிட்டல் பிரிவு அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளது.

**பொலிஸ் மற்றும் CID விசாரணைகளில் பல திடுக்கிடும் தகவல்கள் கசிவு**

அந்தப் பிரிவு, அறிக்கையொன்றின் மூலம் அந்த விடயத்தை அரசாங்கத்துக்கு முன்வைத்துள்ளது. நீதிபதி செப்டெம்பர் 25 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்வதற்காகவே வெளிநாட்டுக்கான விடுமுறையொன்றை கோரியுள்ளதுடன் அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது. அவரது முன்னேற்பாட்டு திட்டத்துக்கிணங்க செப்டெம்பர் 24 ஆம் திகதி

06

## இந்திய அரசின் நிதி பங்களிப்புடன் மலையகத்தின் 10,000 வீட்டு திட்டம்

### புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி முன்னிலையில் கைச்சாத்து



**அமைச்சர் அலி சப்ரி, ஜீவன், இந்திய தூதர் பாக்லே பங்கேற்பு**

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், நேற்று (11) முக்கிய சந்திப்புகளில் ஈடுபட்டதுடன், ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில், ஆரம்பமாகவே 10 ஆயிரம் வீட்டு திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இலங்கை சார்பில் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்தியா சார்பில் கையொப்பமிட்டார்.

06

## எந்த நிகழ்ச்சிகளானாலும் வடக்கில் தேசிய கீதம் தமிழில் பாடப்பட வேண்டும்

### தனது வலுவான கருத்து இதுவென்கிறார் அமைச்சர் டக்ளஸ்



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் தமிழில் தேசிய கீதம் பாடப்படாதமை கவலையளிப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் (NVQ) கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு (10) யாழ். சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்நிகழ்வில் தேசிய கீதம் தமிழில் பாடப்படாததை சுட்டிக்காட்டினார்.

06

## மன்னார் தேசிய மீலாத் விழா - 2023 ஜனாதிபதி தலைமையில் வைபவம்

### பாதை அபிவிருத்தி, பொருளாதார மீள் எழுச்சிகளுக்கு நிதி



புத்தசாசன சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு முஸ்லிம் சமைய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் சேர்ந்து நடத்தும் இவ்வருட தேசிய மீலாத் விழா, எதிர்வரும் 22 இல், மன்னார் சிலாவத்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தியல் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மிகவும் பின் தங்கிய மன்னார் மாவட்டத்தில் தேசிய மீழாத் விழாவை அடிப்படையாகக் கொண்டு, அடுத்த ஒரு வருடத்தினுள் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

06

## நௌபர் மௌலவி உட்பட 24 பேருக்கு எதிரான விசாரணைகள் நேற்று ஆரம்பம்

### மூவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் விசாரணை

**(லோரன்ஸ் செல்வநாயகம்**



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத்தாக்குதல் நடத்துவதற்கு சதித் திட்டம் தீட்டியமை உள்ளிட்ட குற்றசாட்டின் பேரில், நௌபர் மௌலவி உட்பட 24 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்ட மாஅதிபர் தாக்கல் செய்த வழக்கின் சாட்சி விசாரணைகள் மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று ஆரம்பமானது.

அமல் ரணராஜா, நவரத்ன மாரசிங்க, தமித் தொட்டவத்த ஆகியோர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையிலேயே

06



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு வைபவம் நேற்று (11) கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் சிறப்பு விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து சிறப்பித்தனர். கல்வி அமைச்சருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்த போது பிடிக்கப்பட்ட படம்.

( யாழ் விசேட நிருபர்)

## வளர்ப்பு நாயை இருவர் உரிமை கோருவதால் DNA பரிசோதனைக்கு நீதிமன்றம் உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொமனேரியன் ரக வளர்ப்பு நாயொன்றுக்காக இரண்டு தரப்பினர் உரிமைகோரும் நிலையில் அந்த வளர்ப்பு நாயின் DNA பரிசோதனை மேற்கொண்டு அந்த அறிக்கையை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு கிளிநொச்சி மஜிஸ்திரேட் நீதவான் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். கிளிநொச்சி பரந்தன் பிரதேசத்திலுள்ள நபரொருவர் அதுதொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டில் தமது வளர்ப்பு நாய் காணாமற் போயுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அந்தநிலையில் சில தினங்களுக்குப்

06

## GCE A/L பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியானது



2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருந்த 2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை, பல தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை கருத்திற்கொண்டு எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு பிற்போடப்பட்டது. இதன்படி, இப்பரீட்சைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 04ஆம் திகதி முதல் நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி 2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான

06

## 2012 க்கு பின்னர் தோன்றும் அதிசய சூரிய கிரகணம்

### இலங்கை, இந்தியாவுக்கு தென்பட வாய்ப்பில்லை



2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் எதிர்வரும் சனிக்கிழமை அதிசய சூரிய கிரகணம் தோன்றவுள்ளது. இந்த அதிசய நிகழ்வைக் காண வானியலாளர்கள் ஆவலாய் உள்ளனர். இம்மாதம் சூரிய கிரகணம் மற்றும் சந்திர கிரகணம் தோன்றவுள்ளமை தொடர்பான விபரங்கள் வெளிவந்துள்ளன.

06

**03** வைரசால் பரவும் கண் நோய் பாடசாலை மாணவர்களும் பாதிப்பு
வீண் அச்சம் கொள்ள வேண்டாம்

## SLPP யிலிருந்து சென்றவர்கள் மீண்டும் எம்முடன் இணையலாம்

### தேர்தல்களுக்கும் தயாராகவே இருக்கிறோம்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட்டு பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துள்ளோர் மீண்டும் எம்முடன் ஒன்றிணையலாமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் (10) சந்திப்பொன்று நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும்

06

## 09 மாதங்களில் முகநூல் தொடர்பில் சுமார் 23,534 முறைப்பாடுகள் பதிவு

### 70 வீத முறைப்பாடுகள் பெண்களால் தெரிவிப்பு

முகநூல் தொடர்பில் இவ்வாண்டின் முதல் 09 மாதங்களில் 23,534 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கணினி அவசர பதிலளிப்பு அமைப்பின் சிரேஸ்ட தகவல் தொழினுட்ப பாதுகாப்பு பொறியியலாளர் சாருக் கெமுனுபொல தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 70 வீதமானவை பெண்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு பெற்று தருவதாக இணைய வழியில் இடம்பெற்ற மோசடிகளே அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ளன.

மேலும் பிரமிட் கொடுக்கல் வாங்கல் தொடர்பான மோசடிகளும் அதிக எண்ணிக்கையில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போலியான முகநூல் கணக்கு உருவாக்கியமை,

06

## படகை கைவிட்டு தப்பி ஓடிய இலங்கையர் இருவர் கைது

### மண்டபம் பகுதியில் தமிழக பொலிஸார் அதிரடி

**மன்னார் குறூப் நிருபர்**



இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே முனைக்காடு கடற்கரை பகுதியில் செவ்வாய்க்கிழமை (10) சந்தேகத்துக்கிடமாக இலங்கை கண்ணாடியிழை படகை கைவிட்டு, மர்ம நபர்கள் இருவர் தப்பி ஓடியதாக அப்பகுதி மீனவர்கள் பொலிஸாருக்கு

06

## நசீர் அஹமட்டின் வெற்றிடத்திற்கு அலி சாஹிர் மௌலானா நியமனம்

### தேர்தல் ஆணைக்குழு வர்த்தமானி அறிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நஸீர்அஹமட் பதவியிழந்துள்ளதால்,அந்த வெற்றிடத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவை நியமிப்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு மூலம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1981 /1ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் 64 (2) உப பிரிவிற்கு இணங்க,தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை

06

## எரிபொருள் பவுஸரின் சில்லுக்குள் சிக்கி 10 வயது சிறுமி உயிரிழப்பு

### அநுராதபுரம் தலாவையில் கோரச் சம்பவம்

**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**



அநுராதபுரம், தலாவ நகர மத்தியில் அமைந்துள்ள சுற்றுவட்டத்தில் (10) எரிபொருள் பவுசர் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் பத்து வயது சிறுமி ஸ்தலத்தில் பலியானார்.

அநுராதபுரம் பாதனிய வீதியில்

06

## பல்துறை கலைஞன் ஜக்சன் அந்தனியின் இறுதிக் கிரியை இன்று



இலங்கையின் பல்துறைகளிலும் திறமை காட்டிய கலைஞனான ஜக்சன் அந்தனியின் இறுதி கிரிகைகள் ராகம புனித பேதுரு பாவுலு தேவாலயத்தில் இன்று (12) நடைபெறவுள்ளது.

பொரளை தனியார் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் அவரது பூதவுடல் கடவத்த ராகம வீதி, இலக்கம் 90A , 58 இல்லத்திற்கு நேற்று (11) கொண்டுவரப்பட்டதோடு இறுதி அஞ்சலிக்காக அங்கு வைக்கப்பட்டிருந்தது.

06

ஐக்கிய இராச்சியத்தின் இந்து பசுபிக் அலுவல்கள் தொடர்பான

# இராஜாங்க அமைச்சர் மற்றும் தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு





இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் (IORA) கூட்டத்தில் பங்கேற்க நாட்டிற்கு வருகை தந்திருக்கும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் இந்து பசுபிக் அலுவல்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் ஏன் மெரி டெவிலியன் (AnneMarie Trevelyan) மற்றும் தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் கலாநிதி நலேட் பெண்டோர் (Dr. Naledi Pandor) ஆகியோர் ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (10) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது முதலாவதாக இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் இந்து பசுபிக் அலுவல்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் ஏன் மெரி டெவிலியன் (AnneMarie Trevelyan)

ஆகியோருக்கிடையிலான சந்திப்பில் பொருளாதார மீட்சி உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான சட்டமூலம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலம் மற்றும் புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டமூலம் உள்ளிட்ட சட்டவாக்க செயற்பாடுகளில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டன.

இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கான திட்டம் தொடர்பில் இராஜாங்க அமைச்சருக்கு தெளிவூட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய இராஜ்ஜியத்தின் பல்கலைக்கழகங்களும் இதனோடு இணைந்துகொள்ளுமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதனையடுத்து தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் கலாநிதி நலேட் பெண்டோர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மேம்பாட்டிற்கு தென்னாபிரிக்கா வழங்கிய ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி அமைச்சரிடத்தில் நன்றி தெரிவித்தார். அது தொடர்பிலான சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் வருட இறுதிக்குள் அதனை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கமான (IORA) வின் தலைமைத்துவத்தை வகிக்கும் காலப்பகுதியில் இந்து சமுத்திரத்தின் தனித்துவத்தை வலுப்படுத்துவதே இலங்கையின் நோக்கமாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

வருடாந்தம் இரு தடவைகள் உறுப்பு நாடுகளின் தலைவர்களின் கூட்டமொன்றை நடத்த வேண்டுமெனவும், இந்து சமுத்திரம் தனித்துவமான அரசியல் அடையாளத்தை கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இஸ்ரேல் ஹமாஸ் போராட்டம் தொடர்பில் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இஸ்ரேல் பாலஸ்தீனத்துக்கு இடையில் சமாதானத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற தென்னாபிரிக்காவின் கருத்துக்கு தான் ஆதரவளிப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் இலங்கை மற்றும் தென்னாபிரிக்காவுக்கு இடையிலான ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்திக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் தினுக் கொலம்பகே ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# தேசிய லொத்தர் சபையினால் புதிய லொத்தர் சீட்டுக்கள் அறிமுகம்



தேசிய லொத்தர் சபையின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, புதிய லொத்தர் சீட்டுகளான 'மெகா மில்லியனர்ஸ்' மற்றும் 'மெகா 60' சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. அத்துடன் வெற்றியாளர்களுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (10) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

கொவிசெத்த 3471 மற்றும் 3477 சீட்டிழுப்புகளின் போது வெற்றியாளர்களாக தெரிவாகிய அதுருகிரிய எம்.ஏ. ரசாஞ்சலி பெரோரா (ரூ. 61,271,108.00) மற்றும் மத்துகம கே. சமிந்த ஜெயவிக்ரம (ரூ. 60,503,772.80) ஆகியோருக்கு காசோலைகள் இதன்போது வழங்கப்பட்டன.

தேசிய லொத்தர் சபையின் தலைவர் கலாநிதி சமீர சி. யாப்பா அபேவர்தன, பணிப்பாளர் கலாநிதி கித்சிறி மஞ்சநாயக்க மற்றும் பொது முகாமையாளர் சட்டத்தரணி ஹஷினி ஜயசேகர மற்றும் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நகர்வலம்



# சீனாவின் 'ஷி யான் 6' கப்பல் நவம்பரில் நாட்டுக்கு வர அரசாங்கம் அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

## ராஜதந்திர சிக்கல்கள் ஏற்படாது; நிலைமைகளில் அவதானம்

சீனாவில் 'ஷி யான் 6' கப்பல் இலங்கைக்கு வருவதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

மேற்படி கப்பல், இம்மாதத்தின் இறுதியில் நாட்டுக்கு வருவதற்கான அனுமதி கோரப்பட்டிருந்தது.இந்நிலையிலே இக்கப்பல் நவம்பரில் வருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கியுள்ள நேர்காணலிலே அமைச்சர் இந்த விடயங்களை வெளியிட்டார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சீனாவில் 'ஷூஷி யான் 6' கப்பல் இலங்கைக்கு வருவது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இந்நிலையில்

ஒக்டோபர் மாதத்தில் இங்கு வருவதற்கு இக்கப்பல் அனுமதி கோரப்பட்டிருந்தது. எனினும், இலங்கை அரசாங்கம் நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு வருவதற்கான அனுமதியையே வழங்கியுள்ளது.

இதற்குப் பின்னரும் இம்மாத இறுதியிலாவது வருவதற்கு அனுமதி கோரப்பட்ட போதும், ஆரம்பத்திலிருந்த நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் தொடர்ந்தும் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு சீனா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாடு. அந்நாட்டுடன் முக்கியமான தொடர்புகளை பேணி வருகிறோம். எனினும் அதற்கு சமமான வகையில் எமது நாடும் செயற்பட்டு வருகிறது.

அதனைக் கருத்திற் கொண்டே சிக்கல்கள் எதுவும் இடம்பெறாத வகையில் அந்த அகப்பல் இலங்கைக்கு வருவதற்கான காலத்தை அரசாங்கம் வழங்கியுள்ளது. இது சாதாரணமாக ஒருவர் நாட்டுக்கு வருவது போன்ற விடயமல்ல. அது தொடர்பில் எழக் கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும்.

உள்ளக விடயங்களை கவனத்திற்கொண்ட பின்னரே, இதற்கான திகதியை வழங்கியுள்ளோம். சுதந்திரமான நாடு என்ற வகையில் நாம் அவ்வாறு திகதியொன்றை தெரிவிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

# கம்பஹா மாவட்ட செயலகத்திற்கு முன்னால் நீர் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் அசௌகரியம்

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

## அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென கோரிக்கை

கம்பஹா மாவட்ட செயலகம் அமைந்துள்ள பிரதான சந்தியில் மழை நீர் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். கடந்த சில நாட்களாக பெய்த கடும்

அடைமழையின் காரணமாக கம்பஹா மாவட்ட செயலகத்துக்கு முன்னாலுள்ள பிரதான வீதியின் வடிகான்களில் நீர் நிரம்பி பிரதான வீதியில் மழை நீர் தேங்கியுள்ளது.

இதனால் குறித்த பிரதான சந்தியில் பொதுமக்கள் தமது பயணங்களை மேற்கொள்வதில் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். குறித்த இரு வடிகான்களில் பொலித்தீன் உறைகள், பிளாஸ்டிக் போத்தல்கள் உட்பட ஏனைய திண்மக் கழிவுகள் நிரம்பி இருந்ததால் இதனூடாக மழை நீர் ஓடிச் செல்ல முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கம்பஹா கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ள கம்பஹா மாவட்ட செயலகத்திற்கு தினந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் தமது அரச அலுவல்களுக்காக வந்து போகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால் பிரதான சந்தியில் பயணிக்கும் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பாதசாரிகள் விபத்துகளை சந்திக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. இது தொடர்பாக கம்பஹா நகர சபை உரிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் வேண்டிக்கொள்கின்றனர் .

# வெளிநாட்டு தம்பதியினரின் ரூ. 88,000 பெறுமதியான காலணிகள் திருட்டு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த சுவிட்சர்லாந்து தம்பதியினரின் 88 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க ஒரு ஜோடி காலணியை திருடிய சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் சுற்றுலா பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முறைப்பாட்டாளரான வெளிநாட்டு தம்பதியினர் காலணியை சுற்றுலாவுக்கு பயன்படுத்திவிட்டு திறந்த மண்டபத்தில் முன்னால் வைத்திருந்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்கியிருந்த விடுதியிலிருந்து வெளியில் செல்வதற்கு சென்று பார்த்த போது திறந்த மண்டபத்தில் இருந்த காலணி காணாமல் போயிருந்ததாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன ஒரு ஜோடி காலணி இலங்கை நாணயப்படி 88,250 ரூபா பெறுமதி வாய்ந்ததாகவும் '110' வகை விளையாட்டு காலணி எனவும் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை – மலேசிய வர்த்தக கவுன்ஸிலின் விசேட கூட்டம்

## இலங்கை, மலேசிய வெளியுறவு அமைச்சர்கள் விசேட உரை



ருஸைக் பாருக்

இலங்கை மலேசியா வர்த்தக கவுன்சில் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்த "CEO BUSINESS FORUM" ஒழுங்கு செய்த நிகழ்வு கொழும்பு, ஷங்ரிலா ஹோட்டலில் கவுன்சிலின் தலைவர் எச்.எம்.கே.எம். ஹமீஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதிகளாக மலேசிய நாட்டின் வெளியுறவு அமைச்சர் Dato Seri (Dr.) Zambry Abdul Kadir மற்றும் வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ஆகியோர் கலந்து கொண்டு விசேட உரைகளை நிகழ்த்தினர்.

இலங்கைக்கும் மலேசியாவிற்கும் இடையிலான பொருளாதார உறவுகள் மற்றும் பரஸ்பர வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குவதற்கும் வளர்ப்பதற்கும் சகலரும் ஒத்தைழைப்பு வழங்க வேண்டுமென இரு நாட்டு அமைச்சர்களும் தமது உரையில் தெரிவித்தனர்.

இலங்கை முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள், பெரு நிறுவன நிர்வாகிகள் மற்றும் தொழில்முயற்சியாளர்கள் மேற்படி கூட்டத்தில் அமைச்சர்களிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

நிகழ்வில் Dialog Axiata PLC இன் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க, எபிக் டெக்னாலஜி நிறைவேற்றுத் தலைவர் கலாநிதி நயநா தெஹிகம மற்றும் HYRAX Oil நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் Dato Hazimah Zainuddin ஆகியோர் இலங்கை மற்றும் மலேசிய வர்த்தக நடவடிக்கைகள் பற்றி குழு கலந்துரையாடலில் உரையாற்றினர்.

இவ்வைபவத்தில் இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் ஆதம் , இலங்கை மலேசியா வர்த்தக கவுன்சில் உறுப்பினர்கள், மலேசியா தூதரகத்தின் அதிகாரிகள், ஊடக நிறுவனத்தின் ஆசிரியர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இலக்கியக்களம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ள இலக்கியக் களம் நிகழ்ச்சியில் 'நூல்களுடன் பயணிப்போம்' என்ற தலைப்பில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் நூலகர் திருமதி சு. சித்தார்த்தினி உரையாற்றவுள்ளார். இந்நிகழ்வுக்கு நிர்வாகக்குழு உறுப்பினர் ச.இந்திரகுமார் தலைமை வகிப்பார்.

# விறகு சேகரிக்கச் சென்றவர் யானைத் தாக்குதலில் பலி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

தலாவ ஜயகங்க 100 வீட்டுத் திட்ட பகுதி தேக்கு வனப்பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற நபர் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (10) மதியம் தலாவ ஜயகங்க பகுதியிலுள்ள தேக்கு வனப்பிரதேசத்திற்கு விறகு சேகரிக்கச் சென்ற 54 வயதுடைய டீ.எம்.ஹேரத் பண்டா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவர் ஓரளவு மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தவர் என பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. குறித்த தினம் வனத்தில் விறகு சேர்ப்பதற்கு சென்று மாலையான போதும் வீடு திரும்பாத நிலையில் பிரதேசவாசிகளும் பொலிசாரும் இணைந்து குறித்த வனத்தில் தேடுதல் மேற்கொண்டுள்ளனர். பின்னர் இரவு 7.00 மணியளவில் பிரேதம் வனத்தில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

# சாட்சியாளரை அச்சுறுத்திய பொலிஸ் சார்ஜன்ட் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்கு தொடர்பில் முறைப்பாட்டாளர்களின் சாட்சியாளரை அச்சுறுத்தி மிரட்டியதாக கூறப்படுகின்ற சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய குற்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உதவி புரியும் பாதுகாப்பு பிரிவினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு நேற்று முன்தினம் (10) சந்தேக நபரான சார்ஜன்ட் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரான சார்ஜன்ட் நேற்று (11) நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

# அநுராதபுரம் வைத்தியசாலையில் சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு

திறப்பனை தினகரன் நிருபர்

இக்காலப் பிரிவில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அநேகமான முக்கிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் அங்கு நாளாந்தம் வரும் பெருமளவிலான நோயாளர்கள் சில மருந்து வகைகளை பெற்றுக் கொள்வதற்காக தனியார் மருந்தகங்களை நாடிச் செல்லும் நிலை ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் இருதய நோய் கிளினிக்குக்கு வந்திருந்த அநேகமான நோயாளர்களுக்கு இருதய நோய்க்கான ஒரு சில மருந்துகளை தவிர ஏனைய மருந்து வகைகளை பாமசிகளில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்

சுவாச நோய்க்கான "இன்ஹெலர்" போன்ற முக்கிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. சில நோயாளர்களுக்கு சுமார் 10 வகைக்கும் அதிகமான மருந்து வகைககள் டாக்டர்களால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தும், மூன்று அல்லது நான்கு வகையான மருந்துகள் மட்டுமே வழங்கப்பட்டதாக நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2023 ஒக்டோபர் 12 வியாழக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
ளுஹர் - 11.59
அஸர் - 03.16
மஃரிப் - 05.58
இஷா - 07.08

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் புரட்டாதி 26
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# வரி நிலுவைகளை செலுத்தாத மதுபானசாலைகளுக்கு காலக்கெடு

**உரிமங்களை ரத்துச் செய்யவும் தீர்மானம்**

மொத்த வரி நிலுவைத் தொகையை செலுத்தாமல், போலி ஸ்டிக்கர்களை ஒட்டி மதுபான விற்பனையில் ஈடுபட்டுவரும் நிறுவனங்களின் உரிமம் இரத்து செய்யப்படுமென மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வரி நிலுவையை செலுத்துவதற்கு இம்மாதம் (30) வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்களத்தில் பொதுக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரிய வரிகளை குறிப்பிட்ட நேரத்தில் அறவிடவில்லையென தொடர்ச்சியான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்ததையடுத்து, மதுபான சாலைகளின் நிலுவைத் தொகைகணக்கெடுப்புக்கள்எடுக்கப் பட்டன.

இதன்படி, மொத்த நிலுவைத் தொகை 6.2 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 2.5 பில்லியன் ரூபாய் வரி நிலுவைத் தொகையாக கணக்கிடப்பட்டுள்ளது. எஞ்சிய 3.8 பில்லியன் ரூபா தாமதக் கட்டணமாக இருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

# தொழினுட்ப, பசுமைப் பொருளாதார வேலைத் திட்டத்தில் இணையுங்கள்

## தனியார்துறைக்கு ஜனாதிபதி அழைப்பு




தொழினுட்பம் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்தும் வேலைத்திட்டத்தில் இணையுமாறு தனியார் துறையினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்த அழைப்பு விடுத்தார்.

தேசிய தகவல் தொழினுட்பம் மற்றும் வர்த்தக செயல்முறை முகாமைத்துவத் தொழில் கண்காட்சியை நேற்று (11) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தேசிய தகவல் தொழினுட்பம் மற்றும் வர்த்தக முகாமைத்துவ வாரத்தை (National IT and BPM Week) ஆரம்பித்து வைக்கும் முகமாக இந்தக் கண்காட்சி , அக்டோபர் 11,12 மற்றும் 13 ஆம் திகதிகளில் கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்றது.

டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்தும் திட்டத்தை விரைவுபடுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. தகவல் தொழினுட்ப தொழில்முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் புதிய தொழினுட்பம் குறித்து அறிவை வழங்குதல், திறன் மேம்பாடு, தொழில் ஆலோசனை மற்றும் தொழில் வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

மேல்மாகாணத்தில் (சா / தரம் மற்றும் உ / தரம்) கற்கும் பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்கல்வி நிறுவன மாணவர்கள், தொழில் வாய்ப்புகளை எதிர்பார்த்துள்ளவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களை தெளிவூட்டும் நோக்கில் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.

03 நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், தொழிற்துறை மற்றும் தொழில் ஆலோசனை, தகவல் தொழினுட்பம், வணிக செயல்முறை,

06

# வைரசால் பரவும் கண் நோய் பாடசாலை மாணவர்களும் பாதிப்பு

## வீண் அச்சம் கொள்ள வேண்டாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின்பல்வேறு பகுதிகளிலும் ஒரு விதமான கண் நோய் பரவி வருவதாகவும் அது தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என்றும் சுகாதார அமைச்சு பொதுமக்களை கேட்டுள்ளது.

கொ ான் ஜுன்க் டி வி டி ஸ் எனப்படும் இந்த கண் நோய் ஒருவகை வைரசால் ஏற்படுகின்றது. கண்களில் வலி, கண்ணீர், கண்கள் சிவத்தல், கண்களில் நீர் வடிதல் போன்ற அறிகுறிகள் இந்த நோய்க்கான அறிகுறி என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த நோயானது ஒருவரிடமிருந்து மற்றவருக்கு மிக எளிதில் பரவக்கூடியது என்றும் நோயாளியான நபரின் கண்ணீர் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுரப்பிக்களால் மட்டுமே, அது பரவுவதாகவும் விஷேட கண் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சில பாடசாலைகளிலும் இந்த நோய் பரவல் இடம் பெற்றுள்ளதாகவும், தற்போது நாட்டில் நிலவும் வானிலையுடன் இந்த நோய்க்கு தொடர்புள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

06

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2023.10.10
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5263
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 32,289,232.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 5 3 3 6 5 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3505
சீட்டிழுப்பு திகதி 10.10.2023
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,489,588.40
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 11 35 50 77
விசேட எழுத்து P
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 57326

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1611
2023.10.10
19180
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 410,082,776.00
ஆங்கில எழுத்து A
சுப்பர் இலக்கம் 05
வெற்றி இலக்கங்கள் 07 17 62 63
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 லக்கி
திகதி 10.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0089
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 1 1 5 4 2 9
L7 இலக்கம் 3 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,530,404.40

ராசி சுப பலன்
திகதி 10.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 572
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,218,195.20
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 03 26 33 59
விசேட இலக்கினம் தனுசு

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1293
10.10.2023
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 114,672,215.20
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 24 25 63 65
விசேட எழுத்து X
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 32751

# நாகை–இலங்கை கப்பல் சேவை 14 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

நாகை துறைமுகத்திலிருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு இம்மாதம் 10 ஆம்திகதி பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்க இருந்தபோதும் கப்பல் போக்குவரத்து 12 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. இந்நிலையில்,அந்த திகதியில் மீண்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நாகை துறைமுகத்திலிருந்து காங்கேசன் துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து அக்டோபர் 14 ஆம் திகதி காலை 07 மணிக்கு தொடங்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய அமைச்சர்கள் கூடுதலாக இந்நிகழ்வில் பங்கேற்க இருப்பதாலே திகதி மாற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

மத்திய துறைமுகங்கள், கப்பல், நீர்வழிப் போக்குவரத்து மற்றும் ஆயுஷ் துறை அமைச்சர் சர்பானந்த சோனாவால, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் பங்கேற்க வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**SLT–Mobitel நிறுவனத்தில்**

# புதிய Whistle blowing விதிமுறை அறிமுகம்



SLTMobitel நிறுவனம் சூழல் சமூகம் மற்றும் கொள்கைகளை வலுப்படுத்தும் வகையில் மேம்படுத்தப்பட்ட Whistle blowing என்ற புதிய விதிமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் தலைவர் ரியாஸ் மிஹுலர் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், சுயாதீன Whistle blowing குழு,டெலிகொம் நிறுவனத்தின் உயர்தரம் வாய்ந்த செயற்பாடுகளுக்கான அர்ப்பணிப்புக்களுக்கு எடுத்துக் காட்டாக அமைவதாக தெரிவித்துள்ளார்.

எவ்வாறு வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என்பதன் அடிப்படையான அம்சங்கள் தொடர்பில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

அந்த வகையில் நிறுவனத்தில் இடம் பெறும் பாரதூரமான தவறான செயற்பாடுகளை அறிவிப்பவர்களுக்கு பாதுகாப்பான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், அது அமைந்துள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

மேற்படி பக்கசார்பற்ற Whistle blowing செயற்குழுவில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிதியியல் பீட முகாமைத்துவப் பேராசிரியர் பவித்ரா கைலாசபதி, தொழில் வழங்குநர் சம்மேளனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கோட்டாபய திசாநாயக்க உள்ளிட்ட பலரும் உள்ளடங்குகின்றனர்.

# ஜனாஸா தொழுகை நடத்த கோரிக்கை

பலஸ்தீனில் இடம்பெற்று வரும் யுத்தம் காரணமாக உயிரிழப்பவர்களுக்காக நாளை வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையின் பின்னர் மறைமுகமான ('காஇப்') ஜனாஸா தொழுகை நடாத்துமாறு பலஸ்தீனுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் எம். பௌஸான் அன்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்தோடு பலஸ்தீனில் அமைதி, சமாதானம் ஏற்பட்டிடவும் குனூத் துஆப் பிரார்த்தனை நடாத்துமாறும் அவர் கேட்டுள்ளார்.

# மோட்டார் சைக்கிளில் சென்ற தந்தை, மகள் மீது அசிட் வீச்சு

மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் மகள் மீது, வீதியில் நின்ற நபர் ஒருவர் அசிட் வீசி தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக முல்லேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லேரியா, அம்பத்தலையில் அசிட் வீச்சுக்குள்ளான தந்தையும் மகளும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் நேற்று புதன்கிழமை (11) காலை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த மகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிலும், தந்தை கொழும்பு கண் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள்: விண்ணப்பங்கள் விரைவில்

## அரசியலமைப்பு பேரவை தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை வெளியிட அரசியலமைப்பு பேரவை தீர்மானித்துள்ளது.

அரசியலமைப்புப் பேரவை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில், பாராளுமன்ற கட்டடத்தில் கூடியுள்ளது. அதற்கிணங்க அந்த விண்ணப்பங்களை எதிர் வரும் வார இறுதி பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு தீர்மானித்ததாகவும் இந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட ஊழல் மோசடி எதிர்ப்பு சட்டமூலத்தில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்நிலையில் அந்த குறைபாடுகளை

குறித்த சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு நிவர்த்தி செய்யும் வரை, புதிய உறுப்பினர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்தது. இதேவேளை பொலிஸ் மா அதிபரின் பதவிக் காலம் நிறைவடைந்தாலும், அந்த பதவிக்கான வேட்பு மனுவை நேற்றைய தினம் சமர்ப்பிக்கவில்லை என்றும் அரசியலமைப்புப் பேரவை தெரிவித்துள்ளது.

# முன்னாள் வன்னி MP கொலை வழக்கு; மனைவி உட்பட மூவர் விடுதலை

**வவுனியா விசேட நிருபர்**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அன்ரனி இம்மானுவேல் சில்வா கொலை வழக்கில், நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்ட போது வெளிநாட்டில் தஞ்சமடைந்த அவரது மனைவி உட்பட 03 பேரையும் கொலைக் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்து மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார். இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் (10) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 2002 புரட்டாசி மாதம் வவுனியாவில் வீட்டில் தீ பரவி, பாராளுமன்ற உறுப்பினர் அன்ரனி இம்மானுவேல் மரணித்தார். இதையடுத்து சந்தேகத்தின் பேரில் அவரது மனைவி உட்பட03 பேர் கைது செய்யப்பட்டு கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

**விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் திகதியை நீடித்தல்**

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை குடியுரிமைப் பதிவேடுகளை ஸ்கேன் செய்தல், அட்டவணைப்படுத்துதல் மற்றும் தரவுகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கான சேவை வழங்குநரைத் தெரிவு செய்வதற்கான கொள்முதல்**

**ஒப்பந்த இல.: DIE/PRO/03/2023/32**

01. மேற்படி கொள்முதல் நடவடிக்கைக்கு ஏற்புடைய 2023.09.22 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2023 ஒக்டோபர் 27 (வெள்ளிக் கிழமை) (2023.10.27) வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் தகவல்கள் எமது உத்தியோகபூர்வ இணையதளத்தில் **(www.immigration.gov.lk)** பெற்றுக்கொள்ள முடியும்.

02. பூரணப்படுத்திய விலைமனுக்களை 2023.10.27 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிளயவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
**தலைவர்**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**"சுஹுருபாயா",**
**05 ஆம் மாடி,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.**

03. இதில் ஆர்வமுள்ளவர்கள் மீளளிக்கப்படாத ஆறாயிரம் ரூபா. (ரூ.6000.00) கட்டணத்தைச் செலுத்தி பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாயா", 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2023.10.26 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். கட்டணம் காசாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

**தலைவர்**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**"சுஹுருபாயா",**
**05 ஆம் மாடி,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.**

**பெறுகை அறிவித்தல்**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**
**அபிவிருத்தி லொத்தர் சபை**
**விலைக்கோரலுக்கான அழைப்பு**
**21,650 எண்ணிக்கையான டீ சேர்ட்கள் (T Shirts) வழங்குதல்**
**BID No: DLB/PRO/2023/27**

21,650 எண்ணிக்கையான டீ சேர்ட்களை வழங்குவதற்காக ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பில் சிறு அளவிலான பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

03. 2023-10-12ஆம் திகதியிலிருந்து 2023-11-02ஆம் திகதி வரையில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக 20,000.00 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கொழும்பு-02, யூனியன் பிளேஸ், டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவின் வழங்கலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.

04. விலைமனு ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப் பிணையொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

05. விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து விபரமான விபரங்களையும் விலைமனுதாரர்கள் வழங்குதல் வேண்டும்.

06. சகல விலைமனுதாரர்களும் குறித்த விலைக்கோரலுக்காக ''1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின்'' பிரகாரம் பெற்றுக்கொண்ட ஒப்பந்தப் பதிவுச் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாவிட்டால் அது நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

07. விலைக்கோரல் நிபந்தனைகளின் பிரகாரம், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அபிவிருத்தி லொத்தர் சபைக்கு டீ சேர்ட்கள் வழங்குதல் (**BID No: DLB/PRO/2023/27)**'' எனக் குறிப்பிட்டு இரு பிரதிகளிலான விலைமனுக்களை தலைவர், சிறியளவிலான பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை இல. 356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02, இலங்கை என்ற முகவரிக்கு 2023-11-03ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு பிந்தாத வகையில் கிடைக்கச் செய்தல் வேண்டும். இதற்கு பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

08. விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியிலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். 2023-11-03ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.

09. அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்திலும் விலைமனு ஆவணங்களைப் பார்வையிடலாம். www.dlb.lk

**தலைவர்,**
**சிறியளவிலான பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர்.**
**த சில்வா மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி: 011-4824824.**
**2023-10-12.w.dlb.lk**

DLB DEVELOPMENT LOTTERIES

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 26ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 26

### குறள் தரும் சிந்தனை



அன்பொரீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்

அன்பெனும் பண்பை அறவே நீக்கி, தன்னையும் வருத்திக் கொண்டு, அறவழிக்குப் புறம்பாகச் சேர்த்துக் குவித்திடும் செல்வத்தைப் பிறர் கொள்ளை கொண்டு போய் விடுவர்.

## நாட்டில் மழையைத் தொடர்ந்து பரவும் இரு ஆபத்தான நோய்கள்!

நாட்டில் தற்போதைய மழைக்காலநிலையைத் தொடர்ந்து நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. அதனால் டெங்கு நோயின் அச்சுறுத்தல் மீண்டும் தீவிரமடையும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனை சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புக்கான தேசிய கட்டுப்பாட்டு இயக்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

டெங்கு நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையிலும் கடந்த சில தினங்களாக அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்பில் சுகாதாரத் தரப்பினர் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர்.

டெங்கு நுளம்பினால் காவிப் பரப்பப்படும் ஒரு வைரஸாகும். இது நுளம்புகளில் காணப்படும் எல்லா இனங்களாலும் காவிப் பரப்பப்படக் கூடிய ஒன்றல்ல. இவ்வைரஸானது ஈடிஸ் எஜிப்டைய் இன நுளம்புகளால் மாத்திரமே காவிப்பரப்பப்படக் கூடிய ஒரு வகை வைரஸாகும்.

இவ்வின நுளம்புகள் தெளிந்தநீர் தேங்கிக் காணப்படும் இடங்களில் பல்கிப் பெருகும் பண்பை தன்னகத்தே கொண்டுள்ளன. அவை வேறு இடங்களில் பெருகக் கூடியவை அல்ல. அந்தளவுக்கு தனித்துவ பண்பைக் கொண்டிருக்கின்றன இவ்வின நுளம்புகள். அதன் காரணத்தினால் இவ்வின நுளம்புகளின் பெருக்கத்திற்கு தற்போதைய மழைக்கால நிலை நல்ல வாய்ப்பாக அமைந்து விடுகின்றது.

வீட்டிலும் சுற்றாடலிலும் தேங்கிக் காணப்படுகின்ற நீர் தேங்கக்கூடிய திண்மக்கழிவுப் பொருட்கள் இவ்வின நுளம்புகளின் பெருக்கத்திற்கு பாரிய பங்களிப்பை நல்கி வருகின்றன. அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் இவ்வின நுளம்புகள்தான் தெளிந்தநீரில் முட்டையிட்டு பல்கிப் பெருகின்றன.

இவ்வின நுளம்புகள் இவ்வாறு பெருகுகின்ற போதிலும் அவை எடுத்த எடுப்பில் டெங்கு வைரஸைப் பரப்பக் கூடியவை அல்ல. அவற்றுக்கு டெங்கு வைரஸ் நோய்க்கு உள்ளான நபர் இன்றியமையாததாகும். அவ்வாறான நபரைக் குத்துவதன் ஊடாக இவ்வைரஸைப் பெற்றுக்கொள்ளும் இவ்வின நுளம்புகள் இவ்வைரஸை சுகதேகிகளுக்கு பரப்பும் பண்பைக் கொண்டுள்ளன.

இவ்வின நுளம்புகள் இல்லாவிடில் டெங்கு வைரஸ் பரவ வாய்ப்பும் இராது. அது அச்சுறுத்தாகவும் அமையாது. அதனால்தான் மழைநீர் தேங்க முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக் கொள்வதன் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. இருந்த போதிலும் மழைநீர் உள்ளிட்ட தெளிந்தநீர் தேங்க முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தப்படாத நிலைமையைப் பரவலாக அவதானிக்க முடிகிறது. நுளம்பு ஒழிப்பின் முக்கியத்துவம் உணரப்படாததன் வெளிப்பாடே இது. இதனை இவ்வின நுளம்புகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.

ஆனால் இந்நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தினால் டெங்கு வைரஸ் அச்சுறுத்தல் இருக்காது. அதனால் டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். அதன் முக்கியத்துவம் உணரப்பட வேண்டும். இவ்விடயத்தில் கவனயீனமாக நடந்து கொள்ளக் கூடாது.

அதுவே மருத்துவர்களின் கருத்தாகும். உண்மையில் மக்களின் ஒத்துழைப்பின்றி இந்நுளம்புகளின் பெருக்கத்தையும் டெங்கு வைரஸின் அச்சுறுத்தலையும் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது. இது சுற்றாடலுடன் சம்பந்தப்பட்டதொரு பிரச்சினை என்பதை மறந்து விடலாகாது.

டெங்கு வைரஸின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில் எலிக்காய்ச்சல் நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நாட்டில் மழைக்காலநிலையுடன் சேர்த்து தீவிரமடையக் கூடிய மற்றொரு நோயாகவே எலிக்காய்ச்சல் விளங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் சேறுசகதி மிக்க இடங்களில் நடமாடுவதையும் விளையாடுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அதன் காரணத்தினால் தற்போதைய சூழலில் காய்ச்சலை அறிகுறியாகக் கொண்ட நோய்கள் காணப்படுமாயின் தாமதமின்றி மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ளத் தவறக்கூடாது. அண்மைக் காலமாக டெங்கு, எலிக்காய்ச்சல் இரண்டுமே மழைக்காலநிலையுடன் தீவிரமடையக் கூடிய நோய்களாக விளங்குகின்றன. இந்நோய்களுக்கு உள்ளானவர்கள் ஆரம்ப கட்டத்திலேயே உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளும் போது நோயை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளலாம். இல்லாவிடில் இந்நோய்கள் உயிராபத்துகளைக்கூட ஏற்படுத்திவிட முடியும்.

ஆகவே மழைக்காலநிலையுடன் சேர்த்து ஏற்பட்டுள்ள டெங்கு மற்றும் எலிக்காய்ச்சல் அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். இது ஒவ்வொருவரினதும் பொறுப்பு என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# முதியோர் அனுபவிக்கும் வேதனைகளை இளையோர் புரிந்து கொள்வது அவசியம்!

இவ்வுலகில் பிறந்த மனிதர்கள் மட்டுமல்ல செடி, கொடி, மிருகங்கள் மற்றும் பறவைகளும் கூட என்றோ ஒருநாள் முதுமை அடைந்தே தீர வேண்டும். இதனை யாராலும் தடுத்து விடவோ மாற்றி விடவோ முடியாது.

அன்று கட்டான உடல் அமைப்பு, கம்பீரத் தோற்றம், துடிதுடிப்பான செயற்பாடுகளோடும் வீரியத்துடன் திகழ்ந்த இளவயதினர் காலப்போக்கில் உடல் தளர்ந்து, கண்பார்வை குறைந்து, மெலிந்து, நோய்வாய்ப்பட்டு முதியோர் ஆகிவிடுவதுடன் பெரும்பாலானோர் வறுமையிலும் துன்பத்திலும் வாடுவதையும் காண்கின்றோம்.

மூத்த பிரஜைகள் என்று அழைக்கப்படுகின்ற இந்தப் பருவத்தினர் கௌரவமாகவும் கண்ணியமாகவும் மதிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்டோரை முதியோர் என்கின்றனர். ஆனால் சர்வதேச மட்டத்தில் 65 வயதுக்கு மேற்பட்டவர்களே முதியோர் என வரையறை செய்யப்பட்டுள்ளனர்.



இன்று நவீன மருத்துவம், பொதுச்சுகாதார வசதிகள், நோய் வருமுன் காத்தல் நடவடிக்கை மற்றும் உடல்நலம் பற்றிய விழிப்புணர்வு காரணமாக மக்களின் ஆயுட்காலம் நீடித்து வருகின்றது.

முதியோர்களின் முக்கியத்துவம் இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு தெரிவதில்லை. முதியோர் பற்றி நாம் நன்கு சிந்தித்துப் பார்ப்போமேயானால் அவர்கள் நாட்டின் முதல் பிரஜைகள், வாழ்வில் சாதனை படைத்தவர்கள், செல்வாக்கு உள்ளவர்கள், முயற்சியில் உயர்வு கண்டவர்கள், அனுபவசாலிகள், வீட்டுக்கும் நாட்டுக்கும் ஓயாது உழைத்தவர்கள், எதிர்கால சந்ததியினரின் வழிகாட்டிகள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இன்று முதியோர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதாகவும், குடும்பத்தாலும் சமூகத்தாலும் அவர்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் பரவலாக பேசப்படுவதை நாம் அறிவோம். அரசாங்கம் முதியோர்களுக்கான பல செயற்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. முதியோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தேசிய பாதுகாப்புச்சபை உருவாக்கப்பட்டு அதனூடாக முதியோர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டும் வருகின்றது.

இன்றைய நவீன உலகில் இன்பங்களை அனுபவித்து வருவோர் பலர் முதுமையை வெறுப்புடனே நோக்குகின்றனர். இந்த வெறுப்பின் வெளிப்படையாக இன்று தமது பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர் பலர் வீதியோரங்களிலும் அநாதை இல்லங்களிலும் வேதனையோடு வாழ்ந்து வருவதையும் காண்கின்றோம்.

முதியோர் தாங்கள் செய்த தொழிலில் இருந்து ஓய்வு பெற்றதும் அவர்களில் பலருக்கு வீட்டில் இருந்து மதிப்பும் மரியாதையும் நாளடைவில் குறைந்து கொண்டே போகின்றது. சிலவேளைகளில் மனைவி, மக்களின் கடின வார்த்தைகளையும் தாங்கிக் கொண்டு வேதனையோடு வாழ்ந்து வருகின்றனர். முதியோர்களை அன்பாக, பாசத்தோடு பாதுகாக்க வேண்டியது பிள்ளைகளின் தலையாய கடமையாகும். அது மறுக்கப்படுமாயின் மனிதத்தன்மை மரணித்து விடும்.

முதுமைக் காலத்தில் பலவிதமான நோய்கள் ஏற்படலாம். முதியோர் சில நடைமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் அவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். உடற்பயிற்சி, சரியான உணவுப் பழக்கம், சத்துணவு உட்கொள்ளல், போதியளவு உறக்கம், தேவையான மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளல், ஓய்வு எடுத்தல், போதுமான நீர் அருந்துதல், வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்து மாத்திரைகளை உட்கொள்ளல் என்பவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

மேலும் இனிப்பு,கொழுப்பு மற்றும் மாமிச உணவுகளை குறைத்துக் கொள்வதோடு மது அருந்துதல், புகைபிடித்தல், வெற்றிலை போடுதல் என்பவற்றை முற்றாகத் தவிர்த்தால் பல நோய்களிலிருந்தும் உடல்நலத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இன்று பெரும்பாலான முதியோர் எதுவித பொழுதுபோக்குகளும் இன்றி தினமும் வீட்டிலே முடங்கிக் கிடக்கின்றனர். இதனால் அவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டு அவஸ்தைப்படுகின்றனர்.

கிராமங்கள் தோறும் சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவது போல் முதியோர்களுக்கும் பொருத்தமான பூங்காக்கள் அமைக்கப்பட்டால் அவர்கள் பெரிதும் பயனடைவார்கள்.

முதியோர் தங்களுக்கான விஷேட அடையாள அட்டையை வைத்திருப்பதன் மூலம் காரியாலயங்கள், தபாலகங்கள், பொலிஸ் நிலையம், பஸ்வண்டி, வைத்தியசாலையில் விசேட சலுகைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

முதுமைக் காலத்தில் ஏக்கம், தனிமை, நிம்மதியற்ற நிலை என்பன இருக்கும். இவற்றைப் போக்கி சந்தோசமாக இருக்க வேண்டுமேயானால் மக்களுடன் தொடர்புடைய கிராம அபிவிருத்திச் சங்கம், ஓய்வூதியம் பெறுவோர் சங்கம், மத்தியஸ்த சபை, முதியோர் சங்கம் மற்றும் சிரமதான நடவடிக்கைகள் போன்ற சமூகநல செயற்பாடுகளில் இணைந்து செயல்படலாம்.



**கலாபூசணம் எம்.ரி.ஏ.கபூர்...**
நிந்தவூர்

# கிழக்கு மாகாண பாடல் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பாராட்டுவிழா

கிழக்கு மாகாண அரச பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான பாடல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நினைவுச் சின்னமும் பாராட்டு பத்திரமும் வழங்கி வைக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ச.நவநீதன் தலைமையில் இடம்பெற்றது.

வெற்றி பெற்ற திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பணிபுரிகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கான பாராட்டுப் பத்திரமும் நினைவுச் சின்னமும் விசேட பட்டங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபிர் அவர்களுக்கு 'கிழக்கின் மதுரக்குரலோன்' எனும் பட்டமும், கே எம். கபீர் அவர்களுக்கு 'கிழக்கின் வதனக்குரலோன்' பட்டமும், எம்.பியாஸ் அவர்களுக்கு 'கிழக்கின் பாடகர் திலகம்' எனும் பட்டமும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவும், கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் ஷாமினி ரவிராஜா, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜி. சுகுணன், காத்தான்குடி பிரதேச செயலாளர் உ. உதய ஸ்ரீதர், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் அதிசயராஜ், அம்பாறை மாவட்ட கலாசார ஏ எல். தௌபீக், கலாசார உத்தியோத்தர் எம். எஸ்.ஜௌபர் மற்றும் கவிஞர் சோலைக்கிளி உட்பட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.





**எம் எப். நவாஸ்...**
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

# முதியோருக்கு உதவிகளை வழங்கிய மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கம்

மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கம் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வைபவமொன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் வனபரிபாலன திணைக்களத்தின் ஆய்வு உத்தியோகத்தரும், உயர் அதிகாரியுமான சுஹ்ரி லத்தீப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

"ஒரு சமூகத்தில் உள்ள பலம் பொருந்தியவர்கள் ஒட்டுண்ணிகளாக வாழும் வரை அச்சமூகத்தை மீட்க முடியாது என்பது ஒரு தத்துவக் கருத்தாகும். எனவே இயன்றவரை சமூகத்திலுள்ள பலம் பொருந்தியவர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஒரு சமூகத்தின் பாதுகாவலர்கள் அல்லது பலம் பொருந்தியவர்கள் மூன்று பிரிவினர் காணப்படுவதாக சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். படித்தவர்கள், பணம் படைத்தவர்கள், பதவிகளில் உள்ளவர்கள். இம்மூன்று சாராரும் சமூகத்தின் ஒட்டுண்ணிகளாக வாழத்தொடங்கினால் அச்சமூகம் சிதைவதைத் தவிர்க்க முடியாது" என்று அவர் தனது உரையில் தெரிவித்தார்.

மடவளை மதீனா மத்திய கல்லூரி மண்டபத்தில் மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் தலைவர் ஜே.எம். யாசீன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இங்கு முதியோர் பலருக்கு ஒரு இலட்ச ரூபாவுக்கும் அதிகமான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. பொதுத்துறையில் உயர்பதவிகளில் இருந்து ஓய்வு பெற்று 75 வயதையும் கடந்த மடவளைவாழ் சிரேஷ்ட பிரஜைகள் ஐவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

அதேவேளை சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மடவளையைச் சேர்ந்த ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்றவர்கள், உயர்தரப் பரீட்சையில் 3 ஏ பெற்றவர்கள், ஆங்கிலப்பாடத்தில் ஏ சித்தி பெற்றவர்கள் இங்கு பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

அதிதிகளாகக் கலந்து கொண்ட சட்டத்தரணி பாத்திமா அஸ்னா, வத்தேகம வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரிஸானா பாருக் உடையார், அல் முனவ்வரா ஆரம்பப் பாடசாலை அதிபர் ஸாய்னா ஹலீல்தீன் , சிரேஷ்ட பிரஜைகள் சங்க பதில் தலைவர் கலாபூசணம் ஜே.எம்.ஹாபீஸ், செயலாளர் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல.ஏ. ஜெலீல் உட்பட பலர் மாணவர்களுக்கான பரிசில்களைக் கையளித்தனர்.







**எம்.ஏ.அமீனுல்லா...**
(படங்கள்: அக்குறணை குறூப் நிருபர்)

# FACETS Sri Lanka கண்காட்சி 2024:

## இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணசங்கத்தினால் ஏற்பாடு

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை (NGJA), ஏற்றுமதிஅபிவிருத்திசபை (EDB) ஆகியவற்றுடன் இணைந்து, ஆசியாவின் முதன்மையான இரத்தினக்கல் மற்றும் ஆபரணக்கண்காட்சியான FACETS Sri Lanka நிகழ்வை, எதிர்வரும் 2024 ஜனவரி 06 முதல் 08 வரை சினமன் கிராண்ட்ஏட்ரியம் லொபியில் நடத்தவுள்ளதாக, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணசங்கம் (SLGJA) அறிவித்துள்ளது.

2002 இல் உருவாக்கப்பட்ட SLGJA, இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையின் உயர்அமைப்பாகும். இது இத்துறையில் உள்ள அனைத்து துணைப்பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பல ஆண்டுகளாக சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறை நாட்காட்டியில், FACETS Sri Lanka கண்காட்சி ஒரு முக்கிய நிகழ்வாக இடம்பிடித்துள்ளது. அந்தவகையில் இந்த வருடமும், உலகளாவிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையின் சந்திப்புமையமாக அது அமையவுள்ளதோடு, உலகம் முழுவதிலுமிருந்து மொத்தவிற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், பட்டைதீட்டுவோர், சில்லறை விற்பனையாளர்கள், சேகரிப்பாளர்கள், முக்கியமான வர்த்தகர்களுக்கு இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களை ஈர்க்கும் வகையில் செயற்படும்.



எதிர்வரும் நிகழ்வுகள் மற்றும் FACETS Sri Lanka 2024 கண்காட்சியின் புதிய அம்சங்கள் பற்றி FACETS Sri Lanka அமைப்பின் தலைவர் அல்தாப் இக்பால் கருத்து வெளியிடுகையில், "FACETS Sri Lanka கண்காட்சியின் 30ஆவது பதிப்பு 2024 ஜனவரியில் இடம்பெறவுள்ளதை அறிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இக்கண்காட்சியில் Sustainable Pavilion மற்றும் Sapphire Masterpiece Pavilion ஆகியன புதிய சேர்க்கைகளாக மேற்கொள்ளப் படவுள்ளன" எனத் தெரிவித்தார்.

FACETS Sri Lanka 2024 இல் Premier Gem Pavilion, Premier Jewellery Pavilion, Sustainable Pavilion, Sapphire Masterpiece Pavilion, Rough Stone Pavilion, Gem Lab Pavilion, NGJA SME Pavilion, SLGJA Gem and Jewellery Pavilion உள்ளிட்ட பல காட்சிமேடைகள் காட்சிப்படுத்தப் படும். இந்நிகழ்வில் 'Reminisce of the Past' (கடந்த காலத்தை நினைவுகூருதல்) எனும் விசேட நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

FACETS Sri Lanka கண்காட்சியில் இம்முறை முதன்முறையாக இடம்பெறும் Sustainable Pavilion ஆனது, இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையின் வரலாற்றுப் பரிணாமத்தையும், அதன் நிலைபேறான தன்மை தொடர்பான முறைகள் மற்றும் அணுகுமுறைகளையும் காண்பிக்கும். இலங்கையில் முதல்தடவையாக இடம்பெறும் மற்றுமொரு அம்சமாக Sapphire Masterpiece Pavilion அமையும். இது மிகப்பாரிய, விலையுயர்ந்த இரத்தினக்கற்களைக் காட்சிப்படுத்தும். அத்துடன் நிகழ்ச்சியின் இறுதிநாளில் அவை விற்பனைக்கு வரும்.

# கலாபூஷணம் அரச விருது வழங்கும் விழா








கலைத்துறைக்காக உன்னத சேவையாற்றிய கலைஞர்களை கௌரவிப்பதற்கான கலாபூஷணம் அரச விருது வழங்கல் விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று (11) நடைபெற்றது. கொழும்பு மாவட்டம் வெங்கட்ராம ஐயர் சுப்பிர மணியம் இசைத்துறைக்காகவும் புத்தளம் மாவட்டம் உடப்பு,வைரையா இராமச்சந்திரன் இலக்கியத்துறைக்காகவும் ஜனாதிபதியிடமிருந்து விருதை பெறுவதையும் கொழும்பு மாவட்டம் எம்.கே.எம். அஸ்வர் ஊடகத்துறைக்காகவும் கலாபூஷணம் விருதை பெற்றுக்கொண்ட போது பிடிக்கப்பட்ட படங்கள். புத்த சாசன, சமய மற்றும் கலாசார அமைச்சினால் 38 ஆவது தடவையாக இந்த விருது வழங்கல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## சீன கடன் சிக்கல்களை நிவர்த்திப்பதற்கு சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி இணக்கம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கை மற்றும் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி இலங்கையின் சீன கடன் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான அடிப்படை இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக அந்நா நாட்டின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கான உதவி ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நாடுகளுடன் செயற்படுவதற்கும் சீனா எப்போதும் தயாராக உள்ளதாகவும் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வேன்க் வென்பின் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களான இலங்கை மற்றும் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி மேற்படி இணக்கப்பாட்டுக்காக இலங்கையுடன் கடந்த செப்டெம்பர் மாதத்தில் இறுதித் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான சீன கடன் தொடர்பில், சலுகைகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் முதற்கட்ட இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு தேவையான சான்றிதழை, இலங்கைக்கு உரிய காலத்தில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 8461 ஏக்கரில் பரசூட் முறையில் நெற் பயிர்ச்செய்கை

# ரூ.490 மில்லியன் பெறுமதியான பரசூட் நெற்கள் விவசாயிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிப்பு



(லோரன்ஸ் செல்வநாயகம்)

இம்முறை பெரும்போக நெற் பயிர்ச்சிசெய்கையின் போது 8461 ஏக்கரில் பரசூட் முறைமையைப் பின்பற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக, கமநல அபிவிருத்தித் திணைக்கம் 490 மில்லியன் ரூபா பெறுமதியான பரசூட் நெற்களை விவசாயிகளுக்கு இலவசமாக பெற்றுக் கொடுத்து வருவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. சாதாரண முறைமையின் கீழ் நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதை விட, இம் முறைமையின் கீழ் விதை நெல்லை 50 வீதத்தால் மட்டுப்படுத்திக்கொள்ள முடியும் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

குறைந்தளவு பசளையை உபயோகித்தல், களைகளை அழிப்பதற்கு செலவிடும் பணத்தை குறைத்தல் மற்றும் கிருமி நாசினிகளை உபயோகப்படுத்தாமல் இருத்தல், அதிகளவு விளைச்சலை பெற்றுக் கொள்வதற்கும் இந்த முறைமை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது விவசாயிகளுக்கு பெரும் இலாபமீட்டும் முறைமையாக காணப்படுவதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். மேற்படி பரசூட் நெற்களை 10 வருடங்களில் 20 நெற்செய்கைப் போகங்களுக்கு தொடர்ந்து உபயோகிக்க முடியும் என்றும் 01 ஹேக்கருக்கு 400 பரசூட் நெற்கள் வீதம் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாணவர்களிடையே வேகமாக பரவி வரும் ஒருவித கண் நோய்; கொழும்பில் பாடசாலைக்கு பூட்டு

கொழும்பு கல்வி வலயத்தில் பாடசாலை மாணவர்களிடையே கண்நோய் வேகமாக பரவி வருவதாக வலயக் கல்வி அலுவலகம் எச்சரித்துள்ளது. கண் நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருப்பின், உடனடியாக மருத்துவ அலுவலர் அலுவலகத்துக்கு தகவல் தெரிவித்து பரிந்துரைகளை பெற வேண்டுமென, கொழும்பு பிராந்திய பணிப்பாளர் பி.ஆர். தேவபந்து சகல பாடசாலை அதிபர்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். பாடசாலையில், கண் நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இருப்பின்அவர்களை ஏனைய மாணவர்களிடமிருந்து தனித்து அமரச் செய்யுமாறும் வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.



இவ்வாறு கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயத்தின் ஆறாம், ஏழாம் மற்றும் எட்டாம் தர மாணவர்கள்; கண் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சிபாரிசுகளின் பிரகாரம் நேற்று முன்தினத்திலிருந்து (10) இப்பாடசாலையின் வகுப்புக்களில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லைஎனதீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் நிமல் ஜயவீர தெரிவித்தார்.

இப்பாடசாலையில் சுமார் முப்பத்தைந்து மாணவர்கள் இந்த கண் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக கொட்டாஞ்சேனை மத்திய உயர் கல்லூரியின் ஆறாம், ஏழாம் மற்றும் எட்டாம் தரங்கள் இந்த வாரம் மூடப்பட்டுள்ளதாகவும் கொட்டாஞ்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பத்தும் கொடிகார தெரிவித்தார்.

கண் நோய் சுமார் மூன்று நாட்களுக்கு நீடிக்கும் என்றும், குழந்தைகளின் கண்கள் சிவந்து அரிப்பு ஏற்பட்டால், வீட்டில் மருத்துவ சிகிச்சை பெற வேண்டாம் என்றும் மருத்துவர்கள்; பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குறைந்த விலையில் ஒக்டேன் 92 ரக பெற்றோலை சினோபெக் நிறுவனம் விற்பதால் வருமானத்தில் வீழ்ச்சி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சீனாவின் சினோபெக் நிறுவனம் குறைந்த விலையில் ஒக்டேன் 92 ரக விற்பனை செய்வதால், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் 92 ரக பெற்றோல் விற்பனை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்து, வருமானம் குறைவடைந்துள்ளதாகம் அந்த கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் அது தொடர்பில் தெரிவிக்கையில் சீனாவின் சினோபெக் நிறுவனம் ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரை 358 ரூபாவுக்கு விற்பனை செய்து வருகிறது.அத்துடன் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இந்தியன் ஐ.ஓ.சி நிறுவனம் ஆகியன ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரை 365.00 ரூபாவுக்கும் விற்பனை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான வருமானத்தில் நேரடி பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதுவரை நாட்டிலுள்ள சுமார் 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களை சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கியுள்ளது.

மேலும் 50 எரிபொருள் நிலையங்களை அந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களை சினோபெக் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு பெற்றோலிய விநியோக தொழிற்சங்கங்கள் தமதுஎதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

அந்நிறுவனமானது மேற்படி எரிபொருள் நிலையங்களைப் பெற்றுக் கொள்வதற்குமுன், இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள விடயங்களை நிறைவேற்றத் தவறியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இஸ்ரேலிலுள்ள இலங்கையர் விரும்பின் நாடு திரும்பலாம்

## வசதிகள் செய்து தரப்படுமென்கிறார் அமைச்சர் மனுஷ

இஸ்ரேலிலுள்ள இலங்கையர் தொடர்பில் தற்போது மிகவும் கவலைக்குரிய நிலைமை ஏற்பட்டுள்ளது. நாடு என்ற ரீதியில் அங்குள்ள ஊழியர்களின் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு தகவல்களை அறிந்து கொள்வதற்காக விசேட வாட்ஸ் அப் தொலைபேசி இலக்கம் பயன்படுத்தப்பட்டு தகவல்களை திரட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அங்குள்ள தூதரக அலுவலகங்களுடன் எந்த சந்தர்ப்பத்திலும் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் இவை செயல்பட்டுவருகின்றன.இவற்றுடன் தொடர்பு கொண்டு விரும்பியோருக்கு நாடுதிரும்ப முடியும்.

சில பிரதேங்களிலேயே தாக்குதல்களின் தாக்கம் உண்டு. அனைத்து பகுதிகளிலும் தாக்கம் இல்லை.

எவராவது இலங்கைகு வரவிரும்பினால் அதற்கான வசதிகள் உடனடியாக செய்யப்படும்.இதற்கான ஒழுங்குகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

இதேபோன்று அங்கு செல்லவுள்



ளவர்களை தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம். இவர்கள் குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளில் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அத்தோடு வெளிவிவகார அமைச்சுடன் கலந்துரையாடிவருகின்றோம். இஸ்ரேவிலுள்ள பணி நிறுவனங்களுடனும் அங்குள்ள எமது தூதரக அலுவலகங்களுடனும் தொடர்புபட்டு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எமது நாட்டைச்சேர்ந்த இருவர் தொடர்பாக கவலைக்குரிய தகவல்கள் கிடைத்துவருகின்றன. அவர்கள் குறித்து எமது கவலையை தெரிவிப்பதுடன், அவர்கள் தொடர்பில் தொடர்ந்து கவனம் செலுத்தப்படுதுடன் இவ்வாறானவை மேலும் இடம்பெறாதிருப்பதற்கான வழிமுறைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பாக செல்படுவது குறித்தும் இஸ்ரேல் அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். இதற்கு வெளிவிவகார அமைச்சும் எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கிவருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பெண் ஒருவர் காணாமல் போயிருப்பது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் இது குறித்த சரியான தகவல்களை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

யுத்த களத்தில் இருந்தே எமக்கு தகவல்கள் கிடைக்கின்றன.சரியான முறையில் அடையாளம் கண்ட பின்னரே உறுதி செய்யப்பட்ட தகவல்களை வழங்க முடியும். எமக்கு கிடைக்கும் தகவல்களை மாத்திரமே வழங்க முடியும்.யுத்த நிலையில் பயப்பட வேண்டாம் என்றும் பயப்படுங்கள் என்றும் கூறமுடியாது. இவ்வாறான நிலை மிகவும் சிரமான நிலையையே நாம் எதிர்கொண்டுள்ளோம்.

அங்கு தொழிலுக்காக சென்றவர்கள் எமது வேலைவாய்ப்பு பணியத்தின் ஊடாக சென்றவர்கள் போன்று அங்கு இருக்கின்றனர். இவர்கள் தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவையுடன் கலந்துரையாடி நமது நாட்டைச் சேர்ந்தவர்களை ஒரு இடத்திற்கு கொண்டுவருவதற்கு முயற்சித்துவருகின்றோம்.

ஆனால் குறிப்பிட்ட பகுதிகளில் தாக்குதல் இடம்பெறவில்லை என்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டவர்களின் பாதுகாப்பை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பிரச்சினைகள் இருக்குமாயின் அங்கிருந்து வருவதற்கு பல வழிகள் உள்ளன.

டுபாய் சைபபிரஸ் கட்டார் முதலான நாடுகள் ஊடாக வருவதற்கு வழிகள் உண்டு.

## திருமண வாழ்வில் இணைவோருக்கு இரண்டு மாத கற்கை நெறிகள்



(கிண்ணியா தினகரன் நிருபர்)

திருமண வாழ்வை எதிர்நோக்கியுள்ளவர்களுக்கென இரண்டு மாத பயிற்சி கற்கை நெறியை ஆரம்பித்துள்ளது. "லைப்பொண்ட் நிறுவனம்" இக்கற்கை நெறியை *NAAS Cultural Centre* வுடன் இணைந்து நடாத்துகிறது.இக்கற்கை நெறியின் அங்குரார்ப்பண நிகழ்வு கொலன்னாவையில் (08) நடைபெற்றது.

துறைசார் நிபுணர்களைக்கொண்டு நடாத்தப்படும் இக்கற்கை நெறியில் திருமணம் ஏன், ஆண் பெண் உளவியில் வேறுபாடு, பெண்கள்,சுதந்திரம், உணர்ச்சிகளை முகாமை செய்தல், தாம்பத்திய வாழ்வு, அன்பே வாழ்வு, சுத்தம் சுகாதாரம் போன்ற அரிய பல பதினைந்து தலைப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்படி கற்கைநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன .லைப்பொண்ட் நிறுவனத்தின் முகாமையாளர் ஐ.எம்.இர்ஷாத் உள்ளிட்ட பலர் இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தொழினுட்ப, பசுமைப் பொருளாதார... (03ஆம் பக்கத் தொடர்)

வதிவிடப் பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கான தளங்களும் வழங்கப்படவுள்ளன. இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க;

"இக்கண்காட்சியில் பங்கேற்கும் பலர் இதன் மூலம் எவ்வாறு நாம், வெளிநாடு செல்லும் ஆசையில் வெற்றி பெறலாம் என்றே எதிர்பார்க்கின்றனர். இது அனைவரினதும் கனவாகும். ஆனால் இக்கண்காட்சி மூலம் நமது நாட்டுக்கு எவ்வாறு பயன் பெறுவது என்பதிலேயே நான் கவனம் செலுத்தினேன்.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் தருணத்தில் நாம் இருக்கிறோம். நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவது மட்டும் போதுமானதல்ல. பெற்ற கடனை திரும்பச் செலுத்த வேண்டும். நமக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். இதற்கான அந்நியச் செலாவணி எம்மிடம் இல்லை. எனவே, நாம் மீண்டும் கடன் பெற வேண்டியேற்படும். கடன் சக்கரத்தில் தொடர்ந்து இருக்கப்போகின்றோமா? அல்லது அதிலிருந்து வெளியேறி முன்னேறிச் செல்கிறோமா? என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

எனவே,போட்டி நிறைந்த பொருளாதாரத்துடன் உலக சந்தைக்கு நகர்ந்து, வருமானத்தை அதிகரித்து மேலதிகக் கையிருப்பை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு செயற்பட்டாலேயே, நாட்டை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் நாட்டுக்கு வருவர். பொருளாதார நவீனமயமாக்கலே இந்த திட்டத்தின் முக்கிய அங்கமாகும். மிகவும் போட்டி நிறைந்த பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் ஆகியவை அதன் முக்கிய பகுதிகளாகும். டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு தகவல் தொழினுட்பத்தில் அறிவும் பயிற்சியும் கொண்ட மனித வளம் தேவை. அந்த படைப்பலத்தைக் கட்டியெழுப்ப நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். நாங்கள் புதிய பல்கலைக்கழக கட்டமைப்பொன்றை ஆரம்பிப்போம். கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொறிமுறைப்படி அரசாங்கம் 03 பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. மேலும், அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களை தொடங்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஹார்வர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்கள் போன்று இலாபத்தை மீண்டும் பல்கலைக்கழகத்தில் முதலீடு செய்யும் குழுவுடன் நடவடிக்கைகளை தொடர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

எப்படியிருந்தாலும், இப்புதிய தொழினுட்ப அறிவை வழங்க புதிய பல்கலைக்கழகங்களை நிறுவ எதிர்பார்த்துள்ளோம். இரண்டாவதாக, தற்போதுள்ள 450 தொழிற்பயிற்சி மையங்களை இணைத்து தொழிற்கல்லூரிகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கும் இந்த புதிய தொழில்நுட்பத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்காலம் தொழினுட்பம் மற்றும் பசுமைத் துறை என்பவற்றில் தங்கியுள்ளது. எனவே நாம் அதற்குள் செல்ல வேண்டும். நெல் விளைச்சல் வெற்றிபெறாதபோது, கறுவா விளைச்சலுக்கு சென்றோம். கறுவாவை இழந்தபோது கோப்பி பயிரிடப்பட்டது. கோப்பி இல்லாத காலத்தில் தேயிலை, இறப்பர் தென்னை ஆகியன பயிரிடப்பட்டன. இப்போது நாங்கள் சுற்றுலாத் துறை மற்றும் ஆடைத் தொழில் செய்கிறோம். இவை அனைத்தும் கடந்த காலத்தைச் சேர்ந்தவை. ஆனால் நாம் எதிர்காலத்திற்கு செல்ல வேண்டும் என்றார்.

## வைரசால் பரவும்... (03ஆம் பக்கத் தொடர்)

கடந்த வாரம் கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் மத்தியில் இந்த நோய்க்காணப்பட்டது. கடந்த ஆறு மற்றும் ஏழாம் திகதிகளில் சுமார் 40 மாணவர்களுக்கு இந்த நோய் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதற்கிணங்க நோய் பரவும் பாடசாலைகளில் குறித்த வகுப்புகளை நடத்த வேண்டாமென, மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் நிமல் ஜயவீர சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

## எந்த நிகழ்ச்சிகளானாலும்...

இதுபற்றி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், தமிழர் பண்பாடெனக் கூறி இங்கு சில நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனினும், இங்கு தேசிய கீதம் தமிழில் பாடப்படவில்லை. இது மனவருத்தத்துக்குரியது. நான் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சிகளிலும்,வட மாகாணத்தில் நான், தலைமைத்துவம் வகிக்கின்ற நிகழ்ச்சிகளிலும் பொதுவாக தேசிய கீதம் தமிழிலேயே பாடப்படுவதுண்டு. சிலவேளை ,வேறு அமைச்சர்கள் பங்கேற்கும் நிகழ்வில் என்னுடைய கையை மீறி சில நிகழ்வுகள் போயிருக்கலாம். அதை நான் கண்டித்ததுண்டு. இன்றைக்கும் ஒரு தவறை இங்கிருக்கும் அதிகாரிகள் செய்து விட்டனர்.

இங்கு நடக்கின்ற எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் தேசிய கீதம் தமிழில் பாடப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய வலுவான கருத்து. அண்மையில் கூட ஜனாதிபதி மட்டக்களப்பிலும் இது தொடர்பான கருத்தை கூறி இருக்கின்றார். தேசிய விழாவில் கூட ஆரம்பத்தில் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டு நிகழ்ச்சி முடிகின்ற நேரத்தில் தமிழில் பாடுவதற்கான ஏற்பாடு செய்திருக்கின்றார். ஜனாதிபதியை பொறுத்த வரையில் அல்லது அவருடைய அரசாங்கத்தை பொறுத்த ரையில் கொள்கையும் செயற்பாடும் ஒன்றுதான். சில வேளைகளில் சில அதிகாரிகள் இவ்வாறான தவறுகளை விடுகின்றனர். எனவே முக்கிய அதிகாரிகள் இவற்றை கருத்தில் எடுத்துக் கொள்வார்களென நம்புவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

## GCE A/L பரீட்சைக்கான...

நேர அட்டவணை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## 2012 க்கு பின்னர்...

வானியல், ஆன்மீகம் மற்றும் ராசி பலன்கள் ரீதியில் இந்த 02 நாட்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையென தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும்14 ஆம் திகதி சனிக்கிழமையன்று சூரியனுக்கும் பூமிக்குமிடையே சந்திரன் வரவுள்ளது. இதன்போது சூரிய கதிர்களை சந்திரன் மறைக்கும்.இதனாலே சூரிய கிரகணம் ஏற்படும். இந்நேரத்தில் பூமியின் சில இடங்களில் நிழல் ஏற்படும். இந்த அற்புதமான காட்சியை பார்க்க வானியல் ஆர்வலர்கள் ஆர்வமாய் உள்ளனர். 2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் தற்போது தோன்றவுள்ள சூரிய கிரகணத்தின் வளையம், அளவில் பெரியதாக இருக்குமென்று வானியல் நிபுணர்கள் கூறியுள்ளனர். சனிக்கிழமை ஏற்படவுள்ள இந்நிழ்வை அமெரிக்காவில் எளிதாக பார்க்க முடியும். ஆனால் இந்தியா , இலங்கை போன்ற நாடுகளில் இந்த அரிய காட்சியை பார்க்கும் வாய்ப்பு குறைவு என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## SLPP யிலிருந்து...

கூறியதாவது: கட்சி என்ற ரீதியில் பலமாகச் செயற்படுகின்றோம். அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல்களுக்கு தயாராகவே உள்ளோம். இதற்கான நடவடிக்கைகளைத் தற்போது முன்னெடுத்துள்ளோம். தேர்தல்களில் கட்சியின் கொள்கையை முன்னிலைப்படுத்திச் செயற்படுவோம். பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினரும் மீண்டும் எம்முடன் ஒன்றிணையலாம். அதற்குக் காலவகாசம் வழங்கப்படும். சகல தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டிய தருணம் தோற்றம் பெற்றுள்ளது. 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

## 09 மாதங்களில்...

முகநூல் கணக்குகளை ஊடுருவியமை உள்ளிட்ட முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். கடந்த மே மாதத்தில் மொத்தம் 3,328 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். முகநூல் தொடர்பான முறைப்பாடுகளை 101 என்ற அவசர அழைப்பு இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, முறைப்பாடு செய்ய முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## படகை கைவிட்டு...

தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலஸார் இலங்கை படகை மீட்டு கடத்தல் காரர்கள் யாரேனும் வந்துள்ளனரா? அல்லது சமூக விரோதிகள் ஊடுருவியுள்ளனரா? என்ற கோணத்தில் விசாரணை நடத்தினர்.படகிலிருந்து 02 பேர் மிக விரைவாக தப்பித்துச் சென்றதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

படகு மற்றும் வெளிஇணைப்பு இயந்திரம் (எஞ்சின்) ஆகியவற்றை கைவிட்டு மர்ம நபர்கள் தப்பிச் சென்ற பகுதி தங்கம், கஞ்சா உள்ளிட்டவை கடத்தல் நடைபெறும் பகுதியாக உள்ளதால் வந்தவர்கள் கடத்தல் காரர்களாக இருக்கக்கூடுமெனபொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை படகில் வந்த தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். விசாரணையில் இலங்கை மன்னார் பகுதியை சேர்ந்த ஜெகன், நாகேந்திரன் என தெரிவந்துள்ளது.

நாடு முழுவதும் கடலோர மாநிலங்களில் 'சாஹர் கவாச்' என்னும் தீவிரவாத தடுப்பு மற்றும் கடலோர பாதுகாப்பு ஒத்திகை இன்று அதிகாலை தொடங்கி இரண்டு நாட்கள் நடக்கிறது.இந்நிலையில், ராமேஸ்வரம் அருகே, மண்டபம் முனைக்காடு கடற்கரை பகுதிக்கு நேற்று அதிகாலை 04 மணியளவில் இலங்கையைச் சேர்ந்த கண்ணாடி இழை படகு ஒன்று வந்தது. இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மண்டபம் கரையோர போலீசார் படகை மீட்டு சோதனை செய்தனர். படகில் இன்ஜின், டீசல் கேன், பெட்டியில் சிறிது மீன்கள் இருந்தன.இது தொடர்பாக போலீசார் நடத்திய விசாரணையில், 'கைப்பற்றப்பட்ட இலங்கை படகு இன்று அதிகாலை ராமேஸ்வரம் ஓலைக்குடா நரிக்குழி பகுதியில் உள்ள கலங்கரை விளக்கம் வழியாக மண்டபம் கடல்பகுதிக்கு சென்றது தெரிய வந்தது. இது இலங்கை பள்ளிமுனையை சேர்ந்த ஜான்சன் என்பவருக்கு சொந்தமான படகு என்பதும், படகில் வந்த இருவர் கடற்கரையோரத்தில் இருக்கும் முள் காட்டுக்குள் சென்று தலைமறைவானதும் தெரிய வந்தது.

## நசீர் அஹமட்டின்...

செயற் படுத்தும் வகையில், இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நஸீர் அஹமட்டின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இரத்தாகியுள்ள நிலையில், வெற்றிடமாகியுள்ள பதவியை நிரப்பும் வகையில் 12ஆம் இலக்க மட்டக்களப்பு தேர்தல் தொகுதிக்காக ஒன்பதாவது பாராளுமன்ற உறுப்பினராக அலி சாஹீர் மௌலானா நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எரிபொருள் பவுஸரின்...

தலாவ நகர மத்தியில் அமைந்துள்ள சுற்றுவட்டத்தில் பவுசர் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியது. இவ்விபத்தில் தலாவ ஆரம்ப பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் தலாவ கரகஹவெவ பகுதியைச் சேர்ந்த 10 வயதுடைய டபிள்யூ. நிசல்யா நெத்சரனி விமலசேன என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

இவர், இம்முறை ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருந்தவரென பொலஸொர் தெரிவித்தனர். விபத்து நேற்றுமுன்தினம் இரவு (10) 07.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தலாவ போக்குவரத்து பொல ஸார் தெரிவித்தனர்.

கொழும்பு சப்புகஸ்கந்தவிலிருந்து அநுராதபுரம் நோக்கி சென்று கொண்டிருந்த எரிபொருள் பவுசர், தலாவ நகரில் அமைந்துள்ள சுற்றுவட்டத்தில் வலது பக்கமாக சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது. அந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் சிறுமியும் அவரது தாயும் சென்றிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் பவுசருடன் மோதியவுடன் சிறுமி விழுந்து பவுசர் வாகனத்தின் சக்கரத்தில் சிக்கி பலத்த காயமுற்றனர். இதையடுத்து இருவரும் தலாவ பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்நேரத்தில் சிறுமி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

## பல்துறை கலைஞன்...

அவரது பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக இலட்சக்கணக்கான மக்கள் வருகை தந்ததோடு அவர்களிடையே கலைஞர்கள் அரசியல்வாதிகள் மதத் தலைவர்கள் உள்ளிட்ட ரசிகர்களும் அடங்கினர். இறக்கும் போது அவருக்கு வயது 65. அவர் அநுராதபுரம், தலாவ வீதியில் மொரகொடயில் விபத்துக்குள்ளாகி ஒரு வருடம் இரண்டு மாதங்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். எனினும் நீண்ட நாட்களுக்குப்பின் சிகிச்சை பலனின்றி அவர் மரணமானார்.

## வளர்ப்பு நாயை இருவர்...

பின்னர், அவரது வீட்டிற்கு அந்த வளர்ப்பு நாய் வந்துள்ள நிலையில் மறுதினம் கிளிநொச்சியிலுள்ள மற்றுமொரு நபர் தமது வளர்ப்பு நாய் வேறொருவரினால் பலவந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்டு கட்டிவைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளார்.

அதனையடுத்து பொலிஸார் இரு தரப்பினரையும் அழைத்து விசாரணை நடத்தியுள்ளபோதும் இரு தரப்பினரும் இணக்கப்பாட்டிற்கு வரவில்லை. அதனால் வளர்ப்பு நாய் தொடர்பான சிக்கலை நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்ல பொலிஸார் செயற்பட்டுள்ளனர்.

அங்கு வளர்ப்புநாயின் முதலாவது உரிமையாளரான நபர் தாம் வளர்க்கும் நாயின் தாய் கிளிநொச்சியில் வெறு ஒரு இடத்திலிருப்பதாகவும் அந்த வீட்டிலிருந்தே தாம் குறித்த வளர்ப்பு நாயை விலைக்கு கொள்வனவு செய்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், வளர்ப்பு நாயின் உண்மையான உரிமையாளரை இனங்காணும் வகையில் அந்த வளர்ப்பு நாயின் TNA பரிசோதனையை மேற்கொண்டு அந்த அறிக்கையை கிளிநொச்சி நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## இந்திய அரசின்...

அத்துடன், இந்திய அரசின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள 126 வீடுகள், நிகழ்நிலை ஊடாக திறந்து வைக்கப்பட்டு, பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

பதுளை, மாத்தளை மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளிலேயே மேற்படி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் இந்திய அரசால் ஏற்கனவே மலையகத்தில், 04 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. பாரத பிரதமர் மோடி, மலையகம் வந்திருந்தவேளை 10 ஆயிரம் வீடுகளுக்கான உத்தரவாதம் வழங்கப்பட்டது. முன்னர் வீடொன்றுக்கு 10 இலட்சம் ரூபா உத்தேசிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் வீடொன்றுக்கு 28 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் தேனுகா விதானகமகே, பாராளுமன்ற உறுப்பினர் எம். ரமேஸ்வரன், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதியின் பணிமனையின் பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் திரு.சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமதி. அருணி விஜேவர்த்தன, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் திரு. தினுக் கொலம்பகே மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி என பல முக்கியஸ்தர்களும் கலந்துக் கொண்டனர்.

## மன்னார் தேசிய ....

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் பல அமைச்சுக்கள் இவ்வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கவுள்ளதாக தேசிய மீழாத் 2023 ஆம் ஆண்டுக்கான இணைப்பாளரும் , கிராமிய பொருளாதாரா இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

இதன் முதற் கட்டமாக இவ்வருடத்தில் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய துரித அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார தேவைகளுக்கென ரூபா 187.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளன.

வாழ்வாதார அபிவிருத்தியின் கீழ் மன்னார் மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு தலா 03 ஆடுகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.மற்றும் பயிர் செய்கைக்கான உழுந்து, பயறு ஆகியவைகளை வழங்குவதற்கு 21 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சு இந்நிதி ஒதுக்கப்பட்டு,பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.முல்லைத்தீவு, வவுனியா மன்னார் ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளிலுமுள்ள விவசாயிகளுக்கு இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இவற்றை வழங்கினார்.

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலர் பிரிவில் நகர அபிவிருத்திக்காக ரூபா 130 மில்லியன் ரூபா இந்த வருடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடத்துக்காக நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சு மூலம் மேலும் 200 மிலியன்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் கீழ் சிலாவத்துறை முச்சந்தி விரிவாக்கப்பட்டு நகரமும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்

புத்தளம் மரிச்சுக்கட்டி பாதையை மீண்டும் திறப்பதற்கும் அப்பாதைக்கு மாற்று வழியாக கடலோரமாக புத்தளம், எழுவன்குளம் மரிச்சுகட்டி வரை புதிய பாதை ஒன்றை அமைப்பதன் சாத்தியங்கள் பற்றியும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இது பற்றி மன்னாரில் இம்மாதம் 22 இல், திகதி நடைபெறும் தேசிய மீழாத் விழாவை அடுத்து சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் கலந்தாலோசிக்க இருப்பதாகவும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்..

## நௌபர் மௌலவி...

இந்த சாட்சி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி வழக்கு விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னர் நேற்றைய தினம் அது தொடர்பில் கருத்து தெரிவித்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்ரியா ஜயசுந்தர:

2019 ஏப்ரல் 21 இல்,இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பில் 25 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வழக்கின் 17ஆவது பிரதிவாதி மரணமடைந்து விட்டதாகவும் அதற்கிணங்க மேலும் 24 பிரதிவாதிகளுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்: ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவங்களில் கொல்லப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதே இவ்வழக்கின் நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## திட்டம் தீட்டி...

அவர் வெளிநாடொன்றுக்குச் சென்றுள்ளதாகவும் திட்டமிட்ட இந்தச் செயல் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முன்னாள் நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து கோரப்பட்டிருந்த பதவி விலகல் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

தமக்கு அச்சுறுத்தல் இருப்பதாக நீதிபதி இதற்கு முன்னர் எந்த சந்தர்ப்பத்திலும் பொலிசார் மற்றும் நீதிச் சேவை ஆணைக் குழுவுக்கு முறைப்பாடு செய்திருக்கவில்லை என்பதுடன் 23ஆம் திகதி இராஜினாமா கடிதத்தை நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கி 24 ஆம் திகதி அவர் வெளிநாடு சென்றுள்ளார்.

நீதிபதியை பிரதிவாதியாக்கி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிபதியின் மனைவி முல்லைத்தீவு மேலதிக மஜிஸ்திரேட் டி. பிரதீபன் முல்லைத்தீவு பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி. யு. பி. அமரதுங்க முல்லைத்தீவு பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யு. ஏ. எச். என். கே. திலகரத்ன, மாவட்ட நீதிபதியின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர் பொலிஸ் சார்ஜண்ட் கே. எஸ். பிரேமன், பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தராக செயற்பட்டுள்ள பொலிஸ் சார்ஜண்ட் கே. சிவகாந்தன், முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி எம். முதியன், முல்லைத்தீவு பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களான சமரகோன் மற்றும் சாந்தரூவன், முல்லைத்தீவு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் பதிவாளர் பி. சரவணராஜ், நீதிபதியின் நீதிமன்ற அலுவலராக செயற்பட்ட பி. சுவிக்கான், முல்லைத்தீவு மஜிஸ்திரேட் நீதிமன்ற பிஸ்கல் உத்தியோகத்தர் எஸ். சிவக்குமார், முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தியோகத்தர் ஜே. லிண்டன்ராஜா ஆகியோரதும் வாய்மூல முறைப்பாடு இந்த விசாரணையின் போது பதிவுசெய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அவர்கள் அனைவருமே நீதிபதி சரவணராஜா தமக்கு மரண அச்சுறுத்தல் உள்ளதாக எந்தச் சந்தர்ப்பத்திலும் எவரிடமும் தெரிவிக்கவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி அறிக்கைக்கிணங்க முன்னாள் நீதிபதி ரி. சரவணராஜா கடந்த 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 ஆம் திகதி முல்லைத்தீவு மாஜிஸ்திரேட் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தினால் அவருக்கு அனைத்து பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. எந்த சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு அல்லது மரண அச்சுறுத்தல் தொடர்பில் எத்தகைய பிரச்சினையும் இருக்கவில்லை.

முல்லைத்தீவு நீதிபதி கடந்த செப்டம்பர் 24 ஆம் திகதி துபாய்க்கு புறப்பட்டு சென்றுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது. அதற்காக எயார் அரேபியா விமான சேவைக்கான விமான டிக்கெட் குருநாகல் விற்பனை முகவரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அனைத்து நடவடிக்கைகளும் அமெரிக்காவின் தொலைபேசி இலக்கமொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த தொலைபேசி இலக்கம் செயற்படாவிட்டால் மீண்டும் அழைப்பதற்காக கென்யாவின் தொலைபேசி இலக்கமொன்று டிக்கெட் விற்பனை முகவர் ஒருவரால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

விமான டிக்கெட்டுக்கான கொடுப்பனவு கல்முனைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த டிக்கெட்டில் சார்ஜா, நைரோபி, டில்லி ஊடாக ஒகடோபர் 12 ஆம் திகதி மீண்டும் இந்த நாட்டுக்கு வரக்கூடியதாக வழங்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கிணங்க நீதிபதி சார்ஜாவிலிருந்ததன் பின்னர் இதுவரை நைரோபி வரை செல்வதற்கு இதுவரை விமான டிக்கெட்டை உபயோகித்திருக்கவில்லை என்றும் உறுதிப்படுத்தப் பட்டுள்தென்றும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

## இன்றைய பலன்கள்



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

### மேஷம்:



ராகு 12ம் ,கேது 6ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். புதிய வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டு. கடன் தொல்லையிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

### ரிஷபம்:



ராகு 11ம் ,கேது 5ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. எதிர்பார்த்த இடத்தில் இருந்து தேவையான உதவிகள் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை ஓங்கும். சொந்தங்கள் உங்களைத் தேடி வரும்.

### மிதுனம்:



ராகு 10ம் ,கேது 4ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. சுப நிகழ்ச்சிகளுக்கான வாசல் திறக்கும். எதிர்பாராத நற் செய்திகள் மனதை நிறைக்கும். புதிய நட்பு மலரும். பழைய நட்பு தொடர்பு கொள்ளும்

### கடகம்:



ராகு 9ம் ,கேது 3ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. தேவையான பணம் புரட்டிக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும். வெகு காலமாய் வர வேண்டிய பணம் ஓரளவு வசூல் ஆகிவிடும்.

### சிம்மம்:



ராகு 8ம் ,கேது 2ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. உதவிகளும் கிடைக்கும். நிதிப் பற்றாக்குறை அகலும். ஐ.டி தொழில், பத்திரிகைத் தொழில், ஆடிட்டர் தொழில், ஆசிரியர் தொழில் செய்பவர்கள் நல்ல வாய்ப்பு பெறுவார்கள்.

### கன்னி:



ராகு 7ம் ,கேது 1ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. 7 ஆம் இடத்தில் இராசியின் பார்வை வலுவாகப் பதிவதால் கணவன் மனைவி குடும்ப உறவுகள் நல்லபடியாக இருக்கும்.

### துலாம்:



ராகு 6ம் ,கேது 12ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. வீடு, வாகன வசதிகள் சிறப்பாக இருக்கும். புது வாகனங்களை வாங்கும் வாய்ப்பு உண்டு.

### விருச்சிகம்:



ராகு 5ம் ,கேது 11ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. புது வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. அதற்கான தடைகள் நீங்கும். உடன் பிறந்தவர்களால் நன்மை உண்டு.

### தனுசு:



ராகு 4ம் ,கேது 10ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. சிரமங்கள் வந்தாலும் அது சீக்கிரம் விலகிவிடும். குரு 5 எல் இருப்பது மட்டுமல்ல, 9 ஆம் பார்வையும் உண்டு. குரு சாதகமான நிலைகள் உள்ளதால் புதிய முயற்சிகள் பலிக்கும்.

### மகரம்:



ராகு 3ம் ,கேது 6ம் இடத்திலும் உள்ளது. பிரதோஷ விரதம். மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. தொழில், வணிகம் நல்லபடியாக நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். செல்வாக்கும் உயரும்.

### கும்பம்:



ராகு 2ம் ,கேது 5ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. பண வரவு அதிகரிக்கும். கோயில் புண்ணிய ஸ்தலம் தரிசனம் அமையும். உறவினர்கள் வருகை தருவார்கள்.

### மீனம்:



ராகு 1ம் ,கேது 4ம் இடத்திலும் உள்ளது.பிரதோஷ விரதம்.மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. கடன்களின் அளவு குறையும். வரவேண்டிய பாக்கிகள் வந்துவிடும்.




## நவராத்திரி பூஜையை முன்னிட்டு

# மத்திய மாகாணத்தில் க.பொ.த. (சா/த) முன்னோடிப் பரீட்சை ஒத்திவைப்பு

### ஒக். 25 இல் பரீட்சை ஆரம்பம்



மத்திய மாகாணத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டிருந்த கல்வி பொதுத் தராதர சாதாரணதர முன்னோடிப் பரீட்சையை 25ஆம் திகதிக்கு நடத்த மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தீர்மானித்துள்ளார்.

மத்திய மாகாண பாடசாலைகளில் க.பொ.த. (சா/த) முன்னோடிப் பரீட்சை இம்மாதம் 23ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 2ஆம் திகதிவரை நடத்துவதற்கு மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, எதிர்வரும் 15ஆம் முதல் 24ஆம் திகதிவரை நவராத்திரி பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

நவராத்திரி விழா காரணமாக மத்திய மாகாண பாடசாலைகளில் இம்மாதம் 23ஆம் திகதியிலிருந்து நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த க.பொ.த. (சா/த) முன்னோடிப் பரீட்சையை 25ஆம் திகதி முதல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகேயிடம் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்தார். இதனை அடுத்தே இப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை புரிந்துகொண்ட மத்திய மாகாண ஆளுநர் இப்பரீட்சையை பிற்போடுவதற்கு அனுமதி வழங்கியதாக, கல்வி இராஜாங்க அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இந்நிலையில், க.பொ.த. (சா/த) முன்னோடிப் பரீட்சையை எதிர்வரும் 25ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 4ஆம் திகதிவரை நடத்துவதற்கு உரிய அதிகாரிகளுக்கு ஆளுநர் பணித்துள்ளதாகவும், கல்வி இராஜாங்க அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

மத்திய மாகாண ஆளுநரின் இச்செயற்பாடு தமிழ் பாடசாலைகள் மற்றும் இந்துசமய அமைப்புகளின் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜெனிவாவுக்கு பயணமானார்



நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் சுவிஸின் ஜெனிவா நகருக்கு நேற்று புதன்கிழமை (11) பயணமானதாக, அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது.

உலக நாடுகளிலுள்ள தொழிற்சங்கங்கள் பங்கேற்கும் சர்வதேச தொழிற்சங்க மாநாட்டில் பங்கேற்கும் முகமாகவே அமைச்சர் ஜெனிவா பயணமானார்.

இந்த மாநாடு ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவையே நடைபெறும்.

அத்துடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளரும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்கவும் அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் பயணமாகினர்.

இந்த விஜயத்தின் போது, சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பணிப்பாளர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளை அமைச்சர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

'மலையகம் 200' நிகழ்வு தொடர்பாகவும் சர்வதேச சமூகத்துக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடதக்கது.

# லுணுகலை பாடசாலையில் புதிய அதிபர் சர்ச்சை முடிவு

### இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரின் தலையீட்டினால் நடவடிக்கை

பது/ லுணுகலை ஸ்ரீஇராமகிருஸ்ணா (1AB) தமிழ் மகா வித்தியாலயத்தில் நிலவிய புதிய அதிபர் தொடர்பான சர்ச்சை, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் தலையீட்டை அடுத்து முடிவுக்கு வந்துள்ளது.

இந்நிலையில், புதிய அதிபர் நியமனம் இரத்துச் செய்யப்பட்டதுடன், அதிபர் தரம் ஒன்று தகைமை கொண்ட ஒருவர் அதிபராக நியமிக்கப்படும்வரை அப்பாடசாலை பிரதி அதிபர் பதில் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதாக, இராஜாங்க அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்தது. அண்மையில் இப்பாடசாலைக்கு புதிய அதிபர் நியமிக்கப்பட்ட போதும், இந்நியமனத்தில் பாடசாலைச் சமூகத்தினர் திருப்தியடையாத நிலையில், இந்த அதிபர் மாற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர். இது தொடர்பாக கல்வி இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (10) ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முசாமிலை அவர் சந்தித்து நிலைமையை விளக்கியதுடன் கடிதத்தையும் கையளித்தார். இந்நிலையில், புதிய அதிபர் நியமனத்தை ஆளுநர் உடனடியாக இரத்துச் செய்து, பாடசாலையின் பிரதி அதிபரை பதில் அதிபராக கடமையாற்றுமாறும் ஆளுநர் பணித்துள்ளதாக, இராஜாங்க அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.



# இரத்தினபுரி மாவட்டத்தில் மழையால் 945 பேர் பாதிப்பு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**



கடந்த வாரம் மழையுடன் நிலவிய சீரற்ற காலநிலை காலநிலை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் 242 குடும்பங்களைச் சேர்ந்த 945 பேர் பாதிக்கப்பட்டதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

மண்சரிவு அபாயம், மரங்கள் முறிந்து விழுதல் மற்றும் வெள்ளம் உள்ளிட்டவை காரணமாகவே இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அந்நிலையம் தெரிவித்தது.

பெல்மதுளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ரில்ஹேன தோட்டத்தில் 28 குடும்பங்களிலுள்ள 125 பேருக்கு ஏற்கெனவே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாக, அப்பிரதேச செயலகம் தெரிவித்தது.

100 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகும் பட்சத்தில் தங்களின் வீடுகளிலிருந்து உடனடியாக வெளியேறி பாதுகாப்பான இடங்களை நாட வேண்டுமெனவும் இவர்களுக்கு அதிகாரிகள் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தனர்.

# கேகாலை தொழிலாளர்களின் கோரிக்கைக்கு சாதகமான பதில்

**ஊவா சுழற்சி நிருபர்**



கேகாலை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்குகின்ற அலகொல்ல, லகிலேண்ட், கம்பாஹா, கேகீல்ஸ் ஆகிய 4 பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதாக, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ்தெரிவித்தார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கும் பதுளை துணை உதவியாளருக்கும் இடையில் பதுளை உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது.

பங்குதாரர்களுக்கு இலாபக் கொடுப்பனவு வழங்கப்படாமை, முறையற்ற செயற்பாடுகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடியதாகவும் அனைத்துக் கோரிக்கைகளும் உடனடியாக நிறைவேற்றப்படுமென்று உதவி தொழில் ஆணையாளர் உறுதியளித்ததாகவும், அவர் தெரிவித்தார். மேற்படி தோட்டங்களில் நிலவுகின்ற கொடுப்பனவு பிரச்சினைக்கு உரிய தீர்வை பெற கொழும்பு தொழில் ஆணையாளர் காரியாலயத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்

# பதுளை ஓயா ஆற்றில் கார் விழுந்து விபத்து

**ஊவா சுழற்சி நிருபர்**



பதுளை பண்டாரவளை வீதியில், உடுவர ஐந்தாம் கட்டைப் பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை (09) காரொன்று பதுளை ஓயா ஆற்றில் விழுந்துள்ளது.

கொழும்பிலிருந்து பசறை நோக்கிச் சென்ற காரே இவ்வாறு விபத்துக்குள்ளானதாகத் தெரிவித்த பொலிஸார், இந்தக் கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதாகவும் தெரிவித்தனர்.

இந்த விபத்தின் போது, காரில் பயணித்த எவருக்கும் எந்தவித ஆபத்தும் நேரிடவில்லையெனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சப்ரகமுவ மாகாண

# ஊடகவியலாளருக்கு இலவச பயணச்சீட்டு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**



சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கான இலவச பயணச்சீட்டு வழங்கும் நடவடிக்கை சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இரத்தினபுரியிலுள்ள சப்ரகமுவ மாகாண சபை ஆளுநர் அலுவலகத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை (06) ஊடகவியலாளர்களுக்கு இப்பயணச்சீட்டுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட இலவச பயணச்சீட்டை பயன்படுத்தி சப்ரகமுவ மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழுள்ள தனியார் பேருந்துகளில் ஊடகவியலாளர்கள் இலவசமாக பயணத்தை மேற்கொள்ள முடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க கலந்துகொண்டு ஊடகவியலாளர்களுக்கு இலவச பயணச்சீட்டுகளை வழங்கி வைத்தார்.

# பலாங்கொடையில் எலிக்காய்ச்சலால் 52 பேர் பாதிப்பு



**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் இந்த வருடத்தின் ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் எலிக்காய்ச்சல் நோயாளர்கள் 52 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, பலாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரியும் மருத்துவருமான நிலானி கண்டுல தெரிவித்தார். பலாங்கொடை இணைப்புக் குழுக் கூட்டம் பலாங்கொடை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற போதே, அவர் இதனைத் தெரிவித்தார். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் எலிக்காய்ச்சல் நோயாளர்கள் இந்த வருடத்தில் அதிகரித்துள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த இருவர் பொகவந்தலாவையில் கைது

**அக்குறணை குறூப், மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்கள்**



பொகவந்தலாவை பொலிஸ் சோதனைச் சாவடியில் ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் பொலிஸாரினால் நேற்று முன்தினம் (10) கைது செய்யப்பட்டுள்ளனர்.

22, 25 வயதுடைய இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தலா 5 மில்லிகிராம் போதைப்பொருளை இவர்கள் தம்வசம் வைத்திருந்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இப்போதைப்பொருள் பொதி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் கொழும்பிலிருந்து இவற்றை எடுத்து வந்துள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# பண்டாரவளையில் உணவு ஒவ்வாமை: 30 மாணவர்கள் பாதிப்பு

பண்டாரவளை, தூள்கொல்ல பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட மாணவர்கள் உணவு ஒவ்வாமையினால் பாதிக்கப்பட்டதாக, அப்பாடசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பாடசாலையில் நேற்றுக் காலையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு விஷமடைந்ததன் காரணமாகவே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

உணவு ஒவ்வாமையினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பண்டாரவளை, தூள்கொல்ல பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும், அப்பாடசாலை தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# சென்கிளயார், கிறேட் வெஸ்டனில் தாய், சேய் நிலையங்கள் திறப்பு



நுவரெலியா மாவட்ட செயலகத்துக்குட்பட்ட தலவாக்கலை சென்கிளயார் மற்றும் தலவாக்கலை கிறேட் வெஸ்டன் தோட்டங்களில் தாய், சேய் சுகாதார நிலையங்கள் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் (10) திறந்து வைக்கப்பட்டது. யு.என். ஹபிடாட் நிறுவனம் மற்றும் கொரியாவினுடைய கொய்கா சமூக சேவை நிறுவனத்தின் 10 மில்லியன் ரூபா நிதி உதவியில் இந்த நிலையங்கள் புனரமைக்கப்பட்டன. நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலப்படவின் தலைமையில் இதற்கான நிகழ்வு நடைபெற்றது.

(ஆ.ரமேஸ்)

# மின்விசிறியில் சிக்கி உயிரிழந்த மாணவனின் குடும்பத்துக்கு நிதியுதவி

**தலவாக்கலை குறூப் நிருபர்**



புசல்லாவ இந்து தேசிய பாடசாலையில் 10ஆம் ஆண்டில் கல்வி கற்று வந்த ராஜரத்தினம் சதுஷன் (வயது 15) பாடசாலை வகுப்பறையில் மின்விசிறியில் சிக்கி உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து, அம்மாணவனின் குடும்பத்துக்கு மத்திய மாகாண கல்வி மற்றும் கலாச்சார அமைச்சினால் ஒரு இலட்சம் ரூபா நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் கடந்த 4ஆம் திகதி இம்மாணவன் உயிரிழந்திருந்தார்.

இம்மாணவனின் குடும்பத்தினுடைய பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு இந்த நிதி உதவி வழங்கப்பட்டது. மத்திய மாகாண ஆளுநர் லலித்.யூ.கமகேயின் ஆலோசனைக்கமைய, தலைமை அமைச்சு நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவை உயிரிழந்த மாணவனின் பெற்றோரிடம் நேற்று முன்தினம் (10) மத்திய மாகாண கல்வி அமைச்சின் பிரதம செயலாளரும் அமைச்சருமான மேனகா ஹேரத் வழங்கி வைத்தார்.

# கிழக்கின் குரல்



## தாய்மார் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்கு செல்வதால் குழந்தைகள் நிலைமை அவலம்

'இரண்டு வயது குழந்தைகளின் தாய்மார்' என்னும் வரையறை அதிகரிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தல்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)



இரண்டு வயதுடைய குழந்தைகளைக் கொண்ட தாய்மார்கள் தொழிலுக்காக வெளிநாடு செல்வதால் குழந்தைகள் உரிய பராமரிப்பின்றி உடல், உளரீதியாக பாதிக்கப்படுகின்றனர்.

எனவே பாதுகாப்பு கருதி வயதெல்லையை தீர்மானிக்க வேண்டுமெனவும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜேகதீசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொழில் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சின் கிழக்கு மாகாணத்துக்கான முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், 'இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் வெளிநாடு செல்லத் தடை' என்ற நடைமுறை காணப்படுகின்றது.

எனினும் இரண்டு வயதுடைய குழந்தைகளின் தாய்மார்கள் வெளிநாடுகளுக்கு தொழில் தேடி செல்வதனால், அவர்களுக்கான பராமரிப்பின்றி உடல், உளரீதியாக பாதிக்கப்படுகின்றனர். பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு வயதெல்லையை தீர்மானிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சரிடம் அவர் கோரிக்கை விடுத்தார். மீளாய்வுக் கலந்துரையாடலில் பங்கேற்ற இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தலைமையிலான அதிகாரிகள், திட்டங்களை அமுல்படுத்துவதில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்பன தொடர்பாக கலந்தாலோசித்தார்.

இதன்போது மாவட்ட, பிரதேச மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அமைச்சின் செயற்றிட்டங்களில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் ஆர்.வி.விமலவீர, உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், அமைச்சின் பணிப்பாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## வீதி சட்டதிட்டங்களை கடைப்பிடிக்குமாறு வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தல்

(ஒலுவில் விசேட நிருபர்)

நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் போக்குவரத்து சட்ட திட்டங்களை கடைப்பிடித்து வாகனங்களை செலுத்துமாறு நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எம். முகம்மட் நஜ ீப் அறிவித்துள்ளார். போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறி வாகனங்களை செலுத்தியதனால் அண்மைக்காலமாக அதிகமான வீதி விபத்துக்களும் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வாகன ஓட்டுனர்கள் வீதி ஒழுங்கினையும், நாட்டின் சட்டதிட்டங்களையும் பேணி வாகனங்களை செலுத்துமாறு கேட்டுள்ளார். போக்குவரத்து நடைமுறைகளை மீறும் வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் பாதுகாப்பு தலைக்கவசம் அணிந்து, சாரதி மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்களை தன்வசம் வைத்திருக்குமாறும் கேட்டுள்ளார்.

உள் வீதிகளில் மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் தலை கவசமில்லாமல் செல்வதால் அதிகமான விபத்துக்கள் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களை செலுத்த வேண்டாமெனவும், வாகன சாரதிகள் வீதி சமிஞ்சைகளை அவதானித்து வாகனத்தை செலுத்துமாறும் கேட்டுள்ளார். அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள்கள் திருட்டுப் போவதால் வீதிகள் மற்றும் வீடுகளில் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி வைக்கும் போது பாதுகாப்பாக வைக்குமாறு கேட்டுள்ளார்.

## விழிப்புணர்வு செயலமர்வு

(சாய்ந்தமருது விசேட ,அக்கரைப்பற்று வடக்கு தினகரன்நிருபர்கள்)

வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் மாணவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வொன்று கல்லூரியின் தொழில் வழிகாட்டல் பிரிவு பொறுப்பாளர் முபாறக் றுமைஸ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நுகர்வோரின் உரிமைகள் , பொறுப்புகள்,சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்களுடன் தற்போதைய சந்தையிலுள்ள பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்டதிட்டங்கள் சம்பந்தமாக மாணவர்களுக்கு விளக்கக்காட்சி ஊடாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி இஷட் எம் ஸாஜீத் மற்றும் புலன் விசாரணை அதிகாரி ஏ.ஏ.ஏ ஸர்பான், என்.எம் றிப்கான் ஆகியோருடன் கல்லூரி விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

## திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(கிண்ணியா மத்திய நிருபர்)



தி ருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரள, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா, பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃறுப் தலைமையில் திருகோணமலை மாவட்டச் செயலக அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் திருகோணமலை மாவட்டத்தில் புண்ணிய ஸ்தலங்களாக குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க காணிகளை துப்புரவு செய்வது தொடர்பான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல், சித்த ஆயுர்வேத கல்லூரி ஆரம்பம், கிழக்குப் பல்கலைக்கழகம், கந்தளாய் வேந்தரசன்புர கல்லூரியின் காணிப்பிரச்சினைக்கு தீர்வு, அதனைச் சூழவுள்ள மக்களின் காணிப்பிரச்சினைகள், நிர்மாணப்பணிகளுக்கு காணி ஒதுக்கீடு செய்தல் உள்ளிட்ட மாவட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. இதன்போது, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு. சர்மிந்த ஹெ ட்டியாராச்சி, கிழக்கு மாகாண பிரத ம செயலாளர் ஆர்.எம். பி.எஸ். ரத்நாயக்க மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பின்தங்கிய கிராமப்புற பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(தம்பலகாமம் குறூப் நிருபர்)



திருகோணமலை ரோட்டரி கழகத்தால் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமப்புற பாடசாலையான உப்பாறு வைஷ்ணவி வித்தியாலயத்துக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. திருகோணமலை ரோட்டரி கழகத்தின் தலைவர் எஸ்.சௌந்தரராஜன், ரோட்டேரி கழக அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். விழாவுக்கு பாடசாலை அதிபர் தலைமை வகித்தார். திருகோணமலை ரோட்டரி கழகத்தின் தலைவர் எஸ். சௌந்தரராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

## சம்மாந்துறையில் காட்டு யானைகள் அட்டகாசம் !

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

காட்டு யானையொன்று அதிகாலை வேளையில் சம்மாந்துறை 8ஆம் பிரிவிலுள்ள கிராமத்திற்குள் புகுந்து வீட்டு மதில்களையும் ,நெல் களஞ்சியசாலைகளையும் உடைத்து அங்கிருந்த நெல் மூட்டைகளுக்கு பலத்த சேதத்தை விளைவித்துள்ளது. செல்லும் வழியில் பலன்தரும் வாழை, தென்னங்கன்றுகள் மற்றும் பயிர்களையும் சேதப்படுத்தியுள்ளது. சிறுபோக வேளாண்மை அறுவடை முடிந்ததுடன் ஆரம்பமான காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பிரதேச மக்கள் இரவு வேளையில் நித்திரையின்றி பீதியுடன் தமது காலத்தை கடக்க வேண்டியுள்ளது.



அக்கரைப்பற்று "மஸ்ஜிதுல் இஹ்சான்" பள்ளிவாசலின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெறும் அம்பாறை மாவட்ட முன்னாள் வனபரிபாலன உத்தியோகஸ்தர் எம்.ஏ இப்னு சுஹூத்தின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, அண்மையில் (07) பள்ளிவாசலின் புதிய தலைவர் எஸ்.ஏ. ரீனாஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டோர்களை படத்தில் காணலாம்.

(படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



இலங்கை இராணுவத்தின் 241வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் எல். எஸ்.டீ.என்.பதிரத்ன தலைமையிலான பணியாளர்களின் மனிதாபிமான சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று இராணுவமுகாமின் கடற்கரை திடலில் ஒன்றுகூடலாக நடைபெற்றது.24ஆவது காலாட்படை பிரிவு கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. சிவில் அமைப்புகளின் தலைவர் டாக்டர் கே.எல்.எம் நக்பார் நினைவுப்பரிசொன்றை பிரிகேடியர் எல்.எஸ்.பதிரத்னவுக்கு வழங்குவதை படத்தில் காணலாம்.

(படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

## வீதியோர வடிகான் மூடிகளிள் மீது வியாபாரத்தில் ஈடுபட தடை

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி நகரசபை எல்லைக்குட்பட்ட வீதியோரங்களில் வடிகான் மூடிகளில் வைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் உடனடியாக தமது வியாபார பொருட்களை அங்கிருந்து அகற்றுமாறு காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி ரிப்கா ஸபீன் அறிவித்துள்ளார். இல்லையேனில் இதுதொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். குறிப்பாக வீதியோரங்களில் வடிகான் மூடிகளில் வியாபாரப் பொருட்களை வைத்து வியாபாரம் செய்யும் வியாபாரிகள் அவற்றை உடனடியாக அகற்றி விட வேண்டுமென காத்தான்குடி நகர சபையினால் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வீதியோரங்களிலுள்ள வடிகான்களில் வைத்து வியாபாரம் செய்வதால் பெரும் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதுடன் பொதுப் போக்குவரத்துக்கும் பாதசாரிகளுக்கும் பாரிய இடையூறுகள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். எனவே வியாபாரப் பொருட்களை உடனடியாக அகற்றி விடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தவறும் பட்சத்தில் நகர சபை கட்டளைச் சட்டம் 255ம் அத்தியாயம் 49ஆம் பிரிவுக்கமைய வீதி ஒழுங்குகளை ஒழுங்குபடுத்தும் பொருட்டு காத்தான்குடி நகரசபை, காத்தான்குடி போக்குவரத்து பொலிஸாரின் ஒத்துழைப்புடன் வியாபாரப் பொருட்கள் அகற்றப்படுவதோடு வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தொலைபேசி விபரக்கொத்து

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவினால் தயாரிக்கப்பட்ட தொலைபேசி விபரக்கொத்து வெளியிடப்பட்டுள்ளது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.அப்துல் வாஜித் மற்றும் பிரிவுத்தலைவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம். முஜீப், பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகியோருக்கு தொலைபேசி விபரக்கொத்தை வழங்கி வைத்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம்.முஜீப் இதற்கான பணிகளை முன்னெடுத்திருந்தார். தொலைபேசி விபரக்கொத்தில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார சேவைகள் பணிமனை உட்பட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்கள், நிறுவனத்தலைவர்கள், உத்தியோகத்தர்களின் தொடர்பு இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரிகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரி ஆசிரியர்களுக்கு மாணவர்களினால் சின்னம் சூட்டி நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

(படம் இறக்காமம் தினகரன் நிருபர்)

# வடக்கின் உதயம்

## வடக்கில் தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்த 575 பேருக்கு சான்றிதழ்

சாவகச்சேரி விசேட நிருபர்

வடமாகாணத்தில் முறைமைசார் தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்த 575 பேருக்கு தகைமைச் சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு, சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்றது.

வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேனவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கலந்துகொண்டார்.

மேலும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், ILO நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி தோமஸ், தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பணிப்பாளர் அமரசேகர, யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். இப்பயிற்சிநெறியானது ILO சர்வதேச நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் வடமாகாண ஆளுநர் மற்றும் மாகாண பிரதம செயலாளரின் வழிகாட்டுதலின் கீழ் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.



## முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலைய சேவை ஒக்டோபர் 24 இல் ஆரம்பம்

ஓமந்தை விசேட நிருபர்

முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்தை எதிர்வரும் 24ஆம் திகதி முதல் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், பிரதேச செயலாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையினர், உள்ளூராட்சி அதிகார சபையினர், கரைதுறைப்பற்று பிரதேச சபையினர், தனியார் போக்குவரத்து மற்றும் அரச போக்குவரத்து சபையினர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட பலர் முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்தை நேற்று முன்தினம் (10) சென்று பார்வையிட்டனர்.



இந்நிலையிலேயே, பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இந்த விடயத்தை தெரிவித்தார்.

நகர திட்டமிடல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்தின் முதலாம் கட்ட புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாகிய போதிலும், இதுவரையில் அப்பேருந்து நிலையம் இயங்காமல் உள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும் தாம் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைத்ததை தொடர்ந்து, இப்பேருந்து நிலையத்தை புனரமைப்பதற்காக இரண்டாம் கட்டமாக 90 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

### இலங்கையில்

## இந்திய இழுவை படகுகளுக்கு ஒரு செக்கன் கூட இடமில்லை

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

சாவகச்சேரி விசேட நிருபர்



இந்திய இழுவைப் படகுகளுக்கு இலங்கையில் ஒரு செக்கன் கூட இடமில்லையென்பதுடன், இதுவே அரசாங்கத்தின் முடிவெனவும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

சீன அரசாங்கத்தின் நன்கொடையில் கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரியில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"இலங்கையில் சிறிது காலமாக இந்திய இழுவைப் படகுகளின் வரவு குறைவாகக் காணப்படுவதுடன், எமது கடற்றொழிலாளர்கள் இந்தியாவுக்கு படகில் சென்று தமிழ் நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சரை சந்தித்து தமது நிலைமையை விளங்கப்படுத்தியதன் விளைவால் இந்தியப் படகுகளின் வருகை குறைவடைந்துள்ளது.

இதேவேளை, வடமராட்சி உள்ளிட்ட இடங்களில் குழுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட கடற்றொழிலாளர் பிரதிநிதிகளை இந்தியாவுக்கு அனுப்பி வைத்து, எமது கடற்றொழிலாளர்களின் பிரச்சினையை தெளிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது" என்றார்.

## மல்லாவி மத்திய கல்லூரியில் கண்காட்சி



ஓமந்தை விசேட நிருபர்

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் தொழில் முனைப்புடன் கூடிய பாடசாலைத் தோட்டக் கண்காட்சி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (10) ஆரம்பமாகி நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் .சார்ள்ஸின் ஆலோசனைக்கமைய வடமாகாண விவசாயத் திணைக்களத்தினால் தொழில் முயற்சியுடன் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது, தெரிவு செய்யப்பட்ட 67 பாடசாலைகளுக்கு தலா 150,000 ரூபா வவுச்சர்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன

இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன், வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வடமாகாண சுற்றுலா பணியக ஏற்பாட்டில் இலவச பயிற்சிநெறி

யாழ். விசேட நிருபர்

யாழ். வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுற்றுலாத்துறை சார்ந்த சேவை வழங்குநர்களின் திறன் விருத்திக்கான இலவச பயிற்சிநெறி வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் ஏற்பாட்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக, தெல்லிப்பழை பிரதேச செயலகம் தெரிவித்தது.

முச்சக்கரவண்டி, வாடகைக் கார், சிறிய மற்றும் பெரிய வான் உரிமையாளர்கள், சாரதிகள், நினைவுச்சின்ன தயாரிப்பாளர்கள், கைவினைப்பொருள் உற்பத்தியாளர்கள், தங்குமிட உரிமையாளர்கள், உணவக உரிமையாளர்கள், சுற்றுலா வழிகாட்டிகள், சுற்றுலாத்துறை சேவை வழங்குநர்கள் ஆகியோர் இப்பயிற்சியில் பங்குபற்றி பயனடைய முடியும்.

இதன்போது சுற்றுலாத்துறை சேவை வழங்குநர்கள் தமது திறமைகளை விருத்தி செய்வதுடன், சேவைத் தரத்தையும் அதிகரிக்க முடியுமென்பதுடன், சுற்றுலாப் பொலிஸ், சுகாதாரப் பரிசோதகர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், சிறந்த தொழில் முயற்சியாளர்களினுடைய வெற்றிப்பயண அனுபவப்பகிர்வையும் வடமாகாண சுற்றுலாப் பணியகத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டையையும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும், தெல்லிப்பழை பிரதேச செயலகம் தெரிவித்தது.

எனவே, இப்பயிற்சியில் பங்குபற்றுவதற்கு ஆர்வமுடையோர் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்வதுடன், இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 021 221 7311 அல்லது 0778449742 எனும் இலக்கங்களினூடாகவோ அல்லது tourismmorth.srilanka@gmail.com எனும் மின்னஞ்சலினூடாகவோ தொடர்புகொள்ள முடியுமெனவும், தெல்லிப்பழை பிரதேச செயலகம் மேலும் தெரிவித்தது.

### யாழ். புனித மரியாள் பாடசாலையில்

## ஆசிரியர் தின நிகழ்வு



யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

யாழ். புனித மரியாள் வித்தியாலய ஆசிரியர் தின நிகழ்வு, அதிபர் கெனத் மரியான் தலைமையில் அண்மையில் அவ்வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அப்பாடசாலை க.பொ.த. (சா/த) மாணவர்களின் பெற்றோர் மற்றும் ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், யாழ். புனித மரியாள் ஆலய பங்குத்தந்தை ஆனந்தகுமார் அடிகளார் பிரதம அதிதியாகவும் யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை விரிவுரையாளர் எஸ்.சத்தியன் சிறப்பு அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வின் போது, கலை நிகழ்வுகளும் வாழ்த்துரைகளும் நடைபெற்றன.

அத்துடன், அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் நினைவுப்பரிசில் வழங்கி தமது அன்பை வெளிப்படுத்தினர்.

## துன்னாலையில் கைக்குண்டுடன் இருவர் பொலிஸாரால் கைது

நாகர்கோவில் விசேட, கரவெட்டி தினகரன், யாழ். விசேட நிருபர்களை



கைக்குண்டொன்று மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் இலக்கத் தகடற்ற மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் யாழ். வடமராட்சி, துன்னா லை பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (10) பொலிஸாரினால் இரவு 10.00 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துன்னாலை, புளியங்கியான் சந்தியினூடாக போதைப்பொருள் கடத்தப்படுவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, நெல்லியடிப் பொலிஸாரினால் சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது, இலக்கத் தகடற்ற மோட்டார் சைக்கிளொன்றில் பயணித்தவர்களை பொலிஸார் வழிமறித்து விசாரணை செய்த போது, இச்சந்தேக நபர்களிடம் கைக்குண்டு மற்றும் ஹெரோயின் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து துன்னாலை, குடவத்தையைச் சேர்ந்த 19, 32 வயது இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இச்சந்தேக நபர்களிடம் நெல்லியடி பொலிஸார் தொடர்ந்து விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

### மன்னார் ஆஸ்பத்திரியில் இளைஞருக்கு

## நெஞ்சறை சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முன்னெடுப்பு

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் பொது வைத்தியசாலையில் 35 வயது இளைஞர் ஒருவருக்கு சுமார் 3 மணித்தியாலங்களாக நெஞ்சறை சத்திர சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு, அவரது உயிர் காப்பாற்றப்பட்டுள்ளதாக, அவ்வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழன் (05) இரவு 8.30 மணியளவில் மன்னார் பொது வைத்தியசாலையில் இந்த இளைஞர், வலதுபக்க நெஞ்சில் கத்திக் குத்து காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்த இளைஞரின் நெஞ்சுக்குழியினுள் ஏற்பட்ட தொடர் குருதிப்பெருக்கை தொடர்ந்து நெஞ்சுக்கூட்டை திறந்து சத்திர சிகிச்சை (Thoracotomy) வைத்தியர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

பொது சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் எம்.மதுரகீதன் தலைமையிலான சத்திர சிகிச்சை அணியினரும் உணர்விழப்பியல் மற்றும் அதிதீவிர சிகிச்சை நிபுணர் வைத்தியர் ஜூட் பிரசாந்தன் தலைமையிலான உணர்விழப்பு அணியினரும் இணைந்து இந்த சத்திர சிகிச்சையை மேற்கொண்டிருந்தனர்.

## சாவகச்சேரியில் இளைஞரை கட்டி வைத்துவிட்டு உடைமைகள் திருட்டு

### கைதான 6 பேருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி விசேட, யாழ். விசேட நிருபர்கள்

யாழ். சாவகச்சேரியில் 32 வயது இளைஞர் ஒருவரைக் கட்டி வைத்துவிட்டு, 10 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளை திருடிய மற்றும் இத்திருட்டுச் சம்பவத்துக்கு உதவிய 6 பேரை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாத இறுதியில் மேற்படி இளைஞருடன் 3 பெண்கள் உட்பட இருவர் சாதுரியமாக உரையாடி, தனங்கிளப்புக்கு இளைஞரை அழைத்துச் சென்று அங்கு கட்டி வைத்துவிட்டு, இளைஞரிடமிருந்த 5 பவுண் தங்கநகைகள், 2 கையடக்கத் தொலைபேசிகள், மணிக்கூடு, பணம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாரிடம் பாதிக்கப்பட்ட இளைஞர் செய்த முறைப்பாட்டுக்கமைய விசாரணையை முன்னெடுத்த பொலிஸார், கனகராயன்குளத்தைச் சேர்ந்த இருவரையும் சிலாபத்தைச் சேர்ந்த மூவரையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (10) கைது செய்தனர்.

அத்துடன், இளைஞரின் நகைகளை உருக்கி வவுனியாவிலுள்ள நகைக் கடையொன்றில் விற்பனை செய்ததை தொடர்ந்து அதனை மீட்ட பொலிஸார், அந்நகைக்கடை உரிமையாளரையும் கைது செய்து நேற்று முன்தினமே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, இவர்கள் 6 பேருக்கும் விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## விபத்தில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய அதிகாரி பலி

நாகர்கோவில் விசேட நிருபர்



பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் சமூக பொலிஸ் பிரிவில் கடமையாற்றி வரும் பெண் பொலிஸ் உத்தியோகத்தரான தம்புள்ளையைச் சேர்ந்த 24 வயதுடைய சாந்திமா ரணசிங்க, விபத்தில் அகப்பட்டு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (10) மாலை உயிரிழந்துள்ளார்.

தம்புள்ளையில் நேற்று முன்தினம் முற்பகல் 11.00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் இவர் சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதி இந்த விபத்து இடம்பெற்றதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த இவர், தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தனது விடுமுறையில் கடந்த திங்களன்று (09) பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து இவர் வீடு சென்றதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# மலையக தமிழர் கல்வி மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் நடேசன் சுந்தரேசன்

**"சமூகப் பணிகளுக்காக இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் பல்வேறு விருதுகளையும் சமூக சேவைச் செம்மல் போன்ற பல பட்டங்களையும் பெற்றவர்"**




அவுஸ்திரேலியாவிலுள்ள மலையக தமிழர் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் ஸ்தாபகத் தலைவர் நடேசன் சுந்தரேசன் மலையக கல்வி மேம்பாட்டுக்காக அரும்பணியாற்றி வரும் ஒருவர். அவரது சமூகப்பணிகளுக்காக கண்டி குண்டசாலை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தினால் ஞானதீப விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். இவருடைய சமூகப் பணிகளுக்காக இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் பல்வேறு விருதுகளையும் சமூக சேவைச் செம்மல் போன்ற பல பட்டங்களையும் பெற்றவர்.

இந்திய அரசாங்கம், இந்திய பாண்டிச்சேரி சமூக அமைப்பு டெல்லி தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புகளினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டவர். விக்டோரியா பன்முக கலாசாரம் (வி. எம். சி) என்ற அமைப்பின் ஆலோசனை சபையில் பதவி வகிக்கிறார். அவுஸ்திரேலியாவில் தமிழர் கூட்டமைப்பு என்ற அமைப்பினை ஸ்தாபித்து செயற்பட்டு இதன் உப தலைவராகவும் தலைவராகவும் இருந்து தமிழ் சமூகத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்போடு சேவையாற்றி வருபவர். திறந்த ஆளுமை மிக்க சமூப் பணியாளர். மலையக தமிழர் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் ஸ்தாபகர் தலைவர் நடேசன் சுந்தரேசன் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**கேள்வி; உங்களது குடும்பப் பின்னணி பற்றி வாசகர்களுக்கு கூறுவீர்களா?**

**பதில்;** எனது பெயர் சுந்தரேசன். ஹப்புத்தளை நகரில் 1954 இல் பிறந்தேன். தந்தை பெயர் நடேசப் பிள்ளை. தாயார் பெயர் சாந்திமதி அம்மா. என்னுடைய உடன் பிறப்புக்கள் ஐந்து பேர். இதில் மூத்தவர் அண்ணன் விஜயசேகரன் மருத்துவர். அவர் தெற்கு ஆபிரிக்காவில் பல ஆண்டுகள் வேலை செய்தவர். தம்பி ஸ்ரீதரன். அவர் பொறியியல் துறையில் கலாநிதி பட்டம் பெற்றவர். அவர் அமெரிக்காவில் வசிக்கிறார். தங்கைமார்கள் இருவர். அவர்கள் இருவரும் இந்தியாவில் வசிக்கிறார்கள்.



எனது தந்தை . இந்தியா வம்சாவழியைச் சேர்ந்த இரண்டாவது தலைமுறை. நான் மூன்றாவது இந்தியா வம்சாவழி. தமிழ் நாட்டில் நாங்கள் தின்னன் ஊர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். தின்னன் ஊர் நடேசப் பிள்ளை என்றுதான் தமிழ் நாட்டில் அப்பாவை அழைப்பார்கள். அவர் இலங்கையில் உழைப்பதற்காக வந்தவர். அவர் தாய் மாமா இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்து வந்து மஸ்கெலியாவில் குடியேறி ஐந்து பிள்ளைகளையும் பட்டதாரிகளாக ஆக்கியுள்ளார். இது அக்காலத்தில் பெரிய விடயம். அவர் வியாபாரத்திலும் மிகவும் புகழ்பெற்று வாழ்ந்த ஒருவர். தின்னன் ஊர் சேகர் நடேசப் பிள்ளை என்றால் யாருக்கும் நன்கு தெரியும். அவருடைய இரண்டாவது மகன்தான் நான்.

**கேள்வி; உங்களுடைய கல்வித் தகைமை பற்றி கூறுவீர்களா?**

**பதில்;** கொழும்பில் புனித பெனடிக் கல்லூரியில் ஆரம்ப முதல் 13 ஆம் ஆண்டு வரை கல்வி கற்றேன். அப்பொழுது அங்கு ஆறாம், ஏழாம் ஆண்டு படிக்கின்ற கால கட்டத்தில் கற்பித்த ஆசிரியர்கள் எனக்கு முதல் அடித்தளத்தை இட்டார்கள். எனது அக்கா தமிழ் நூல்களை வாசிப்பதில் அதிகம் ஆர்வத்தை ஏற்படுத்தினார். பொன்னியின் செல்வன், கரித்துண்டு போன்ற நாவல்களை எல்லாம் நான் சிறிய வயதில் எட்டாம் ஆண்டு கல்வி கற்கும் போதே வாசித்து முடித்து விட்டேன்.

பாடசாலை காலங்களில் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் விவாதப் போட்டிகளில் பங்கு பற்றுதல், நாடகங்களில் நடித்தல் போன்ற பல கலை கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றுவேன். பாடசாலையின் கலை இலக்கிய மன்றத்தின் செயலாளராகவும் தலைவராகவும் கடமையாற்றியுள்ளேன்.எமது பாடசாலையின் வெள்ளி விழா சிறப்பு மலருக்கு இதழ் ஆசிரியராகவும் இருந்துள்ளேன். தமிழுக்கு தொண்டாற்றக் கூடிய ஆர்வம் எனக்கு சிறு வயதிலேயே வந்துவிட்டது.

பாடசாலைகளில் கல்வி பயிலும் போதும் சமூகப் பணிகளில் ஈடுபடத் தொடங்கி விட்டேன். பாடசாலையின் மாணவத் தலைவராகவும் மாணவர்களுடைய ஒழுக்காற்று விடயங்களில் கவனம் செலுத்தி மாணவத் தலைமைத்துவ பண்புகளை பேணி ஒரு முன்மாதிரி மாணவனாக இருந்து கல்வி கற்றேன்.

1971 இல் கூட்டுக் கல்வி மன்றம் என்ற அமைப்பை உருவாக்கி அந்த அமைப்புக்கு முதல் செயலாளராகவும் பிறகு தலைவராகவும் இருந்தேன். அருட்தந்தை தனிநாயகம் அடிகளார் அவர்கள் எங்கள் மன்றத்திற்கு போசகராக இருந்தார். அவரை நாங்கள் கண்டியில் சந்தித்தோம். 1972 இல் அப்பொழுது க. பொ. த உயர் தரம் கல்வி கற்று விட்டு பட்டப் படிப்புக்காக இந்தியாவுக்குச் செல்லும் போது ஒரு பாராட்டுச் சான்றிதழ் தந்தார்.

**கேள்வி; உங்கள் திருமண வாழ்க்கை பற்றி?**

**பதில் ;** 1978 இல் பொறியியல் துறையில் படிப்பை முடித்துக் கொண்டு நாட்டுக்கு வந்திருந்தேன். 1983இல் திருமணம் பந்தத்தில் இணைந்து கொண்டேன். மனைவி பெயர் வாசுகி பிரவியாப்பிள்ளை. அவர் தியத்தலாவையைச் சேர்ந்தவர். அவர்களுக்கு நிறைய தோட்டம் இருந்தது. அவர் வீட்டில் இருந்து பார்த்தால் தியத்தலாவை இராணுவப் பயிற்சி முகாம் நன்கு தெரியும். அது 400 ஏக்கர் தேயிலைத் தொழிற்சாலையுடன் அமைந்திருந்தது. எனக்கு இரு பிள்ளைகள். மகள் லண்டனில் இருக்கிறார். பெயர் நிரோசினி. அவர் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் படித்தவர். இரு பட்டங்கள் உடையவர். மருமகன் முரளி சோம சுந்தரம். அவர் சத்திர சிகிச்சை மருத்துவர். மகன் ஹரிகரன் சுந்தரேசன். கென்பராவில் அரச நிறுவனத்தில் உயர் பதவி வகித்து வருகிறார். அவர் சமீபத்தில் திருமணம் செய்து கொண்டார்.

**கேள்வி; இந்தியா சென்று என்ன தொழில்களில் ஈடுபட்டீர்கள்?**

**பதில்;** இந்தியா சென்று பெங்களூரில் ஜேர்மன் நாட்டுக் கம்பனியில் 10 ஆண்டுகளாக ஒரு பொறியியலாளராகக் கடமையாற்றினேன். மீண்டும் எனது தந்தையார் தன்னுடைய வியாபாரத்தை கவனத்திற் கொள்ள யாருமில்லை என்று என்னை இலங்கை வரும்படி அழைப்பு விடுத்தார். தந்தையின் இலங்கை வியாபாரத் துறையில் கவனம் செலுத்தியதோடு சமூகத் தொண்டுப் பணிகளிலும் ஈடுபட்டேன்.

**கேள்வி; மலையக மக்களுக்கு சமூகப் பணியாற்றும் ஆசை எவ்வாறு ஏற்பட்டது?**

**பதில்;** அக்காலத்தில் ஆறு நாட்டு வேளாளர்களுடைய சபை இருந்தது. இந்தச் சபை 1980 களில் ஆரம்பிக்கப்பட்டது. அது சிறியதொரு அமைப்பாக இயங்கியது. எங்களுடைய சமூகத் தலைவர்கள் பங்காற்றினார்கள். அது மீளவும் புதுப்பொலிவுடன் முன்னெடுப்பதற்கு பங்களிப்புக்கள் செய்தேன். நானும் இன்று நீதியரசராக இருக்கின்ற துரைராசாவும் சேர்ந்து இயங்கினோம். துரைராசா அவர்கள் அப்பொழுது சாதாரண சட்டத்தரணி. மலையக மக்களின் கல்வி அபிவிருத்திற்காக பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு அப்பொழுதே தோன்றியது. நான் பெங்களூரில் இருக்கும் போது ரொட்டரிக் கழகம், யேசுஸ் கழகம் ஆகிய சங்கங்களுடன் எனக்கு தொடர்பு இருந்தது. அகில இலங்கை இளம் வாலிபர் யேசுஸ் கழகத்தில் திறன்படச் செயலாற்றி செயலாளராகவும் அங்கு பதவி வகித்துள்ளேன்.







**கேள்வி; உங்களுடைய சமூகப்பணிகள் தொடர்பில்...?**

**பதில் ;** சென்னைப் பொறியியல் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டப் படிப்பினை மேற்கொள்ளும் போது பீடாதிபதியாக பேராசிரியர் தாமோதரம் பிள்ளை இருந்தார். அவருடன் சேர்ந்து கண் சத்திர சிகிச்சை முகாமொன்றை அங்கு நடத்தினோம். அவருக்கு இலவசக் கண்ணாடி வழங்குதல், வெண்படலம் உள்ளவர்களுக்கு சத்திர சிகிச்சைக்கான வழிகாட்டுதல் வழங்குதல் போன்ற சமூகப் பணிகளிலும் ஈடுபட்டேன். இவை பற்றிய செய்திகள் மாலை முரசு பத்திரிகையில் வெளிவந்தன.

இப்படியான வெளிநாட்டு அனுபவங்கள் இலங்கையிலுள்ள இந்த அமைப்பை இயக்கப் போதுமானதாக இருந்தது. இந்த அமைப்பின் மூலம் இலங்கை மலையக தமிழ் மக்களின் உயர் கல்வி வழிகாட்டல்கள் திட்டங்கள் மேற்கொண்டோம். ரொட்டரிக் கழகத்தில் சேர்ந்து பங்காற்றினேன். யேசுஸ் இளைஞர் அமைப்பின் ஊடாக யப்பான் நாட்டுக்குச் சென்றேன். நிறைய சமூகப் பங்களிப்புக்களில் ஈடுபட்ட அனுபவங்கள் உள்ளன.

**கேள்வி; அவுஸ்திரேலியாவில் மேற்கொள்ளும் சமூகப் பணிகள் குறித்து ?**

**பதில்;** அரசியல் சூழல், மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சினை போன்ற பிரச்சினைகள் நாட்டில் நிலவின. இத்தகைய சூழல் காரணமாக 1990 களில் அவுஸ்திரேலியா சென்றேன். ஆறு வருடங்கள் சிட்னியில் இருந்தேன். பிறகு மெல்போர்ன் சென்று அங்கு தமிழ் சங்கத்தை உருவாக்கி அதன் தலைவராக இருந்தேன்.

23 வருடத்தில் நான் 15 வருடங்கள் தலைவராக இருந்தேன். இப்பொழுது வெள்ளி விழாவை நோக்கிப் பயணித்துக் கொண்டு இருக்கின்றோம். தற்போதைய புதிய தலைவர் பாடுமீன் ஸ்ரீஸ்கந்தராஜா ஆவர். இந்து சமய சேவைகளையும் அங்கு தொடர்ந்து செய்து வருகின்றேன். கோயில்களுக்கு அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெற்றுக் கொடுப்பதே என்னுடைய முக்கியமான பணியாகும். இந்து சமய அமைப்பு ஒன்றை ஸ்தாபித்து அதன் மூலம் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதி இந்துக் கோயில்களுக்கு நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுத்து வருகின்றேன்.

2009 உலக சமய கலாசார மாநாடு நடத்தப்பட்டது. இப்படி இந்து சமயத்தைப் பாதுகாப்பதற்காக பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளேன். ஐயமீட்டுண் நிறுவனத்தின் தலைவர் முரளியும் நானும் நண்பர்கள். இந்த சமூகப் பணிகளுக்கு உணர்வைத் தூண்டியவராக நான் அவரை மதிக்கின்றேன். அவருடைய சங்கத்திலும் நான் ஓர் அங்கத்தவர். வடக்கிலும் கிழக்கிலும் வெளிநாட்டில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் நிறைய உதவி செய்கிறார்கள். ஏன் நான் பிறந்த மலையக மக்களுக்கான மனிதாபிமான தொண்டு பணிகளை ஆற்றக் கூடாதா ? என்ற கேள்வி எனது மனதில் ஆரம்பத்தில் இருந்தது. இதை எப்படி செய்வது என்பதை எனக்கு முதலில் வழி காட்டியவர் முரளிதான்.

**கேள்வி; எத்தகைய திட்டங்களை மலையக மண்ணில் மேற்கொள்ளப்போகிறீர்கள்?**

**பதில்;** எங்களுடைய முதல் நோக்கம் கல்வியினை மேம்படுத்துவதாகும். அவற்றை மூன்றாகப் பிரித்து செயற்படவுள்ளோம். முதலாம் ஆண்டு முதல் 10ஆம் ஆண்டு வரையிலான மாணவர்களுக்கும், உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மற்றும் வயது வந்தவர்கள் என மூன்றாகப் பிரித்து வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றோம். தகுதி வாய்ந்த பல்கலைக்கழக பேராசிரியர்கள், கல்வியியலாளர்களைக் கொண்டு மேற்கொண்டு வருகின்றோம். இதில் பேராசிரியர் மூக்கையா, பேராசிரியர் சந்திரபோஸ் ஆகிய இருவருடைய பங்களிப்பும் அளப்பரியது.

குறிப்பாக மலையக மாணவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு நாங்கள் முயற்சிகள் செய்து வருகின்றோம். பல்துறை சார்ந்த தொழில் நிலைக் கல்வியினைக் கற்று இருத்தல் வேண்டும். துறையை மாற்றிப் படிப்பதற்கு அவுஸ்திரேலியா அனுமதி கொடுத்துள்ளது. தையல் தொழிற் செய்பவர்கள் தொடர்ந்து ஒருவர் அதே நிலையில் இருக்கக் கூடாது. அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மென்மேலும் படிக்க வேண்டும். அங்குள்ளதைப்போன்று மலையக மாணவர் மாணவிகளையும் பரந்து பட்ட அடிப்படையில் நவீன டிஜிட்டல் கல்வி முறைக்கேற்ப அவர்களை வளப்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வருகின்றேன்.

முதல் நிலைக் கல்வி இடை நிலைக் கல்வி பயிலும் மலையக மாணவர் மாணவிகளின் கல்வியை மேம்படுத்தும் வேலைத் திட்டங்களை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். முதல் நிலைக் கல்வியினையும் இரண்டாம் நிலைக் கல்வியினையும் மூன்றாம் நிலைக் கல்வியினையும் மலையகத்தில் மேம்படுத்த நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றோம். அதே போன்று கல்வி மட்டும் போதாது மென்திறமைகளும் இருக்க வேண்டும். எதிர்கால தலைமுறையினர்களுக்கான திட்டத்தை இலக்கு வைத்து மலையகத்திலுள்ள தமிழ் பாடசாலைகளை செயற்கை நுண்ணறிவுப் பொறியியல் கற்கை வகுப்புக்களை வழங்கி வருகின்றோம்.

**கேள்வி; இறுதியாக நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

**பதில் ;** என்னைப் பொறுத்தவரையிலும் நாம் கல்வி கற்று பெரியவர்களான பின் அம்மா, அப்பா ஆதரிக்காத கல்வியில் அர்த்தமில்லை. சமூகப் பற்று குடும்பப் பற்று ஒவ்வொரு படித்தவர்களுக்கும் இருத்தல் வேண்டும். துன்பப்படும் மக்களுக்கு மனமுவந்து உதவி செய்ய வேண்டும். ஒழுக்கக்கல்வி மிக அவசியம். ஒழுக்கமில்லாத கல்வியில் எந்தவொரு பிரயோசனமுமில்லை. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற அடிப்படையில் கல்வி அமைதல் வேண்டும். இன்று ஆத்திச்சூடி தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அறத்தால் வருவது இன்பம். அது நாங்கள் ஆரம்பித்துள்ள மலையக மக்கள் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் சின்னம் தெளிவாக எடுத்து இயம்பிக் கொண்டிருக்கிறது. கடந்த காலங்களில் பல்வேறுபட்ட சமூகப் பணிகளை ஆற்றி வந்தேன். இனி எதிர்வரும் காலங்களில் இறுதி மூச்சு உள்ள வரையிலும் நான் பிறந்த மலையக மக்களுக்கு என்னுடைய சேவையை வழங்கவுள்ளேன் என்றும் தெரிவித்தார்.



இக்பால் அலி

# பெண்கள் கட்டாயம் உயர்கல்வியை பெறவேண்டும்







(மாவத்தகம தினகரன் நிருபர்)

பெண் பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவது என்பது அவர்களுடைய திருமணத்திற்காக சீதனம் வழங்குவது போன்றதொரு விடயமாகுமென கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்த குமார் தெரிவித்தார்.

கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் அதிபர் ரிஸ்னா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், பெண் பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவது என்பது அவர்களுடைய திருமணத்திற்காக சீதனம் வழங்குவது போன்றதொரு விடயமாகும். ஒவ்வொரு பெண்களும் கட்டாயம் கல்வியினைக் கற்று உயர்ந்த இலக்கினை அடைய வேண்டும். அந்தவகையில் கண்டி மாவட்டத்தில் பெண்களுக்கான உயர்ந்த கல்விச் சேவையை வழங்குவதில் கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரி முன்னிலையில் திகழ்வதாக அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக பாகிஸ்தான் நாட்டு வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் கண்டி கல்வி வலயப் பணிப்பாளர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜெய்னுலாப்தீன் லாபீர், முன்னாள் யட்டிநுவர பிரதேச சபை உறுப்பினர் வஸீர் முக்தார் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அதுமட்டுமின்றி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் மற்றும் பாகிஸ்தான் நாட்டு வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார் ஆகிய இருவரும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# Dialog's Innovation Challenge

## டிஜிட்டல் எதிர்காலத்தை உருவாக்குவதற்கு புத்தாக்குனர்களுக்கும் அழைப்பு




இலங்கையின் முதன்மை தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி *Dialog Innovation Challenge* (டயலொக் புத்தாக்கசவால்) இல் இணையுமாறு அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. இது டிஜிட்டல் மாற்றம் மூலம் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கும் தேசத்தின் டிஜிட்டல் எதிர்காலத்தை உருவாக்குவதற்குமான ஒரு தேசிய முன்னெடுப்பாகும். மேற்படி தேசிய முன்னெடுப்பானது தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகள் மூலம் இலங்கையின் தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களின் வாழ்வை வளப்படுத்துவதற்கான பொதுவான இலக்கை நோக்கி அவர்களின் புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலை வழிநடத்துவதற்கு நாட்டின் சிறந்த சிந்தனையாளர்களையும் தொலைநோக்குப் பார்வையாளர்களையும் அழைக்கின்றது. முன்மொழியப்படும் தீர்வுகள் புதுமையின் கலங்கரை விளக்கமாக அமைவதுடன், சந்தையை மறு வடிவமைக்கின்ற அல்லது ஏற்கனவே உள்ள செயல்முறைகளை உயர்த்தும் திறன் கொண்டதாகவிருத்தல் வேண்டும். பங்கேற்பாளர்கள் முடிவின் எந்த நிலையிலும் உள்ள தீர்வுகளை சமர்ப்பிக்கலாம். அது ஒரு முன்மாதிரி, குறைந்த பட்ச சாத்தியமான தயாரிப்பு அல்லது முழுமை பெற்ற தீர்வாக அமையலாம். *AI, machine learning, IoT, computer vision, blockchain, data analytics, robotics* மற்றும் cloud computingஇதுபோன்ற டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் மாற்றும் சக்தியை பங்கேற்பாளர்கள் மாற்றத்திற்கான வினையூக்கிகளாகப் பயன்படுத்துவதால், இத் தீர்வுகளின் நோக்கத்தை எந்த வரம்புகளும் கட்டுப்படுத்தாது. 16 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கையர்களும் https://dialog.lk/ic பார்வையிடுவதன்மூலம்தனிநபர்களாகவோ அல்லது மாறும் ஆற்றல் சார்ந்த அணிகளாகவோ பங்கேற்கலாம்.

இந்த தேசிய முன்னெடுப்பின் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான வெகுமதிகள் காத்திருக்கின்றன. அதற்கமைய விலை மதிப்பற்ற வழிகாட்டல் மற்றும் டயலொக்கின் விரிவான புத்தாக்க சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் வளங்களுக்கான அணுகலுடன் ரூ. 5 மில்லியன் பணப் பரிசு வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும். மேலும் திறமையின் வெளிப்பாடுகளை தீப்பொறியென தூண்டும் வகையில்,தொழில்நுட்ப வல்லுநர்கள், தொழில்துறை வழிகாட்டுனர்கள் மற்றும் தொலைநோக்கு புத்தாக்குனர்களால் திட்டத்தின் பங்காளிகளான இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவர் அமைப்பு (ICTA),இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகம் (IESL),தேசிய விஞ்ஞான மன்றம் (NSF), இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு (SLIC, இலங்கை சந்தைப்படுத்தல் கற்கை நிலையம் (SLIM),இலங்கை டிஜிட்டல் சந்தைப்படுத்தல் சங்கம் (DMASL),டயலொக் புத்தாக்குனர் நிதியம், இனோவேஷன் ஃபவுன்ட்ரி மற்றும் Ideamart ஆகியோரால் வழிகாட்டப்படும் வாய்ப்பை பங்கேற்பாளர்கள் பெறுவார்கள். அத்துடன், ஒன்றாக அவர்கள் தங்கள் தீர்வுகளை மையமாகக் கொண்டு,முக்கிய பங்குதாரர்கள் சாத்தியமான முதலீட்டாளர்கள் மற்றும் மூலோபாய பங்காளிகளுடன் இணைந்து ஒரு மாற்றமுறும் பயணத்தை மேற்கொள்வார்கள்.

# ஆளுநர் செந்தில் தொண்டமான்– அமெரிக்க சர்வதேச மத சுதந்திரத்திற்கான ஆணையாளர் இடையில் பேச்சு



அமெரிக்க சர்வதேச மத சுதந்திரத்திற்கான ஆணையாளர் டேவிட் கெரி, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தமாக நேற்று சந்தித்தார்.

இச்சந்திப்பில் சமய நடவடிக்கைகள் தொடர்பான தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடியதுடன், கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து சமூகத்தினரின் மத உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆளுநரால் மேற்கொள்ளப்பட்டுவரும் அண்மைய நடவடிக்கைகளுக்கும் பாராட்டுகளை தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் தூதுவர் ஸ்டீபன் ஸ்னெக், தூதுவர் ஜேமி ஸ்டாலி, கண்காணிப்பு கொள்கை ஆலோசகர் செமா ஹசன், கொள்கை ஆய்வாளர் ரூபி உட்சைட், அமெரிக்க தூதரகத்தின் அரசியல் அதிகாரி, ஷந்தீப் குரூஸ், அமெரிக்கா கொழும்பு தூதரகத்தின் அரசியல் நிபுணர் ஆகியோர் உடனிருந்தனர்.

# சம்புநகர் அக்/அல்–மினா வித்தியாலய மாணவருக்கான கழுத்துப்பட்டி அறிமுகம்





அட்டாளைச்சேனை சம்புநகர் அக்/அல்மினா வித்தியாலயத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவின் போது பாடசாலை மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. பாடசாலை மண்டபத்தில் அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஓர் அங்கமாக கழுத்துப்பட்டி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் ஆரம்பப் பிரிவுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். அம்ஜத்கான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கழுத்துப் பட்டியை அறிமுகம் செய்து மாணவர்களுக்கு அணிவித்தார்.

அதிகஷ்டப் பாடசாலையான இப்பாடசாலை 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இம்மாணவர்களுக்கு இதுவரையும் கழுத்துப்பட்டி இல்லாத குறையை அதிபர் எம்.ஐ. எம்.றியாஸ் நிவர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் பின்னர் சிறுவர் தின நிகழ்வு மற்றும் மீலாதுன் நபி விழா என்பன நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் பிரதம அதிதிகளாக அக்கரைப்பற்று ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவரும், அக்கரைப்பற்று எம்.பீ.சீ.எஸ். தலைவருமான ஓய்வு பெற்ற அதிபர் ஹபிபுல் இன்ஷான் எம்.பீ.அப்துல் ஹமீட், அட்டாளைச்சேனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். எச்.எம்.றஸ்மி, அட்டாளைச்சேனை ஜூம்ஆப் பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜூனைதீன் கலந்து கொண்டனர்.

இதன் போது வகுப்புகளில் தலைவர்களாக கடமையாற்றும் மாணவர்களுக்கு 'பெச்' அணிவிக்கப்பட்டது. மீலாத் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு விசேடமாக தயார் செய்யப்பட்ட உணவுப் பொதிகளும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டதுடன் மாணவர்களின் ஏற்பாட்டில் கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தர் எம். எச்.ஹம்மாத், பெரியமுலைத்தீவு ஜும்ஆப்பள்ளிவாசல் தலைவர் சன் ரைஸ் ஜெயினுடின், சம்புநகர் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் யூ.கே.ஜுனைட், கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜெளபர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் ஏ.ஜீ. றிஸ்னா, உறுப்பினர் எல்.வசீம், சம்



புநகர் ஜும்ஆப் பள்ளிவாசல் செயலாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர் றஊப், பிரதி அதிபர் எம்.ஐ.ஹாசீம், வலயத் தலைவர் எம்.எச்.அப்துல் ஹை, அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.ஏ.எம்.அறூஸ், ஏ.ஜீ.ஹம்சார், சிரேஷ்ட ஆசிரியர் ஏ.பீ.தாஹிர் மற்றும் பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

முகம்மது றியாஸ்
(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

# வாசிப்பில் இடர்படும் மாணவருக்கென திட்டம் முன்னெடுப்பு: கருங்காலிச்சோலையில் பரிசளிப்பு







மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கருங்காலிச்சோலைஸ்ரீகிருஷ்ணாவித்தியாலயத்தில், வாசிப்பில் இடர்படும் மாணவர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட விசேட செயற்திட்டத்தின் இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

பேத்தாழை விவேகானந்தா சனசமூக நிலையத்தின் தலைவர் கி.மருதீபன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. இக்கிராம சேவையாளர் பிரிவில் நீண்டகாலமாக நிலவிவரும் பாடசாலை மாணவர்களின் இடைவிலகல், கூலித்தொழில்களில் சிறுவர்கள் ஈடுபடுதல் போன்ற பிரச்சினைகள் தொடர்பில் பேத்தாழை பொதுநூலகமானது சமூக மட்டத்தில் ஆய்வு மேற்கொண்டது.

இந்த ஆய்வு முடிவின் அடிப்படையில் மாணவர்களை கற்றல் செயற்பாடுகளின் நாட்டம் கொள்ளச் செய்வதனூடாக எதிர்காலத்தில் சிறார்கள் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடாதவாறு தடுப்பதோடு, இளைய சமுதாயத்திற்கு ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்திற்கமைவாக இந்த வாசிப்பினை மேம்படுத்தும் செயற்றிட்டம் நடத்தப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் கோறளைப்பற்று பிரதேச சபைக்கான சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.ஹாரூன் அவர்களுக்கு பேத்தாழை பொதுநூலகத்தினர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த கிராம சேவையாளர் பிரிவுக்குரிய வேள்ட் விசன் நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்ட இலகுபடுத்துனர் நிக்களஸ் யேசுதாஸ் அவர்களினூடாக கருங்காலிச்சோலை பிரதேசத்தில் உள்ள வாசிப்பில் இடர்படும் மாணவர்களுக்கான இந்த திட்டம் கடந்த வருடம் நடுப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பேத்தாழை விவேகானந்தா சனசமூக நிலையத்தின் ஊடாக பேத்தாழை பொதுநூலகம் மேற்கொண்ட இந்தத் திட்டத்தில் மாணவர்களுக்கான வாசிப்பு முகாம்கள் தொடர்ச்சியாக நடை பெற்றதுடன், அவர்களது பெற்றோருக்கான விழிப்பூட்டல் கருத்தரங்குகள், பயிற்சிநெறிகள் என்பன பயிற்றுவிக்கப்பட்ட வளவாளர்களைக் கொண்டு அடிக்கடி நடத்தப்பட்டன.

இவ்வாறு இடம்பெற்ற குறித்த செயற்றிட்டத்தினை பூர்த்தி செய்து வாசிப்புத்திறனை மேம்படுத்திக் கொண்ட மாணவர்களுக்கான இறுதிநாள் நிகழ்வும், பரிசளிப்புவிழாவும் பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றன.

மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்ற அரங்கில் மாணவர்களுக்கான பயிற்சியாளர்களாக கடமையாற்றிய பேத்தாழை பொது நூலக உத்தியோகத்தர்களுக்கு பேத்தாழை விவேகானந்தா சனசமூக நிலைய நிருவாகத்தினரால் நிகழ்வின் போது பாராட்டுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், இத்திட்டத்தின் வரலாறு அடங்கிய ஆவணப்பட இறுவட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கோறளைப்பற்று பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.கங்காதரன், வேள்ட் விசன் நிறுவன முகாமையாளர் அ.ரவீந்திரன், வேள்ட் விசன் நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்ட இலகுபடுத்துனர் நிக்களஸ் யேசுதாஸ், பேத்தாழை விபுலானந்தா கல்லூரி அதிபர் சி.முருகவேல், கருங்காலிச்சோலை ஸ்ரீ கிருஷ்ணா வித்தியாலய அதிபர் யோ.தவலெட்சுமி, பேத்தாழை கிராமத்திற்கான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.த.தயாளகுமார், வேள்ட் விஷன் நிறுவனத்தின் கோறளைப்பற்று பிரதேசத்திற்குரிய உத்தியோகத்தர்கள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் அதிதிகளாக கலந்து கொண்ட இந்நிகழ்வின் மேடை அறிவிப்புக்கள் யாவும் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட மாணவர்களாலேயே நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ம.பிரகாஷ்
பேத்தாழை

# தெஹிவளை கல்கிசை மாநகர சபை

## 2024ம் ஆண்டிற்காக ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2024ம் ஆண்டிற்காக இம்மாநகர சபையின் செயற்றிட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்துகொள்வதற்காக கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) 2024ம் ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023.10.12 முதல் 2023.11.03 பி.ப 3.00 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுபப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்-2024" என்று தெளிவாக குறிப்பிட்டு "தெஹிவளை கல்கிசை மாநகர சபையின் மாநகர ஆணையாளர்" இடம் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக கையோடு கொண்டுவந்து அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் குறித்த தினம், குறித்த நேரத்திற்கு முன்பு வைப்புச் செய்தல் வேண்டும். குறித்த தினத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் அல்லது தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அத்துடன் தபாலில் காணாமற்போகும் அல்லது தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் சார்பாக இச்சபை பொறுப்பாக மாட்டாது.

அவ்வாறே ஒப்பந்தக்காரராக பதிவு செய்வதற்கு ஒவ்வொரு பதிவு எல்லைக்கும் பதிவு கட்டணத் தொகை கீழே தரப்பட்டுள்ளவாறு அமையும். இதற்கு மேலதிகமாக விசேட வேலைகளுக்காக (அலுமினியம் மற்றும் இரும்பு) குறைந்தபட்ச பதிவுக் கட்டணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். இக்கட்டணத்தை செலுத்திய பின்னர் மாநகர பொறியியல் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடிவதுடன், அதன் மூலம் பதிவு செய்துக் கொள்வதற்கு விண்ணப்பிக்கலாம்.

| ஒப்பந்த வகுதிகள் | தரம் | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| • கட்டிட நிர்மாணம் மற்றும் பராமரித்தல் | C-10 | ரூ. 3000.00 |
| • வீதி நிர்மாணம் மற்றும் பராமரித்தல் | C-9 | ரூ. 3500.00 |
| | C-8 | ரூ. 4000.00 |
| • பாலம் நிர்மாணித்தல் | C-7 | ரூ. 4500.00 |
| | C-6 | ரூ. 5000.00 |
| • அலுமினிய வேலைகளை மேற்கொள்ளல் | C-5 | ரூ. 5500.00 |
| • இரும்பு வேளைலளை மேற்கொள்ளல் | C-4 | ரூ. 6000.00 |
| | C-3 | ரூ. 6500.00 |

**நிபந்தனைகள்**

இச் சபையில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிகமாக வெளி ஒப்பந்தக்கார்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிலிருந்து மற்றும் தேவைப்பாட்டின் அடிப்படையில் கேள்வி விலையை ஒப்பிட்டுக்கோரும் உரிமை சபைக்கு உரியது.

**எம்.எம்.சீ.கே.கே. மான்னப்பெரும**
**மாநகர ஆணையாளர் மற்றும்**
**அதிகாரம், செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**தெஹிவளை கல்கிசை மாநகர சபை.**

# கருவலகஸ்வெவ பிரதேச சபை

## 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

### அட்டவணை

| பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் | பதிவுக் கட்டணம் |
|---|---|
| 01. சகல வகையான காதிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1000.00 |
| 02. அச்சுப்படிவங்கள் மற்றும் ஆவணங்கள் | 1000.00 |
| 03. அலுவலக உபகரணங்கள், மரத்தளபாடங்கள், உருக்குத் தளபாடங்கள், பிளாஸ்டிக் தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் வேறு உபகரணங்கள் | 1000.00 |
| 04. மின் உபகரணங்கள், வீதி விளக்கு உபகரணங்கள் மற்றும் சகல வகையான உதிரிப்பாகங்கள் | 1000.00 |
| 05. நீர் வழங்கல் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 1000.00 |
| 06. சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் | 1000.00 |
| 07. நூலக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 1000.00 |
| 08. சகல வகையான வாகன உதிரிப்பாகங்கள் | 1000.00 |
| 09. கொங்கிறீட் பொருட்கள், ஹியூம் பைப், கொங்கிறீட் தூண் சீமெந்துகள் உட்பட முன்வார்ப்பு கொங்கிறீட் உற்பத்திகள் | 1000.00 |
| 10. அச்சு இயந்திரங்களின் மை (டோனர்/ கார்ட்லேஜர்) | 1000.00 |
| 11. மை வகைகள் மற்றும் கட்டிட பழுதுபார்த்தலுக்குத் தேவையான துணைப்பாகங்கள் | 1000.00 |
| 12. டயர் மற்றும் டியூப் | 1000.00 |
| 13. இரும்புக் கம்பி, உருக்குக் கம்பி, முட் கம்பி உட்பட உலோகப் பொருட்கள் மற்றும் தொழிலாளர் கருவிகள் | 1000.00 |
| 14. கல்வனைஸ் பைப் மற்றும் உதிரிப்பாகங்கள் | 1000.00 |
| 15. நிர்மாணப் பணிகளுக்கு தேவையான மர வகைகள் | 1000.00 |
| 16. துணிமணிகள் மற்றும் சீருடை வழங்குதல் | 1000.00 |
| 17. வாகன காப்புறுதி கம்பனிகள் | 1000.00 |
| **வேறு சேவைகள்** | 1000.00 |
| 01. வாகன பழுதுபார்த்தல்கள் மற்றும் சேர்விஸ் செய்தல் | 1000.00 |
| 02. அச்சக வேலைகள் (பற்றுச்சீட்டு மற்றும் அச்சுப் புத்தகங்கள்) | 1000.00 |
| 03. தட்டச்சு/ நகல் பிரதி இயந்திரம்/ ரோணியோ இயந்திரம்/ பெக்ஸ் இயந்திரம்/ காற்றுச்சீராக்கி இயந்திரம் பழுதுபார்த்தல் | 1000.00 |
| 04. இறப்பர் முத்திரை வெட்டுதல் | 1000.00 |
| 05. பெயர்ப்பலகை வரைதல் குறியீட்டு பலகை வரைதல் | 1000.00 |
| 06. கணனி வன்பொருள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்கல் | 1000.00 |
| 07. கனரக வாகனம், இயந்திராதிகள் மற்றும் இலகு வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் | 1000.00 |
| 08. சிறுவர் பூங்காவுக்கான விளையாட்டுப் பொருட்களை வழங்குதல் | 1000.00 |
| 09. பலவகையான கற்கள் மற்றும் செங்கல் வழங்குதல் | 1000.00 |
| 10. செடிவகைகள், உரம் உட்பட பூங்கா அலங்காரத்திற்குத் தேவையான பொருட்களை வழங்குதல் | 1000.00 |
| 11. அரச அங்கீகாரம் பெற்ற ஒப்பந்தக்காரர்கள் (குறித்த ICTAD சான்றிதழின் பிரதியை இணைத்தல் வேண்டும்) | 1000.00 |
| a. ரூபா 1000000 வரை | 2000.00 |
| b. ரூபா 1000000 இற்கு மேல் | 2500.00 |

01. விண்ணப்பங்களை உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் என்று குறிப்பிட்டு 2023.12.15ஆம் திகதிக்கு முன் 'செயலாளர், கருவலகஸ்வெவ பிரதேச சபை' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.

02. பதிவு செய்துள்ள பட்டியலுக்கு வெளியிலும் விலைமனுக்களைக் கோருவதற்கு மற்றும் கொள்வனவு செய்வதற்கு பிரதேச சபைக்கு உரிமையுண்டு. விலைமனுக்களைக் கோரும் வேளையில் அதனை சமர்ப்பிப்பதற்கு அல்லது ஓடர்களை விடுக்கும் வேளையில் அதனை வழங்குவதற்குத் தவறும் மற்றும் வழங்கப்படும் மாதிரிகளுக்கு அமைவாக வழங்காதவர்களின் பதிவு மீள அறிவிக்காமலேயே இரத்துச் செய்யப்படும். அத்துடன் அபகீர்த்தியானோர் பட்டியலிலும் சேர்க்கப்படும்.

03. சகல கொடுப்பனவுகளும் காசோலைகள் மூலம் மற்றும் காசாக மேற்கொள்ள முடியும் அத்துடன் ஒவ்வொரு வழங்கல்களுக்கும் வேறுவேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் மூலம் கொடுப்பனவுகள் செலுத்தும் போது 'செயலாளர் - கருவலகஸ்வெவ பிரதேச சபை' பெயரில் காசோலைகள் எழுதப்படல் வேண்டும்.

04. மேலதிக விபரங்களை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை 032-2267917 தொ.பே. இலக்கத்தை அழைத்து பெறுகை அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**கே.பீ. ஜகத் குமார**
**செயலாளர்**
**கருவலகஸ்வெவ பிரதேச சபை**

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**

**மஹாவலி நீர்ப் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)**

**திட்ட முகாமைத்துவ பணிமனை**
**நிதியிடல்: ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)**

# விலைக்கோரலுக்கான அழைப்பு

## பொருட்கள் வழங்குதல்

அ) மஹாவலி திட்டம் **B&D** - பெரிய வெங்காய விதை உற்பத்திக்காக 35 எண்ணிக்கையான மழைநீர் தங்கும் அலகுகளுக்கான பொருட்களை **(Rain Shelter Units)** வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

ஒப்பந்த இலக்கம்: **MI/MWSIP/ADB/GDS/RAIN SHELTER - MASL - B&D/SH/2023/087**

ஆ) மஹாவலி திட்டம் **C&G** - பெரிய வெங்காய விதை உற்பத்திக்காக 30 எண்ணிக்கையான மழைநீர் தங்கும் அலகுகளுக்கான பொருட்களை **(Rain Shelter Units)** வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

ஒப்பந்த இலக்கம்: **MI/MWSIP/ADB/GDS/RAIN SHELTER - MASL - C&G/SH/2023/088**

இ) மஹாவலி திட்டம் **H** - பெரிய வெங்காய விதை உற்பத்திக்காக 45 எண்ணிக்கையான மழைநீர் தங்கும் அலகுகளுக்கான பொருட்களை **(Rain Shelter Units)** வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

ஒப்பந்த இலக்கம்: **MI/MWSIP/ADB/GDS/RAIN SHELTER - MASL - H/SH/2023/089**

ஈ) மஹாவலி திட்டம் ஹுருலுவெவ - பெரிய வெங்காய விதை உற்பத்திக்காக 40 எண்ணிக்கையான மழைநீர் தங்கும் அலகுகளுக்கான பொருட்களை **(Rain Shelter Units)** வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

ஒப்பந்த இலக்கம்: **MI/MWSIP/ADB/GDS/RAIN SHELTER - MASL - HURULU/SH/2023/090**

1. வாடிக்கையாளரின் முடிவுறுத்தல்/விநியோகச் சான்றிதழின் சான்றாக, கடந்த ஐந்து (05) வருடங்களில் விலைக்கோரல் கோரிக்கையில் (RFQ) உள்ளடக்கப்பட்டுள்ள வழங்கல்களுக்கு ஒப்பான இயல்பு மற்றும் சிக்கலான இரண்டு விநியோகங்களில் முதன்மை ஒப்பந்ததாரராக விலைமனுதாரர் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் விநியோக அளவை வெற்றிகரமாக நிறைவுசெய்ய கடன் வடிவத்திலான நிதி ஆதாரங்கள் இருப்பதற்கான ஆதாரங்களை வழங்குதல் வேண்டும்.
   - அ) 1ஆம் இலக்க ஒப்பந்தத்திற்கு 10 மில்லியன் இல. ரூபா
   - ஆ) 2ஆம் இலக்க ஒப்பந்தத்திற்கு 8.5 மில்லியன் இல. ரூபா
   - இ) 3ஆம் இலக்க ஒப்பந்தத்திற்கு 13 மில்லியன் இல. ரூபா
   - ஈ) 4ஆம் இலக்க ஒப்பந்தத்திற்கு 11 மில்லியன் இல. ரூபா
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யவதற்கு நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளருக்கு ebid.mwsip@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு Scan முறையில் வேண்டுகோள் ஒன்றை தொழில் வழங்குநருக்கு அனுப்புதல் வேண்டும். அந்த வேண்டுகோள் கடிதத்தை வியாபார தலைப்புக் கடிதத்தில் விலைமனுதாரரின் அதிகாரபூர்வ கையொப்பம் சகிதம் அனுப்புதல் கட்டாயமாகும் என்பதுடன், விலைமனுதாரரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் உள்ளடக்கி விலைமனுதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் கடிதத்தைப் பெற்றதன் பின் விலைமனுதாரருக்கு தொழில் வழங்குநர் ஒரு ஆவணத்தை வழங்குவார்.
3. 2023-02-26ஆம் திகதியன்று மேற்கூறப்பட்ட அ), ஆ), இ) மற்றும் ஈ) ஒப்பந்தங்களுக்கு முறையாக மு.ப. 10.00 மணி, மு.ப. 10.30 மணி, மு.ப. 11.00 மணி மற்றும் மு.ப. 11.30 மணி (உள்ளூர் நேரம்) அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் திட்டப் பணிப்பாளர், மகாவலி நீர் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் என முகவரியிட்டு பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவ பணிமனை (PMU),**
**மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP),**
**இல. 493 1/1, T.B. ஜயா மாவத்தை, கொழும்பு-10, இலங்கை.**
**தொலைபேசி இல. : +94 11 2675810 / +94 11 2675882**
**தொலைநகல் இல. : +94 11 2675227**
**மின்னஞ்சல் முகவரி : ebid.mwsip@gmail.com**

**இலங்கை துறைமுக அதிகாரசபை**

# அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் பதவிக்கு வேண்டப்படும் தகைமைகளையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

## 01. கப்பல் நுட்பவியல் அலுவலர் பதவி – JLM (SHIPWRIGHT OFFICER)

**(அ) தகுதித்திறன்**

லண்டனில் றோயல் கப்பல் நிர்மாணத்துறை நிறுவனத்தில் (Royal Institute For Naval Architects) அண்மித்ததான அங்கத்துவம்.

**அல்லது**

லண்டனில் கப்பலோட்ட பொறியியல் நிறுவனத்தில் அண்மித்ததான அங்கத்துவம்.

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட தேசிய தொழிநுட்ப டிப்ளோமா (NDT) / உயர் தேசிய தொழிநுட்ப டிப்ளோமா (HNDT)/ பொறியியல் உயர் தொழிநுட்ப டிப்ளோமா(HNDE) / பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமா (NDES) / திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் டிப்ளோமா (ED- OUSL)/ பொறியியல் தொழிநுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா (NDET)/ கடலக பொறியியல் அல்லது அதற்கு சமமான டிப்ளோமா.

**அத்துடன்**

**அனுபவம்**

அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் சமனான பதவியொன்றில் மூன்று(03) வருட அனுபவம்.

**குறிப்பு**

1. படகு மற்றும் கப்பலின் நிலையாக நிற்றல், கப்பலோட்ட வழிக்கு எடுத்தலும் மீள கப்பலோட்ட வழிக்கு அனுப்புதலும் அதற்கு அவசியமான வடிவமைப்பு தொடர்பான திட்டமிடல் மற்றும் தயாரித்தல்
   கலம்களில் பைபர் (GRP) மற்றும் தச்சு வேலை தொடர்பான சிறந்த விளக்கம் மற்றும் அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. சிறந்த உடல் உள தகுதித்திறனையும் மற்றும் சிறந்த கட்புலன் மற்றும் செவிப்புலனையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**(ஆ) சம்பளம்**

| | | |
|---|---|---|
| சம்பள வகையீடு | : | (J LM) |
| ஆரம்பச் சம்பளம் | : | ரூ. 60,050/= |
| வருடாந்த சம்பள ஏற்றம் | : | ரூ. 1,150/= |

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக ரூ.134,000 அளவினதாக இருக்கும்.

**வயதெல்லை**

45 வயதை விடக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல)

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் **"பிரதான மனிதவள முகாமையாளர், மனிதவளப் பகுதி, இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13"** என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2023.10.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் **பதிவுத் தபாலில்** அல்லது **மின்னஞ்சலில்** (slpahrex@slpa.lk ) அனுப்பப்படுதல் வேண்டும். **விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இந்த அறிவித்தல் **www.slpa.lk** என்ற இணையதளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 064 -5XXX | MITSUBISHI | LANCER | 1993 |
| HI -5XXX | NISSAN | MARCH | 2001 |
| HF -0XXX | HYUNDAI | ACCENT | 2003 |
| KG -1XXX | NISSAN | SUNNY | 2003 |
| CBB -5XXX | SUZUKI | DAA-MR41S HUSTLER | 2015 |
| **கெப்** | | | |
| PX -5XXX | MAHINDRA | BOLERO MAXI TRUCK | 2014 |
| **வேன்** | | | |
| 054 -6XXX | FORD | ECONOVAN | 1994 |
| **டிப்பர்** | | | |
| LI -1XXX | LANKA ASHOK LEYLAND | COMMET TIPPER 1613 | 2011 |
| **லொறி** | | | |
| LA -0XXX | SUZUKI | LE-DA63T | 2002 |
| PT -0XXX | MAHINDRA | MAXXIMO | 2011 |
| PS -8XXX | TATA | ACE-EX | 2012 |
| PS -8XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| PU -7XXX | TATA | ACE EX | 2012 |
| PX -1XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2013 |
| DAB -3XXX | TATA | ACE EX 2 | 2015 |
| DAE -7XXX | TATA | ACE HT2 | 2016 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BDS -9XXX | YAMAHA | RAY-Z | 2016 |
| BFE -3XXX | YAMAHA | FZ-S VER 2.0 | 2017 |
| BHQ -4XXX | TVS | APACHE RTR | 2018 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| GG -6XXX | BAJAJ | BAJAJ AUTO | 2000 |
| GK -0XXX | BAJAJ | BAJAJ AUTO | 2001 |
| HP -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| HQ -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JN -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QD -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QC -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QJ -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QG -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QJ -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QV -3XXX | BAJAJ | BAJAJ 4S | 2009 |
| YG -8XXX | BAJAJ | RE205 | 2010 |
| YM -9XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YH -4XXX | BAJAJ | RE 205 | 2011 |
| AAE -0XXX | BAJAJ | RE205 | 2012 |
| AAR -5XXX | BAJAJ | RE | 2014 |
| AAT -8XXX | PIAGGIO | APE | 2014 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

**மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2023 ஒக்டோபர் 12ஆம், 13ஆம், 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 ஒக்டோபர் 17ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)**

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

**தலைமை அலுவலகம்**
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

www.skillsads.com

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**



## தென் மாகாண கல்வி அமைச்சு

### தென் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆசிரியர் வெற்றிடங்களுக்காக கல்விப் பட்டதாரிகளை சேர்த்துக் கொள்ளல் - 2023

தென் மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக ஆசிரியர் சேவை யாப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் 2ம் வகுப்பு IIம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளும் முகமாக கல்விப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிக்கும் முறை**

தென் மாகாண கல்வியமைச்சின் இணையதளத்தில் **(www.edumin.sp.gov.lk)** இல் தரப்பட்டுள்ள "ஆசிரியர் வெற்றிடங்களுக்கு கல்விப் பட்டதாரிகளை சேர்த்துக் கொள்வதற்கு பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின்" அறிவுறுத்தல்களின் பிரகாரம் விண்ணப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை இவ் இணையதளத்தில் **(www.edumin.sp.gov.lk)** பிரவேசித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்பு - 0912030705**

**ரஞ்சித்யாப்பா**
**செயலாளர்**
**தென் மாகாண கல்வி அமைச்சு,**
**தக்ஷினபாய, லபுதுவ**

---

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**மஹாவலி நீர்ப் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)**
**திட்ட முகாமைத்துவ பணிமனை**
**நிதியிடல்: ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)**

MWSIP

## விலைமனுக்களுக்கான அழைப்பு
## திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்

### குருநாகல் மாவட்டத்தில் பயிர்ச்செய்கை வேலிகளுக்கான பொருட்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

### MI/MWSIP/ADB/GDS/FANCE MATERIALS/OCB/2023/025

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது மஹாவலி நீர்ப் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ஆஅவ) கடனொன்றைப் பெற்றுள்ளது. இந்த நிதியிடலின் ஒரு பகுதியானது மேலே பெயரிடப்பட்ட ஒப்பந்தக் கொடுப்பனவுக்கு செலவிடப்படும். ஆஅவ இன் தகுதியுள்ள உறுப்பு நாடுகளின் விலைமனுதாரர்கள் இவ்விலைமனுவில் பங்குபற்றலாம்.

02. குருநாகல் மாவட்டத்தில் பயிர்ச்செய்கை வேலிகளுக்கான பொருட்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பணிக்காக (''வழங்குதல் மற்றும் விநியோகித்தல்'') தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை செயற்றிட்ட பெறுகைக் குழுவின் சார்பில் **MWSIP** திட்டத்தின் திட்ட முகாமைத்துவ பணிமனையின் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளரை பிரதிநிதித்துவப்படுத்தப்படும் நீர்ப்பாசன அமைச்சு **(MOI)** (''கொள்வனவாளர்'') அழைக்கின்றது.

03. ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒரு-கட்ட ஒரு-உறை விலைமனுக்கோரல் நடைமுறையை பாவித்து திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (OCB) நடாத்தப்படும். விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள உறுப்பு நாடுகளின் விலைமனுதாரர்களும் இக்கேள்வியில் பங்குபெற்றலாம்.

04. பின்வரும் முக்கிய தகைமைகளுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே இவ்விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.

- விலைமனுதாரரானவர் கடந்த அண்மித்த ஐந்து (5) வருடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த கணக்கிடப்பட்ட பணக்கொடுப்பனவுகளின் ஆகக்குறைந்த வருடாந்த சராசரி நிதிப்புரள்வு தனிப்பட்ட லொட் அல்லது இணைந்த லொட்களுக்காக லொட் 1 - 15.0 மில்லியன் இல. ரூபா, லொட் 2 - 7.0 மில்லியன் இல. ரூபா, லொட் 3 - 3.0 மில்லியன் இல. ரூபா, லொட் 4 - 39.0 மில்லியன் இல. ரூபா, லொட் 5 - 15.0 மில்லியன் இல. ரூபாவாக இருத்தல் வேண்டும்.
- கடந்த அண்மித்த ஐந்து (05) வருடங்களில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தை (01) விலைமனுதாரர் வழங்குநர் அல்லது கூட்டு வியாபார பங்குதாரர் அல்லது உப ஒப்பந்தக்காரராக பங்குபற்றியிருத்தல் வேண்டும் என்பதுடன் குறித்த ஒப்பந்தம் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தலும் வேண்டும். இதில் விலைமனுதாரரின் பங்குபற்றுதலானது தனிப்பட்ட லொட் அல்லது இணைந்த லொட்களுக்காக லொட் 1 - 5.8 மில்லியன் இல. ரூபா, லொட் 2 - 2.6 மில்லியன் இல. ரூபா, லொட் 3 - 1.1 மில்லியன் இல. ரூபா, லொட் 4 - 15.8 மில்லியன் இல. ரூபா, லொட் 5 - 5.8 மில்லியன் இல. ரூபா அல்லது அதற்கு சமனான பெறுமதியாக இருத்தல் வேண்டும்.
- விலைமனுதாரர்கள் பத்து (10) வருடங்களுக்கு மேலாக நிகரான வகை மற்றும் விபரக்குறிப்புகளுக்கமைவாக குறைந்தபட்சம் பயிர்ச்செய்கை வேலிகளுக்கான 10 தொகுதி பொருட்களை விற்பனை செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் கடந்த பத்து (10) வருடங்களில் விலைகோரும் பொருட்களை உற்பத்தி செய்திருந்தமையை விளக்குதல் வேண்டும்.
- விநியோகம் மற்றும் பூர்த்தியாக்கல் அட்டவணையின் பிரகாரம் கொள்வனவாளரினால் வேண்டப்படும் வகை, அளவு மற்றும் எண்ணிக்கையை வழங்க முடியும் என விலைமனுதாரர் அல்லது உற்பத்தியாளரினால் விளக்குதல் வேண்டும்.
- Fin-3 படிவத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு விலைமனுதாரரின் நிதியிடல் மூலவளங்கள் தேவைப்படுத்தலை பூர்த்தி செய்வதற்காக (எந்தவொரு ஒப்பந்த முற்பண கொடுப்பனவுகள் நீங்கலாக) திரவச் சொத்துகள், கடன் வசதி அல்லது ஏனைய நிதியிடல் மூலவளங்கள் இருப்பதை விலைமனுதாரர் விளக்குதல் வேண்டும்.

05. முழுமையான தகுதித்தன்மை மற்றும் தகைமைத் தேவைப்படுத்தல்களுக்காக விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தை பார்வையிடவும்.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணத்தின் மென் பிரதியொன்றை PDF வடிவத்தில் www.mwsip.lk – information – Procurements of MWSIP. எனும் இணைய தளத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

07. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யவதற்கு நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளருக்கு ebid.mwsip@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு Scan முறையில் வேண்டுகோள் ஒன்றை அனுப்புதல் வேண்டும். அந்த வேண்டுகோள் கடிதத்தை வியாபார தலைப்புக் கடிதத்தில் விலைமனுதாரரின் அதிகாரபூர்வ கையொப்பம் சகிதம் அனுப்புதல் கட்டாயமாகும் என்பதுடன், விலைக்கோரல் காலத்தினுள் வழங்கப்படும் திருத்தங்கள் மற்றும் தெளிவுபடுத்தலுக்கு மென் பிரதிகளை அனுப்புவதற்கு விலைமனுதாரரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் உள்ளடக்குதல் வேண்டும். அந்த கடிதத்தை அனுப்பியதன் பின் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 இலங்கை ரூபாவைச் செலுத்துவதற்கு வேலை கொள்வோரால் வங்கிக் கணக்கு விபரங்கள் வழங்கப்படும். விலைமனுதாரரால் குறித்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்யும் கடிதமொன்றை நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கொடுப்பனவு உறுதி செய்யப்பட்டதன் பின் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணத் தொகுதியின் மென் பிரதியொன்றை தரவிறக்கம் செய்துகொள்வதற்கான இணைய இணைப்பு (Link) தொழில் வழங்குனரால் விலைமனுதாருக்கு அனுப்பப்படும். அதை முறையாக தரவிறக்கம் செய்வது விலைமனுதாரரின் பொறுப்பாகும் என்பதுடன் அது தொடர்பில் எந்தவொரு பொறுப்பும் பெறுகை செயற்பாடுகளின் இடையில் அல்லது அதன் பின் தொழில் வழங்குநரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

08. 2023-10-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு (உள்ளூர் நேரம்) கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள திட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுதாரர்களுடனான விலைக்கோரல் முன்னோடிக்கூட்டமொன்று நடைபெறும். இதில் விலைமனுதாரர்கள் இதில் கலந்து கொள்ளலாம். (அதிகபட்சம் இரண்டு பிரதிநிதிகள், கொள்வனவாளருக்கு முன்னறிவித்தல் ஒன்றைச் செய்து பதிவு செய்து கொள்வதன் பேரில்) விலைமனுதாரர்கள் மெய்நிகர் வழியாகவும் கலந்துகொள்ளலாம். நிகழ்நிலை கூட்டத்திற்கான இணைப்பை (Link) வழங்குமாறு நிகழ்ச்சித் திட்டம் பணிப்பாளருக்கு 2023-10-18ஆம் திகதி அல்லது அதற்கு முன் மின்னஞ்சல் மூலம் வேண்டுகோள் ஒன்றைச் செய்தல் வேண்டும்.

09. 2023-11-11ஆம் திகதியன்று மு.ப. 11.00 மணி (உள்ளூர் நேரம்) அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், செயற்றிட்டப் பெறுகைக் குழு, மகாவலி நீர் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் என முகவரியிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள், விலைமனுக்கோரல் ஆவணத்தின் ITB 19.1 Bid Data Sheet Section 2 இல் குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப் பிணை சகிதம் கொழும்பு-10, டீ. பி. ஜாயா மாவத்தை, இல. 493 1/1, மகாவலி நீர் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம், திட்ட முகாமைத்துவப் பணிமனை, திட்டப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். இதில் விலைமனுதாரர் மெய்நிகர் முறையில் கலந்துகொள்ளலாம் என்பதுடன் இதில் இணைந்து கொள்வதற்கு 2023-11-07ஆம் திகதி அல்லது அதற்கு முன் நிகழ்நிலை கூட்டத்திற்கான இணைப்பை (Link) வழங்குமாறு நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளருக்கு மின்னஞ்சல் மூலம் வேண்டுகோள் ஒன்றைச் செய்தல் வேண்டும்.

10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்து கொள்ளல், விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் கொண்டு வந்து ஒப்படைத்தலுக்காக விலைமனுதாரருக்கு ஏற்படும் எந்தவொரு செலவுகள் தொடர்பிலும் எந்தவொரு பொறுப்பும் கொள்வனவாளரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**திட்டப் பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவ பணிமனை (PMU),**
**மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP),**
**இல. 493 1/1, T.B. ஜயா மாவத்தை,**
**கொழும்பு-10, இலங்கை.**
**தொலைபேசி இல. : +94 11 2675810 / +94 11 2675882**
**தொலைநகல் இல. : +94 11 2675227**
**மின்னஞ்சல் முகவரி : ebid.mwsip@gmail.com**

---

### 2015 இல. 05 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கீழ் 131ஆம் பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்

# முழு இலங்கை வாழ் மக்களிடமும் மன்னிப்புக் கோரல்

களுஅக்கல ராலலாகே தொன் கீர்த்தி குமார குருசிங்ஹ ஆகிய நான் கேகாலை, களுகல்ல மாவத்த, இல. 126 என்னுமிடத்தில் அமைந்துள்ள கென்டி மெடிக்கல் எனும் மருந்தகத்தின் உரிமையாளராவேன்.

குறித்த மருத்துவ சிட்டையை சமர்ப்பிக்காத நபர் ஒருவருக்கு மீள் உயிர்ப்பு ஔடதமான எகொக்சிலின் 500 மில்லி கிராம் 10 வில்லைகள் அடங்கிய கார்ட்டை விற்பனை செய்தல் மற்றும் மருந்துகளை விநியோகித்தல், மருந்தாளரை பயன்படுத்தி நிறைவேற்றாமை ஆகிய குற்றங்களுக்கு கேகாலை நீதவான் நீதிமன்றத்தில் 2023.06.30ம் திகதி தொடுக்கப்பட்டிருந்த இல. 22187/D/23 வழக்கில் நான் குற்றவாளி ஆக்கப்பட்டேன் எனவும்,

அதற்காக எனக்கு கௌரவ நீதிவான் ரூ. 30,000/= தண்டத் தொகையை செலுத்துவதற்கு தீர்மானித்ததாகவும் இலங்கை மக்களுக்கு இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படியான தவறுகள் என்னால் மீண்டும் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவித்துக் கொள்வதுடன் மேற்கொண்ட குற்றம் சம்பந்தமாக இலங்கை வாழ் மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன்.

**களுஅக்கல ராலலாகே தொன் கீர்த்தி குருசிங்ஹ**

---

**சுற்றுலாத்துறை அமைச்சு**

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA)

## விலைக்கோரல் அழைப்பு – தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டவாறான பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகை குழுத் தலைவர் கோருகின்றார்.

| இல. | விடயம் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணைத் தேவைப் படுத்தல்கள் (ரூபாவில்) | விலைமனு முன்னோடிக் கூட்டம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| | | | | திகதி மற்றும் நேரம் | |
| சேவைகள் | | | | | |
| 1. | செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு (SLTDA) 3 எண்ணிக்கையான மோட்டார் கார்களை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இலக்கம்:<br>SLTDA/HR&PM/NC/NCB/Vehicle Hiring/ 2023/02R3 | 5,000.00 | 285,000.00 | 2023 ஒக்டோபர் 20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு | 2023 நவம்பர் 02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |
| 2. | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு (SLTDA) சூரிய சக்தி மின்பிறப்பாக்கி முறைமை மற்றும் மின்னல் பாதுகாப்பு முறைமையை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் விற்பனைக்குப் பின்னரான சேவைகள்<br>ஒப்பந்த இலக்கம்:<br>SLTDA/HR&PM/G/NCB/Solar/ 2023/6 | 5,000.00 | 235,000.00 | 2023 ஒக்டோபர் 20ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு | 2023 நவம்பர் 02ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு |

2. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பிரமாணங்களின் பிரகாரம் இயைபுடைய வியாபாரப் பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று கொழும்பு-03, இல. 80, காலி வீதி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் (1ஆம் மாடி) தலைவரின் அறையில் இடம்பெறும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பிலக்கம்: 0112426800 (நீடிப்பு 305, 277) மின்னஞ்சல் முகவரி: amilam@srilanka.travel / sltdaproc@srilanka.travel.
5. 2023 ஒக்டோபர் 12ஆம் திகதி முதல் 2023 நவம்பர் 01ஆம் திகதி வரையில் sltdaproc@srilanka.travel / amilam@srilanka.travel எனும் மின்னஞ்சல் முகவரிகளுக்கு மீளளிக்கப்படாத கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டு சகிதம் வேண்டுகோள் கடிதம் (விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில்) ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மின்னஞ்சலின் ஊடாக ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று வழங்கப்படும்.
6. மீளளிக்கப்படாத கட்டணங்களை இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபையினால் இலங்கை வங்கியின் கோப்பரேட் கிளையில் பேணப்படும் 7119413 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும். (குறிப்பு: வரவுத் துண்டில் வைப்பாளர்களின் விபரம் மற்றும் வைப்பிற்கான காரணம் எனும் இடத்தில் ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' எனக் குறிப்பிட்டு விலைமனுவுடன் மூலப் பிரதியை இணைக்கவும்) கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் ஏனைய கொடுப்பனவு முறைகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் நகல் பிரதியுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு (4ஆம் மாடி), இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல.: 80, காலி வீதி, கொழும்பு-03 எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் அவைகளை மூடிய பின்னர், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, 04ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள 1987 ஆம் ஆண்டின் இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரினால் வழங்கப்பட்டதும் மற்றும் இதற்குப் பின்னர் வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் (PCA3 படிவம்) பதிவுச் சான்றிதழுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுப் பிணையானது இலங்கை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டிருப்பதுடன் விலைமனுவின் செல்லுபடியாகும் திகதியிலிருந்து 28 நாட்களுக்கு அப்பால் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதி பிரகாரம் விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
12. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறேதும் நிறுவனத்தினொரு ஊழியர் அல்லது ஒரு கம்பனி மற்றும் அல்லது தனிநபரொருவர் நெருங்கிய வியாபாரம் அல்லது உறவு ஆகியவற்றைக் கொண்டிருப்பின், ஒப்பந்தத்தை வழங்கும் தகுதியை இழந்து விடுவார்.
13. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும். மேலும், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன், எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரருக்கும் விலைமனுக்களை தயாரிப்பதற்கும் அல்லது அவற்றை ஒப்படைப்பதிலுமுள்ள எந்தவொரு கிரயச் செலவிற்கும் அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை.**

# விலைமனு அழைத்தல்

## விவசாயா திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு உரித்தான கீழ்க் காணப்படும் அலகுகளிற்கு குறித்த கொள்வனவுகளிற்காக தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இல. | கருமங்களின் விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்யப்பட வேண்டிய விலைமனுப் பிணையம் மற்றும் செல்லுபடிக் காலம் | | | விலைமனுப் படிவக் கட்டணம் |
| | | | காசாக எனின் | வங்கி வரைவு ஒன்றெனின் | பிணையம் செல்லுபடிக் காலம் | |
| 01 | விதை மற்றும் நடுகை பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் கீழ் உள்ள பண்ணைகளுக்கு Rotavators கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/43 (2023) | 36,000/= | 72,000/= | 2024.02.15 | ரூ. 3,000.00 |
| 02 | விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான பண்ணைகளுக்கு 02 லொறி பெட்டிகளை கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/56 (2023) | 50,000/= | 100,000/= | 2024.02.15 | ரூ. 3,000.00 |

இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதற்காகப் பெற்றுக் கொள்ளும் விலைமனுப்படிவங்களில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை இத்திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் நிருவாக அலுவலகரிடம் சமர்ப்பித்து 2023.10.13 முதல் 2023.11.01 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறித்த விலைமனுதாரர்கள் 1987 இல. 03 என்ற பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விலைமனுப் படிவங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனு அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும் 'தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதெனிய' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் மேற்படி அட்டவணையில் D இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத் தொகையொன்றை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன் வங்கி வரைவு ஒன்றாக பிணை வைப்புச் செய்வதாயின் அது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2023.11.02 அன்று பி.ப. 2.00 இற்கு முடிவுறுவதுடன் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், பேராதெனிய**
**2023.10.12**
**081-2388106/122**

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

கீழ் குறிப்பிடப்படும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரிகளுக்கு அஞ்சலிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகிறது.

| தொடர் இல. | பரீட்சை | நடைபெறும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 01 | தேசிய நடன/ சங்கீத பரீட்சை - 2018 (2021) செய்முறைப் பரீட்சை - 2023 | 2023 ஒக்டோபர் 16 மற்றும் 25 | நாடு முழுவதும் |

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அல்லது மேலதிக விபரங்கள் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப் பெயர், முகவரியுடன் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையத் தொடர்பு கொள்ளவும். இப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை www.doenets.lk இணையத்தனத்தினூடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**தொலைபேசி : 011-2785230/ 011-3661244/ 011-3661246**
**தொலைநகல் : 011-2784232**

**எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**

5/5/2/AD/2023
**நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**பெலவத்த, பத்தரமுல்லை.**
**2023 ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

பின்வரும் நிருமாண செயற்றிட்டங்களுக்காக 2023.10.27 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| குறிப்பீட்டு இல. | வேலையின் நோக்கம் | விலைமனுக்கோரல் ஆவணத்தின் ஒவ்வொரு தொகுதிக்குமான மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) | மதிப்பீடு | CIDA* தரம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) | நிருமாணக் காலப்பகுதி |
|---|---|---|---|---|---|---|
| SU/ CWP/02/314 | Supplying, Installing, Configuring and maintenance of Fiber Networking and Data Cabling for Staff Quarters-Non Perial Housing Scheme of the Sabaragamuwa University of Sri Lanka | 2000.00 | 9,000,000.00 | ஈஎம் 4 அல்லது மேற்பட்டது | 135,000.00 | 30 நாட்கள் |

• (முன்பு ICTAD)

2023.10.12 ஆம் திகதியிலிருந்து 2023.10.26 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக பிரதான வேலைகள் மற்றும் திட்டமிடலுக்கான சிரேஷ்ட உதவி பதிவாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டு கையேற்கப்படலாம்.

விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.

வியாபார தலைப்புக் கடிதத்தில் கோரிக்கைக் கடிதமொன்றை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். பல்கலைக்கழக சிறாப்பரிடம் மேலே திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத ரொக்கப்பண கட்டணத்தைச் 2023.10.26 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் கேள்வி ஆவணங்கள் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களை விலைமனுதாரர் கொள்வனவு செய்யலாம்.

விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள ICTAD (இப்போது CIDA) பதிவைக் கொண்டிருப்பதுடன் விலைமனுவின் சமர்ப்பித்தலுடன் அவ்வாறான பதிவின் சான்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

உரித்தான விலைமனுக்கோரல் ஆவணங்களின் விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகள் மற்றும் விலைமனுக்களின் நிபந்தனைகளில் நிருணயிக்கப்பட்டுள்ளவாறு விலைமனுதாரர் தேவைப்படுத்தப்படும் நிதியிடல் மற்றும் தொழில்நுட்ப ஆற்றலை கொண்டுள்ளார்களென உறுதிப்படுத்துமாறு அவர்கள் மதியுரை வழங்கப்படுகின்றனர்.

2023.10.27 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், த.பெட்டி 02, பெலிஹுல்ஓய, என்ற முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். ''குறிப்பீட்டு இலக்கமான SU/CWP/02/314 (Capital Works & Planning Branch)'' என்பது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களின் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறித்துரைக்கப்படல் வேண்டும். தாமதமான மற்றும் பூர்த்தி செய்யப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். விலைமனுக்கள் 2023.10.27 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு த.பெட்டி 02, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 045-2280031 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பிரதான வேலைகள் மற்றும் திட்டமிடலுக்கான சிரேஷ்ட உதவி பதிவாளரின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம். மேலதிக அறிவித்தலின்று விலைமனுக்களை இரத்துச் செய்வதற்கான உரிமையை பல்கலைக்கழகமானது கொண்டுள்ளதுடன் இது தொடர்பாக பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

- பெலிஹுல்ஓயவிலுள்ள இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தின் சபை அறையில் 2023.10.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனுவை சமர்ப்பிப்பதற்கு முன்னராக வேலைத்தளம் தொடர்பான தெளிவான விளக்கமொன்றை வேலைத்தளத்தை பார்வையிட்டு பெற்றுக் கொள்ளுமாறு விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர். விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் பின்னர், வேலைத்தள விஜயமொன்றிற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். வேலைத்தளத்திற்கு விஜயம் செய்வதற்கான ஆகுசெலவுகளை விலைமனுதாரர் அவர்களின் சொந்த செலவிலேயே மேற்கொள்ளல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**த.பெட்டி 02,**
**பெலிஹுல்ஓய.**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/03/PT/6505(MAR) | Fuel Injection Pump Spares for Wartsila 9L20 Main Engines of M/T Barana II and MT Vijayabahu | 90,000.00 | 1,000.00 | 09-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6512(EL) | 50 Nos. Digital Operator Units for Inverters and Converters of Cranes | 15,000.00 | 1,000.00 | 09-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6519(MAR) | Spares for Napier NA 297 Turbocharger of Wartsila 8L26 Main Engines of M/T Gotaimbara& M/T Nandimithra | 120,000.00 | 3,500.00 | 09-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6518(EL) | 180 M of 4 Pair X 2.5 SQMM Festoon Cable for Cranes at JCT | 20,000.00 | 1,000.00 | 09-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6522(EL) | Flexible Multi – Core Cable for Spreaders of STS Crane | 80,000.00 | 1,000.00 | 14-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6524(EL) | Inductive Sensors for Lock Unlock System of Spreader of ECT Cranes | 40,000.00 | 1,000.00 | 14-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6525(EL) | 50 Nos. 300W Warm White Led Light Fittings for JCT | 75,000.00 | 1,000.00 | 14-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6523(EL) | Spares for the Lock Unlock System of Stinis Spreaders of ECT Cranes | 15,000.00 | 1,000.00 | 14-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6527(EL) | 05 Nos. Magnetic Break Units for Fuji Cranes at JCT | 20,000.00 | 1,000.00 | 16-11-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/03/051 | Bearing Housing for Spin Turn Device of Mitsui RTGS at JCT 06 Nos. | 50,000.00 | 1,000.00 | 02-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/04/062 | Sealed Type Battery 12V 200AMPH ( Semi Maintenance Free ) – 20 Nos. | 20,000.00 | 1,000.00 | 02-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/04/068 | Spares for 15 Ton Mitsubishi FD 150 ANT/ ANMI Fork Lift Trucks -9 | 220,000.00 | 3,500.00 | 02-11-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/04/054 | 10 Nos. Mild Steel Channel Irons 200MM X 75MM X 23.4KG/M ( EACH 6.0 M Long) | 25,000.00 | 1,000.00 | 03-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/02/052 | 12600 Liter Caltex Meropa 150 ( P – 383 ) | 184,500.00 | 3,500.00 | 03-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/08/063 | 03 Nos. Telescoping Belt – 45 FT ( 2611 – 0085 – 0510 ) for Stinis Twin Lift Spreader | 48,000.00 | 1,000.00 | 03-11-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஒக்டோபர் 13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை

## மருத்துவ உபகரணங்களை வழங்குதல்

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் ''மருத்துவ உபகரணங்கள் - 2023'' என்பதை வழங்கி நிறுவுவதற்காக 2023-10-23ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முதன்மையாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கிறார்.

| | மருத்துவ உபகரணங்கள் - 2023 | | |
|---|---|---|---|
| உருப்படி இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாதது |
| Group I | Quadriceps Hamstring Bench | 01 | 1,000.00 |
| Group II | RO Plant | 05 | 1,000.00 |

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து ஆர்வமுள்ள தகுதியுள்ள எந்தவொரு விலைமனுதாரர், முகவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் ஆகியோர் 2023-10-12ஆம் திகதியிலிருந்து 2023-10-23ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து நகல் பிரதிகளுடனான விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்று.
- திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தின் பெயரில் மக்கள் வங்கி, திருகோணமலை நகரக் கிளையின் 255-100120000-490 எனும் கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
- வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
- முதன்மையாளர்களினால் உங்கள் கம்பனியை அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு உள்நாட்டு முகவர்களாக நியமித்தல் தொடர்பாக வழங்கப்பட்ட சான்றிதழ்/கடிதம்.

1. ஒவ்வொரு தொகுதி (Group) உருப்படிக்கும் வெவ்வேறாக விலைக்கோரல் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-10-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறைகளில் தொகுதியின் (Group) பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
3. அனைத்து விலைமனுக்களுடன் விலைமனுப் பெறுமதியின் 2% விலைமனுப்பிணைத் தொகையாக இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணை 2024-01-22ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. பிராந்தியப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
5. ஏதாவது தெளிவுபடுத்தல்களை 026-2220103 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**திருகோணமலை.**

# விலைமனு கோரல் அழைப்பு

## ரனவிரு சேவா அதிகாரசபை

**ஒப்பந்த அழைப்பு இலக்கம் RVSA/PROC/93/2023**

ரனவிரு சேவா அதிகார சபைக்கு 50 மின்சார மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான மற்றும் தகுதியான விலைமனுதாரர்களிடமிருந்து பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனு கோரப்படுகின்றது. இவ்விலைமனுகோரலில் தேசிய போட்டி அடிப்படையிலான விலைமனுகோரல் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

ஆர்வமுள்ள தகுதியான விலைமனுதாரர்களுக்கு கொழும்பு 03, காலி வீதி, இல. 449 எனும் முகவரியில் அமைந்துள்ள ரனவிரு சேவா அதிகார சபையின் பெறுகைப் பிரிவின் கிளைத் தலைரிடமிருந்து (தொ.பே. இல 011-2055673-76/ 011 -3421068) வாரத்தில் ஏதாவதொரு வேலைநாளில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரையான காலத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| விலைமனுகோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமான நேரம் | 2023 ஒக்டோபர் 12 முதல் 2023 நவம்பர் 06 ஆம் திகதி பி.ப 1.00 வரை |
| விலைமனு இறுதித்திகதி | 2023 நவம்பர் 06 ஆம் திகதி பி.ப 2.00 மணி |

விலைமனுகோரலை முடிவுறுத்தல் / திறத்தல் 2023 நவம்பர் மாதம் 06ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு இடம்பெறும். தாமதித்து சமர்ப்பிக்கும் விலைமனுகோரல்கள் நிராகரிக்கப்படும். விலைமனுகோரலை சமர்ப்பிப்பது முடிவடைந்தவுடன் விலைமனுதாரர்களின் விருப்பப்படி பங்கேற்கச்செய்துள்ள விலைமனுகோரல் திறக்கப்படும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு**
**ரனவிரு சேவா அதிகாரசபை**
**இல. 449**
**காலி வீதி**
**கொழும்பு 03**
**தொ.பே.இல 011-2055673**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

SP JM-3254 HYUNDAI TRAJET MPV அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 065010

### 110 மாருதி கார்கள் விற்பனைக்கு

WP CAP-3812 MARUTI SUZUKI ALTO CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 065014

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

NP DAD-4559 MAHINDRA BOLERO MAXI TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 065002

NP LK-2733 LANKA ASHOK LEYLAND 1613 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 065017

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

CP QN-2163 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 064998

NW AAE-5068 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 065006

WP HJ-5138 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 065015

WP YF-6738 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 063920

### 124 டிராக்டர்கள், விவசாய உபகரணங்கள் விற்பனைக்கு

UP RE-1349 TAFE 45DI TRACTOR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 065013

# வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2024ஆம் வருடம்

## சூரியவெவ பிரதேச சபை

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் / உபகரணங்களை வழங்குதல் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் வழங்குநர்களாகப் மற்றும் பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024ம் வருடம்" எனக் குறிப்பிட்டு 2023-12-22ஆம் திகதிக்கு முன் செயலாளர், பிரதேச சபை, சூரியவெவ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 047-2288212 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

வழங்குநர்களாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பிப்பவர்களினால் வழங்கப்படும் ஒவ்வொரு வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக 1000.00 ரூபா வீதமான பதிவுக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். இதை காசோலை மூலமாக அனுப்புவதாயின் "சூரியவெவ பிரதேச சபை நிதியம்" என அனுப்புதல் வேண்டும்.

**(1) பொருட்கள் வழங்குதல்**

1. அலுவலக காகிதாதிகள் வழங்குதல்
2. அலுவலக அச்சு வேலைகள், படங்களுக்கு சட்டமிடல் மற்றும் அறிவித்தல் பலகைகளை வரைதல் மற்றும் தயாரித்தல்
3. அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வழங்குதல் (மரம், பிளாஸ்டிக், உருக்கு, நாரிழை, MDF மற்றும் கலப்பு மரங்கள் போன்றவை)
4. மின்சார உபகரணங்கள் மற்றும் கருவிகள் / மின்சார சேவைகளை வழங்குவதற்குத் தேவையான துணைப்பாகங்கள்
5. தட்டச்சு, புகைப்படப் பிரதி, நகல் பிரதி, கணனி, தொலைநகல் இயந்திரம், நேரப்பதிவு இயந்திரம் போன்றவை வழங்குதல்
6. கணனி இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான பாவனைப் பொருட்கள் வழங்குதல் (டோனர், காட்ரிச், ரிபன், பென் டிரைவ் போன்றன)
7. துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகள் வழங்குதல்
8. கதவு, யன்னல் திரைச் சீலைகள், சீருடைத் துணிகள் வழங்குதல்
9. பெயர்ப்பலகைகள், அறிவித்தல் பலகைகள், பதாகைகள் வழங்குதல்
10. கட்டிடப் பொருட்கள் / நீர்க்குழாய் வேலைகளுக்குரிய துணைப்பாகங்கள் வழங்குதல்
11. வாகனங்களுக்கான டயர், டியூப், பெட்டரி மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல் மற்றும் வாகன டயர்களை மீள்நிரப்புதல்
12. வாகனங்கள், இயந்திரோபகரணங்களுக்கான உதிரிப்பாகங்கள் வழங்குதல்
13. நூலகப்புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் வழங்குதல்
14. தீயணைப்பு உபகரணங்கள் வழங்குதல்
15. மழை அங்கி / கம்பூட்ஸ் / சப்பாத்துகள் / காலுறைகள் வழங்கல்
16. சங்கீதக் கருவிகள் வழங்குதல்
17. விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல்
18. கொங்கிறீட் சார்ந்த பொருட்கள் வழங்குதல்
19. அரிந்த மரம் வழங்குதல் (பலகை, தீராந்தி, ரீப்பைகள்)
20. கன்று வகைகள் / உரம் / மருந்துகள் உட்பட தோட்ட அலங்காரத்திற்குத் தேவையான பொருட்களை வழங்குதல்
21. இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் போன்றவற்றை தயாரித்தல் மற்றும் வழங்குதல்
22. உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளை வழங்குதல்
23. பாதுகாப்பு கமரா முறைமைகளை வழங்குதல்
24. உணவு, பானங்களை வழங்குதல்
25. ஈர்க்கிள், தும்புத்தடிகள் வழங்குதல்
26. கருங்கல், சக்கைக்கல், மணல், செங்கல், கிரவல் வழங்குதல்
27. வளிச்சீராக்கி இயந்திரம், வளிச்சீராக்க முறைமை வழங்குதல்
28. முன்பள்ளி உபகரணங்கள் மற்றும் சிறுவர் பூங்கா உபகரணங்களை வழங்குதல்
29. பீடை நாசினிகள் மற்றும் களை நாசினிகள் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் மற்றும் பொருட்களை வழங்குதல்
30. கொம்போஸ்ட் தொட்டிகளை வழங்குதல்
31. தரையோடுகள் (டைல்) வழங்குதல்
32. ஒலிபெருக்கி இயந்திரம் வழங்குதல்
33. பதக்கங்கள், ஞாபகச் சின்னங்கள், ஞாபகப் படிகங்கள், விருதுகள் வழங்குதல்

**(2) சேவைகள் வழங்குதல்**

1. தட்டச்சு, புகைப்படப் பிரதி, நகல் பிரதி, கணனி, தொலைநகல் இயந்திர திருத்தவேலைகளைச் செய்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
2. அலுவலக உபகரணங்களுக்கான திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குதல்
3. மோட்டார் வாகன திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
4. வாகன இருக்கைகளுக்கான மேலுறைகள் தயாரித்தல் மற்றும் குஷன் செய்தல்
5. சீருடைகளைத் தைத்தல்
6. அலுமினியம் மற்றும் வார்ப்பு வேலைகள்
7. வளிச்சீராக்கி முறைமைகள், மின்சார முறைமைகளை மேம்படுத்துதல் மற்றும் திருத்தவேலைகள்
8. கணனி வலையமைப்பிடல், கணனி மென்பொருட்களைத் தயாரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், நிறுவுதல் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்
9. மொழிபெயர்ப்புச் சேவைகள் வழங்குதல்
10. வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் (டிப்பர், கலி பவுசர், பெக்கோ லோடர், வேன், முச்சக்கர வண்டி, டிமோ பட்டா)
11. வீதிப் பராமரிப்புக்குத் தேவையான இயந்திரோபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்
12. அதிகாரம் பெற்ற நில அளவை சேவை வழங்குதல்
13. உற்சவப் பொருட்கள் மற்றும் உபகரண சேவைகளை வழங்குதல்
14. சட்டத்தரணி சேவைகள் வழங்குதல்
15. இரும்பு மற்றும் உருக்கு உபகரணங்களை வழங்குதல்
16. காப்புறுதிச் சேவைகளை வழங்குதல்
17. டிராக்டர், டிரேலர், குப்பை வண்டிகளின் திருத்தவேலைகள் மற்றும் வெல்டிங் வேலைகள்
18. தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத தொழிலாளர் சேவைகளை வழங்குதல் (மேசன், தச்சு வேலை, மின்னியல்)
19. நீர் மோட்டர்கள், புல் வெட்டும் இயந்திரங்கள், வென்சோ இயந்திரங்களின் திருத்தவேலைகள்

**நிபந்தனைகள்**

I. மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு சேவை மற்றும் வழங்கல்கள் பொருட்டும் வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
II. பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைமனுக்கள் கோரப்படுவதுடன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலைகளை ஆகக் குறைந்தது 03 மாத காலத்திற்கு மாற்றாமல் நிலையாக வைத்திருத்தல் வேண்டும்.
III. தேவையான சந்தர்ப்பங்களில் ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கோரப்படும் வேளைகளில் முன்வராத, உரிய தரம் மற்றும் குணவியல்புகளுக்கு அமையாதவைகளை வழங்கும் வழங்குபவர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்.

**டெக்லா சுதுசிங்க,**
**செயலாளர்,**
**சூரியவெவ பிரதேச சபை.**

**2023-10-10ஆம் திகதி,**
**சூரியவெவ பிரதேச சபையில்.**

**வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்ப படிவம்**
**சூரியவெவ பிரதேச சபை**

1. நிறுவனத்தின் பெயர் / விண்ணப்பதாரரின் பெயர் : ..............................
2. நிறுவனமொன்றாயின் பதிவிலக்கம் : ..............................
3. நிறுவனமல்லாத தனி நபராயின் தே.அ.அ. இல. : ..............................
4. முகவரி : : ..............................
5. அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தரின் பெயர்: (விசாரணைக்காக) : ..............................
6. (அ) தொலைபேசி இலக்கம் : ..............................
   (ஆ) செல்லிடத் தொலைபேசி இலக்கம் : ..............................
7. தொலைநகல் இலக்கம் : ..............................
8. மின்னஞ்சல் முகவரி : ..............................
9. இணையதள முகவரி : ..............................
10. வியாபார பதிவிலக்கம் : ..............................
11. வெட் பதிவிலக்கம் : ..............................
12. வழங்குவதற்கு உத்தேசிக்கும் பொருட்கள் : ..............................
13. வழங்குவதற்கு உத்தேசிக்கும் விடயத்தின் இலக்கம் : ..............................

மேற்காணும் தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதுடன் நிபந்தனைகளுக்கு இணங்குவதாகப் பிரகடனப்படுத்துகின்றேன்.

.................................. ..................................
திகதி கையொப்பம்

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# குசல் மெண்டிஸுக்கும் காயம்



இலங்கை அணியின் விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீரரான குசல் மெண்டிஸ் உபாதைக்கு உள்ளான நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிராக ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற போட்டியில் அபாரமாக துடுப்பெடுத்தாடி 122 ஓட்டங்களை பெற்ற குசல் மெண்டிஸ் மைதானத்தில் இருந்து அரங்கு திரும்பும்போது தசைப்பிடிப்பு உபாதைக்கு உள்ளாகியுள்ளார். இதனை அடுத்தே அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதனால் பாகிஸ்தானுடனான போட்டியில் அவர் களத்தடுப்பில் ஈடுபடவில்லை என்பதோடு அவருக்கு பதில் சதீர சமரவிக்ரம விக்கெட் காப்பாளராக செயற்பட்டதோடு துஷான் ஹேமந்த களத்தடுப்பில் ஈடுபட்டார். இந்தப் போட்டியில் இலங்கை அணி 345 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்த நிலையில் பாகிஸ்தான் அணி 48.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து அந்த இலக்கை எட்டியது.

இலங்கை அணியின் முன்னணி பந்துவீச்சாளர்களான வனிந்து ஹசரங்க மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் உபாதை காரணமாக உலகக் கிண்ணத்தில் இடம்பெறவில்லை என்பதோடு சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன உபாதைக்குப் பின் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் களமிறங்கியிருந்தார்.

எனினும் குசல் மெண்டிஸின் காயம் தீவிரம் இல்லை என்று நம்பப்படுகிறது.

# வனிந்து ஹசரங்கவின் சத்திரசிகிச்சை வெற்றி





தொடை எலும்பு காயம் காரணமாக உலகக் கிண்ண தொடருக்கான இலங்கை அணியில் இடம்பெறாத சுழற்பந்து சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்கவுக்கு வெற்றிகரமாக சத்திரசிகிச்சை இடம்பெற்றுள்ளது.

தொடை எலும்புப் பகுதியில் ஏற்பட்ட குறைபாட்டை சரிசெய்யும் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றதாகவும் "சிறிது காலம் செயற்படாமல் இருந்தபோதும் நாட்டுக்காக வலுவாக மீண்டும் திரும்புவேன்" என்றும் ஹசரங்க சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.

லண்டனில் உள்ள பிரின்சஸ் கிரேஸ் வைத்தியசாலையிலேயே அறுவைச்சிகிச்சை நிபுணர் பேராசிரியர் பாரெஸ் ஹதத் இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டுள்ளார்.

இதற்காக ஹசரங்க இலங்கை கிரிக்கெட் அணியின் மருத்துவ குழுவுக்கு மாத்திரமன்றி ஐ.பி.எல் அணியான ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் முகாமையாளருக்கும் நன்றி கூறியுள்ளார்.

லங்கா பிரீமியர் லீக் போட்டியின்போது உபாதைக்கு உள்ளான ஹசரங்க அதன் பின்னர் நடந்த ஆசிய கிண்ண போட்டியிலும் பங்கேற்கவில்லை.

## சர்வதேச செய்திகள்

# காசா மீதான தரைவழி தாக்குதலுக்கு 300,000 இஸ்ரேலிய படைகள் குவிப்பு

## வான் தாக்குதல்களில் காசாவில் உயிரிழப்பு 1000ஐ தாண்டியது, இஸ்ரேலிலும் பலி 1200ஆக உயர்வு

காசா மீது இஸ்ரேல் தரைவழி தாக்குதல் ஒன்றுக்குத் தயாராகி வரும் நிலையில் நேற்று (11) ஐந்தாவது நாளாகவும் பலஸ்தீன பகுதி மீது சரமாரி வான் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இஸ்ரேலின் காசா எல்லையை ஒட்டி 300,000 துருப்புகள் குவிக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது. "தமக்கு வழங்கும் பணியை நிறைவேற்ற தயாராக இருப்பதாக" அது குறிப்பிட்டுள்ளது.

எல்லையில் இருக்கும் இஸ்ரேலிய துருப்புகளிடம் கடந்த செவ்வாய்க்கிழமை பேசிய இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட், "நாம் வான் வழியாக தாக்குதல்களை ஆரம்பித்தோம், பின்னர் நாம் தரையில் இருந்தும் வருவோம். நாங்கள் 2ஆம் நாளிலிருந்து அந்தப் பகுதியைக் கட்டுப்படுத்தி வருகிறோம், நாங்கள் தாக்குதலில் ஈடுபட்டுள்ளோம். அது தீவிரமடையும்" என்றார்.

ஏற்கனவே காசா மீது வான் தாக்குதல்களை நடத்தி பெரும் உயிர் மற்றும் உடைமை சேதங்களை ஏற்படுத்தி வரும் நிலையிலேயே தரைவழியாகவும் காசாவுக்குள் முன்னேற இஸ்ரேல் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

எனினும் ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்த குறுகலான, மக்கள் செறிந்து வாழும் நிலப் பகுதியில் கணிசமான இஸ்ரேலிய பணயக்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் இஸ்ரேல் தரைவழியாக முன்னேறுவது அவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

காசா மீதான தாக்குதல்கள் நேற்றும் அதே தீவிரத்தில் நடத்தப்பட்ட நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகிறது. நேற்று (11) பின்னேரம் வரை காசாவில் உயிரிழப்பு எண்ணிக்கை 1055 ஆக அதிகரித்திருந்ததோடு மேலும் 5100 பேர் வரை காயமடைந்திருப்பதாக காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் 200க்கும் அதிகமான சிறுவர்கள் அடங்குகின்றனர். அதேபோன்று காயமடைந்த 60 வீதமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என்று காசா சுகாதார அமைச்சு தெரிவித்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தொடக்கம் காசாவில் 200க்கும் மேற்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. இதில் காசாவில் உள்ள இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியும் தாக்கப்பட்டதை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது. மறுபுறம் இஸ்ரேலில் உயிரிழப்பு 1,200ஆக உயர்ந்திருப்பதாகவும், இதில் 155 படையினர் அடங்குவதாகவும் இஸ்ரேலிய இராணுவம் கூறியுள்ளது.

### காசாவில் அவலம் தொடர்கிறது

காசாவில் இஸ்ரேல் மின்சாரம், நீர் மற்றும் உணவு விநியோகத்தை துண்டித்து முழு முற்றுகையை செயற்படுத்தி வரும் நிலையில் காசாவில் மின்சாரத்தை பெறுவதற்கான ஒரே மூலமாக இருக்கும் சூரிய சக்தி ஆலையில் 12 மணி நேரத்தில் எரிபொருள் தீர்ந்து விடும் என்று பலஸ்தீன வலு அதிகாரசபை தலைவர் தபர் மெல்ஹம் நேற்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் காசா மக்கள் தொகையில் 10 வீதத்திற்கும் அதிகமாக இடம்பெயர்ந்துள்ள 200,000 க்கும் அதிகமான மக்களுக்கான தங்குமிட வசதிகளை வழங்க ஐ.நா முயன்று வருகிறது.

உணவுக்கு தட்டுப்பாடு நிலவும் நிலையில் சிறிய அளவான உணவை பெறும் எதிர்பார்ப்பில் பேக்கரிகளில் நீண்ட வரிசை காணப்படுகிறது. வங்கிகள் குறைந்த அளவான பணத்தையே விடுவிப்பதோடு எரிபொருள் நிலையங்களும் குறைந்த அளவே எரிபொருளை வழங்கி வருகின்றன.

இங்குள்ள மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ மையங்களில் 24 மணி நேரத்தில் மருந்துகள் தீர்ந்துவிடும் என்று சுகாதார அமைப்பு நேற்று எச்சரித்திருந்தது.

இந்நிலையில் காசாவில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பான பாதை ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பில் இஸ்ரேல் மற்றும் எகிப்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.



என்றாலும் காசா மற்றும் எகிப்துக்கு இடையிலான ராபா எல்லை கடவை மீது இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இந்த எல்லைக் கடவையின் பலஸ்தீன பக்கமாக நான்கு ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாக எகிப்திய உள்ளூர் மனித உரிமை அமைப்பொன்று தெரிவித்துள்ளது. இதில் இரண்டாவது தாக்குதல் எகிப்து மற்றும் பலஸ்தீன வாயில்களுக்கு இடையில் இடம்பெற்றிருப்பதோடு இதனால் பலஸ்தீன பக்கமுள்ள மண்டபம் சேதமடைந்துள்ளது.

காசாவில் உள்ள மக்கள் இஸ்ரேல் தவிர்த்து வெளியேற முடியுமான ஒரே எல்லைப் பகுதியாக இந்த ராபா எல்லைக்கடவை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

25 மைல் நீளமான காசா நிலப் பகுதி இஸ்ரேல், எகிப்து மற்றும் மத்தியதரைக் கடலால் சூழ்ந்துள்ளது. 2007 ஆம் ஆண்டில் இந்தப் பகுதியில் ஹமாஸ் ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் இஸ்ரேல் தரை, கடல் மற்றும் வான் வழியாக முற்றுகையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

38 ஆண்டுகள் நீடித்த ஆக்கிரமிப்புக்குப் பின் இஸ்ரேலிய துருப்புகள் காசாவில் இருந்து 2005 ஆம் ஆண்டே வாபஸ் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### "எந்த இடமும் பாதுகாப்பாக இல்லை"

காசாவின் தெற்கு நகரான கான் யூனிஸ் மற்றும் மத்திய காசாவில் புரைஜ் அகதி முகாமில் இருக்கும் வீடுகள் மீது வான் தாக்குதல்கள் இடம்பெற்றதாக பலஸ்தீன ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இதில் ஹமாஸ் ஆயுதப் பிரிவின் தலைவர் முஹமது தைப்பின் தந்தைக்கு சொந்தமான வீடும் தாக்கப்பட்டுள்ளது. இதன்போது தைப்பின் சகோதரர் மற்றும் அவரின் குடும்ப உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பல கட்டடங்கள் தகர்க்கப்பட்ட நிலையில் சுமார் 50 பேர் இடிபாடுகளில் சிக்கியிருப்பதோடு அவர்களை காப்பாற்றும்படி மீட்புக் குழுவினருக்கு அங்குள்ள குடியிருப்பாளர்கள் சமூக ஊடகத்தில் அழைப்பு விடுத்துள்ளனர்.

"அவர்கள் எல்லா இடத்தையும் தாக்குவதால், காசாவில் எந்த இடமும் பாதுகாப்பாக இல்லை" என்று தற்காலிக முகாம் ஒன்றில் தனது குடும்பத்துடன் தஞ்சமடைந்திருக்கும் 35 வயதான அலா அபூ டயிர் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை தொடக்கம் இஸ்ரேல் நடத்தி வரும் வான் தாக்குதல்களில் 22,600 குடியிருப்புகள், 10 சுகாதார வசதிகள் மற்றும் 48 பாடசாலைகள் அழிக்கப்பட்டிருப்பதாக பலஸ்தீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

"அப்பட்டமான மனிதாபிமானமற்ற தன்மை மற்றும் மக்களை அடிபணிய வைக்கும் வகையில் குண்டு வீசுவது, பட்டினியை பயன்படுத்துவது போன்ற போர் நடவடிக்கை மற்றும் அவர்களின் தேசிய இருப்பை ஒழிப்பது என்பது இனப் படுகொலைக்குக் குறைவானதல்ல" என்று ஐ.நாவுக்கான பலஸ்தீன தூதுவர் ரியாத் மன்சூர் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு செவ்வாக்கிழமை எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த வன்முறை ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெரூசலத்திற்கும் பரவியுள்ளது. அங்கு இஸ்ரேலிய படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றச்சாட்டில் மேலும் இரு பலஸ்தீனர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை தொடக்கம் இஸ்ரேலிய இராணுவத்துடன் மோதலில் ஈடுபட்ட 21 பலஸ்தீனர்கள் மேற்குக் கரையில் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

### இஸ்ரேலுக்கு அமெரிக்க வெடிபொருள்

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு மத்தியில் அமெரிக்காவின் வெடிபொருட்களை ஏற்றிய முதல் விமானம் நேற்று இஸ்ரேலை அடைந்துள்ளது. ஹமாஸுடனான போருக்கு வான் பாதுகாப்பு, மற்றும் ஏனைய பாதுகாப்பு உதவிகளை இஸ்ரேலுக்கு வழங்குவதாக அமெரிக்கா அறிவித்திருந்த நிலையிலேயே இந்த வெடிபொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த வெடிபொருட்கள் தவிர, பலஸ்தீன ரொக்கெட் குண்டுகளை இடைமறித்து வரும் இஸ்ரேலிய 'அயன் டோம்' வான் பாதுகாப்பு அமைப்புக்கு அதிக இடைமறிப்பு ஆயுதங்களையும் அமெரிக்கா வழங்குவதாக நம்பப்படுகிறது. காசாவில் இருந்து இஸ்ரேலின் பல இலக்குகள் மீது சரமாரியாக வீசப்பட்டு வரும் ரொக்கெட் குண்டுகளில் இருந்து இந்த அயன் டோம் அமைப்பே பாதுகாப்பு வழங்கி வருகிறது.

இஸ்ரேல் நீண்ட காலமாக அமெரிக்காவின் இராணுவம் மற்றும் நிதி உதவிகளை பெற்று வருகிறது. 2016 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையில் இஸ்ரேலுக்கு 10 ஆண்டுகளுக்கு 38 பில்லியன் டொலர் இராணுவ உதவியை வழங்க அமெரிக்க ஒப்புக்கொண்டது. அமெரிக்கா ஒரு நாட்டுக்கு வழங்கிய அதிக இராணுவ உதவியாக இது உள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலில் சிறுபான்மை அரேபியர் மற்றும் பெரும்பான்மை யூதர்களுக்கு இடையில் மோதல் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் துப்பாக்கி உரிமம் பெற்ற பொதுமக்களுக்கு கைத்துப்பாக்கிகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இராணுவ உதவிகள் செல்வதற்கு சில மணி நேரத்திற்கு முன்னர், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலுக்கான தனது ஆதரவை மீண்டும் ஒரு முறை உறுதி செய்ததோடு, கடந்த சனிக்கிழமை ஹமாஸ் நடத்திய தாக்குதலை "ஒரு தீய செயல்" என்று வர்ணித்தார்.

இந்த நிலையை சாதகமாக பயன்படுத்த எதிர்பார்ப்பவர்கள் விலகி இருக்கும்படி எச்சரித்த பைடன், பிராந்தியத்தில் அமெரிக்காவின் இராணுவ நிலைகள் பலப்படுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக அரபுலகம் எங்கும் வரும் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டங்களை நடத்தும்படி ஹமாஸ் அமைப்பின் முன்னாள் தலைவர் காலித் மஷால் அழைப்பு விடுத்துள்ளார். அவர் வெளியிட்டிருக்கும் பதிவு செய்யப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இந்த அழைப்பை விடுத்துள்ளார். "அக்சா வெள்ளத்தின் வெள்ளிக்கிழமையாக வரும் வெள்ளிக்கிழமை அரபு மற்றும் முஸ்லிம் உலகின் சதுக்கங்கள் மற்றும் வீதிகளுக்கு செல்லுங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். காலித் மஷால் தற்போது ஹமாஸின் புலம்பெயர் அலுவலகத்தின் தலைவராக உள்ளார்.

### இஸ்ரேலின் வடக்கிலும் பதற்றம்

இஸ்ரேலின் லெபனானுடனான வடக்கு எல்லையில் மூன்றாவது நாளாக நேற்றைய தினத்திலும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. மறுபுறம் சிரியாவில் இருந்தும் இஸ்ரேலை நோக்கி ஷெல் குண்டுகள் வீசப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இந்த குண்டுகள் திறந்த வெளியில் விழுந்ததாகவும் பதில் நடவடிக்கையாக பீரங்கி மற்றும் மோட்டார் குண்டுகளை வீசியதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் லெபனானுக்குள் ஹிஸ்புல்லாவின் கண்காணிப்புத் தளம் ஒன்றின் மீது இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தியுள்ளது. ஹிஸ்புல்லா நடத்திய புதிய ரொக்கெட் தாக்குதலுக்கு பதில் கொடுக்கும் வகையில் இந்தத் தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# ஆப்கானிஸ்தானில் மீண்டும் பூகம்பம்

ஆப்கானிஸ்தானில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட இரண்டு பூகம்பங்கள் ஏற்பட்ட அதே பிராந்தியத்தில் நேற்று (12) மற்றொரு சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 5.10 மணி அளவில் ஹரத் நகரின் வடக்காக 28 கிலோமீற்றர் தொலைவில் 6.3 ரிச்டர் அளவில் இந்த பூகம்பம் பதிவாகியுள்ளது. காயமடைந்த 100க்கும் அதிகமானவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த பூகம்பத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் இன்னும் உறுதியாகாதபோதும், கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பூகம்பத்தில் தமது வீடுகளை இழந்த பெரும்பாலான மக்கள் திறந்த வெளியிலேயே உறங்கி வருகின்றனர்.



# இராட்சத பூசணி உலக சாதனை

உலகின் மிகப்பெரிய பூசணிக்காயை வளர்த்து அமெரிக்காவின் ட்ரவிஸ் ஜின்சர் அதற்கான சம்பியன்சிப் போட்டியில் 30,000 டொலர் பரிசை வென்றுள்ளார்.

மினசோட்டாவைச் சேர்ந்த ஜின்சர் வளர்த்த இராட்சத பூசணிக்காய் 1,247 கிலோகிராம் எடை கொண்டதாகும். கடந்த வாரம் நடைபெற்ற 50ஆவது பூசணிக்காய் சம்பியன்சிப் போட்டியில் இந்த பூசணிக்காயை இடம்பெறச் செய்து வெற்றிபெற்றுள்ளார்.

இந்த பூசணிக்காய் இராட்சத அளவுக்கு வளர்வதற்காக அவர் நாளுக்கு 12 முறை நீர் ஊற்று மேலதிகமாக பராமரித்து வந்துள்ளார்.

மைக்கல் ஜோர்டன் என்று பெயரிடப்பட்ட இந்த பூசணிக்காயை வளர்ப்பதில் கடந்த ஏப்ரல் 10 தொடக்கம் பராமரிப்புக்காக 15,000 டொலர்களை செலவிட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 12ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## அப்புத்தளை பிரதேச சபை – 2024ம் ஆண்டிற்கான வரவு வரவு – செலவு இடாப்பு மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருப்பதாக அறிவித்தல்

அப்புத்தளை பிரதேச சபையின் 2024ம் ஆண்டிற்கான வரைவு வரவு-செலவு இடாப்பானது மக்களின் பார்வைக்காக அப்புத்தளை பிரதேச சபைக்குரிய தியத்தலாவ பொதுஜன நூலகத்தில் 2023.10.20 அன்றைய தினம் முதல் 2023.10.30 திகதி வரையில் காட்சிப்படுத்தும் பொருட்டு முன்வைப்பதாக அறிவிக்கிறேன்.

**கே.எம்.பி.சி. குலசேகர**
**செயலாளர்,**
**அப்புத்தளை பிரதேச சபை,**
**தியத்தலாவ.**

## புளத்சிங்கள பிரதேச சபை

## 2024ஆம் ஆண்டிற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

புளத்சிங்கள பிரதேச சபைக்கு 2024ஆம் ஆண்டிற்கான பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளை வழங்க விரும்பும் ஒப்பந்தக்காரர்களை/ வழங்குநர்களை/ உற்பத்தியாளர்களை 2023.1130 திகதி வரை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பான தகவல்களை 034-2283175 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம், **http://bulathsinghala.ps.gov.lk** எனும் இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் மற்றும் புளத்சிங்கள பிரதேச சபையின் முகநூல் பக்கத்தின் ஊடாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.

**லலனி தீபிகா உடுமுல்ல,**
**செயலாளரும், புளத்சிங்கள பிரதேச சபையின் அதிகாரங்களை, வேலைகளை மற்றும் கடமைகளை அமுல்படுத்தும் அதிகாரியும்.**
**பிரதேச சபை, புளத்சிங்கள**

## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2022.12.27 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி. டப்ளியு.பீ.ஜீ.எஸ்.என். பூட்டாவத்த அத்தாட்சிப்படுத்திய 2017.12.21 திகதியிட்ட ஈட்டு முறி இல.85 இன் பேரில் வட்டப்பொல, வெலகெதர, இல. 130/B/1 ஐச் சேர்ந்த திரு. ஹேரத் பண்டாரலாகே இந்திக சந்திமால் ஹேரத் என்பவரிடமிருந்து 2022.11.09 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 9,263,824.60 (ஒன்பது மில்லியன் இருநூற்று அறுபத்து மூன்று ஆயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கு ரூபாய்களும் அறுபது சதங்களும்) அத்துடன் ரூ. 7,408,865.43 (ஏழு மில்லியன் நாநூற்று எட்டு ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தைந்து ரூபாய்களும் நாற்பத்து மூன்று சதங்கள்) மீது ஆண்டுக்கு ஆறு (06%) வீதத்தில் 2022.11.10 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. பிரசித்த நொத்தாரிசு திருமதி. டப்ளியு.பீ.ஜீ.எஸ்.என். பூட்டாவத்த அத்தாட்சிப்படுத்திய 2017.12.21 திகதியிட்ட ஈட்டு முறி இல.85 இன் பேரில் ரூ. 9,263,824.60 (ஒன்பது மில்லியன் இருநூற்று அறுபத்து மூன்று ஆயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கு ரூபாய்களும் அறுபது சதங்களும்) அத்துடன் 2022.11.10 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்கூறியவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய 19ம் பிரிவுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T. & H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கு இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கந்து பலாத்த கோரளை உடுநுவரயில் கிராம உடுநுவர பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைப் பிரிவில் வெலகெதர சேவகர் பிரிவில், பிரிவில், வெலகெதரயில் அமைந்த 'கொரகஹகொட்டுவவத்த' என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.பி. லங்சக்காரநாயக்க தயாரித்த 1997.02.25 மற்றும் 1998.10.06 திகதியிட்ட வரைபடம் இல. 2198இல் காணித்துண்டு இல. 1A என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, **வடக்கில்** கால்வாயும் **கிழக்கில்** கங்ஹத்தயிலிருந்து பிரதான பாதையும் **தெற்கில்** காணித்துண்டு IBஉம், **மேற்கில்** பாதையும் பரணபட்டியவிலிருந்து கடலாதெனிய வரை பிரதான பாதையை பிரிக்கும் எலயும் (ஓடை) எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் ஏழு தசம் இரண்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.2,பே7.2) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரங்கள், மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில C 401/123இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.
2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கந்து பலாத்த கோரளை உடுநுவரயில் உடுநுவர பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைப் பிரிவில் வெலகெதர சேவகர் பிரிவில், வெலகெதரயில் அமைந்த "கொரகஹகொட்டுவவத்த" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.பி. லங்சக்காரநாயக்க தயாரித்த 1998.10.06 மற்றும் 1999.02.25 திகதியிட்ட வரைபடம் இல. 2198 இல் காணித்துண்டு இல. 1B என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த **வடக்கில்** காணித் துண்டு 1Aயும் காணித்துண்டு, **கிழக்கில்** கங்ஹத்தயிலிருந்து பிரதான பாதை வரை பாதையும் தெற்கில் மானபெலே வத்தயும் **மேற்கில்** கொட்ட கும்புர எலயும் (ஓடை) எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் ஏழு தசம் இரண்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.2, பே.7.2) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரங்கள், மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் C401/124இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணிகள் அண்மையில் மீளாய்வு செய்து ஒன்றிணைத்து பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கந்து பலாத்த கோரளை உடுநுவரயில் உடுநுவர பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைப் பிரிவில் வெலகெதர கிராம சேவகர் பிரிவில், வெலகெதரயில் அமைந்த "கொரகஹகொட்டுவ வத்த" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.பி. லங்சக்காரநாயக்க தயாரித்த 2017.03.14 திகதியிட்ட வரைபடம் இல.8764 இல் காணித்துண்டு இல.1 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, **வடக்கில்** அகலயும் (கால்வாய்) **கிழக்கில்** கங்ஹத்தயிலிருந்து பிரதான பாதை வரை பாதையும் **தெற்கில்** மானபெலவத்தயும் **மேற்கில்** பரணபட்டியவிலிருந்து கடலாதெனிய வரை பிரதான பாதையும் கொட்ட கும்புர எலயும் (ஓடை) எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் பதிநான்கு தசம் நான்கு பேர்ச்சுகள் (ஏ.1, றூ.0,பே14.4) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரங்கள், மற்றும் சகலதும் ஆகும்.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**திருமதி. ஆர்.டபிள்யு.ஏ.எம்.பீ.எஸ். குமாரிஹாமி**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி,**
**பிலிமத்தலாவை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்






# பெறுகை அறிவித்தல்

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்**

DNCWS

## கேள்வி மனுக்கோரல்

